# பெரியஎழுத்து

# புரூரவச்சக்கிரவர்த்தி கதை

B.R.N. & SONS.
MADRAS.

உ

கடவுள் துணை

பெரிய எழுத்து

புகழேந்திப் புலவர் இயற்றிய

# புரூரவச்சக்கிரவர்த்தி கதை




## B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள் விலாச அச்சகம்,

சென்னை—1.

இதன் விலை] — [ரு. 1—00

ஶ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# புரூரவச்சக்கிரவர்த்தி கதை

## பாயிரம்

### பூர்வகதை காப்பு.

*கண்ணன் கழலிணை கண்ணினர் நற்றுணை.*

ஸ்ரீ மகாபாரதத்தில் ஆரண்யபர்வதத்தில் காமிய வனத்தில் வாசயாத்திரையாக வந்திருக்கின்ற விடத்தில் தேவாமிச புண்ணிய புருஷர்களாகிய பஞ்சபாண்டவர்கள் ராஜராஜனாகிய தர்மராஜா முன்னிலையில் ஸ்ரீ வியாசபகவானானவர் இவர்களுக்கு மனவிடுக்கங்கள் தீர்ந்து தீரமுற்று மனது சமாதானமாகும்படி நளோபாக்கியான முதலிய சில பாக்கியமான புண்ணிய சரித்திரங்களை சொல்லிக்கொண்டு வரும்போது இவர்கள் வம்ச கர்த்தாவாகிய சந்திரவம்ச புருஷசிகாமணியான புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய கிருபையாகச் சொல்லி அவர்கள் மனதை தேற்றினர்.

ஸ்ரீ வேதவியாசபகவானுடைய பிரிய சிஷ்யராகிய வைசம்பாயன மகாரிஷியினுடைய வாக்கியம். வாராய் பாரதவம்ச குலோத்துங்கனாகிய ஜெனமேஜெய மகாராஜனே! உனது பிரபிதாமகனாகிய பாண்டவோத்தமர்கள் குருகுலோத்தமனாகிய துரியோதன மகாராஜனுடைய கைதவங்களாகிய சூதுவஞ்சனையில் காலப்பிரகாரம் ஊழ்வினை வசத்தர்களாய் தங்கள் இராஜ்ய மகா சம்பத்து வைபவங்களைத் தோற்று ஒரு வனததிற் பிரவேசித்து வியாகூலப்பட்டுக் கொண்டிருக்கிற தருணத்தில் காவிகாம்பர தண்டு சமண்டலதாரியாகிய ஸ்ரீவேத வியாசரானவர் பாண்டவர்க ளிருக்கின்ற காமிய வனத்தில் வந்தபோது அவர் வரவைக் கண்டு எதிர்சென்றழைத்துவந்து சோடசோபசாரஞ் செய்து தங்களுக்கு

நேரிட்ட துன்பங்கள் யாவற்றையுஞ் சொல்ல, ஓ தரும நந்தனா! நடந்துவிட்டதை நினைத்து வருத்தப்படுகின்றவனும் இனி வரப்போகின்றதைக் கருதி மகிழ்கிறவனும் மனிதருள் பதரென்றும் தற்காலத்தி லனுபவித்து சஞ்சலத்துக்கு இடமாக விருந்தபோதிலும் அதனை நன்மையாக பாவித்திருக்கின்றவன்தான் புருஷோத்தமரென்றும் மனிதருள் தேவனென்றும் அதிசயப்படுமாதலால் உனக்குத் தெரியாத ஞாயமொன் றில்லையென்று நீதிகளைச் சொல்லிவிட்டுத் துரியோதனன் நீங்கள் வனவாசம்விட்டு நாடு வந்தபின்பு உங்கள் கருத்தின்படி நடவாதையால் உங்கள் கருத்தின்படி யுத்தஞ்செய்து நாடு முதலியவற்றைப் பெற்றுக் கொள்வதற்குச் சாம்பவமூர்த்தியை நோக்கித் தவம்புரிந்து அந்தச் சாம்பவமூர்த்தியின் கரத்திலிருக்கும் பாசுபதாஸ்திரத்தைப் பெறவேண்டும் அந்த அஸ்திரத்தைப் பெற்றால் துரியோதனனை லேசாக வெற்றி யடையலாம். அந்த அஸ்திரத்தைப் பெறத்தக்கவன் உங்களில் அர்ச்சுனன்றான். அவன்தான் தவத்திற்குச் செல்ல வேண்டுமென்று கூற, அருகிலிருக்கிற அர்ச்சுனனெழுந்திருந்து ஸ்ரீ வேத வியாசரை வணங்கிச் சொல்லுகிறான்.

சுவாமி தங்கள் திருவாக்கினால் என்னை தவத்திற்கு யோக்கியனென்று சொல்லப்பெற்ற பூசாபலமே பலம். தங்கள் திருவாக்கின்படி சாம்பவமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து பாசுபதாஸ்திரத்தை பெற்று வர பூரண கடாக்ஷம்வைத்து விடை கொடுங்களென்று கூற, ஸ்ரீ வேதவியாசர் அர்ச்சுனனை ஸ்நானஞ் செய்து வரச் சொல்லி அவன் காதி லொரு மந்திரத்தை யுபதேசித்து இந்த மந்திரத்தை யுச்சரித்து தவஞ் செய்து சாம்பவமூர்த்தியைக் கண்டு பாசுபதாஸ்திரம் பெற்று வரக்கடவதென்று பல ஆசி கூறித் தருமராஜனை நோக்கிச் சொல்லுகிறார் : ஓ தருமநந்தனா! உன் சகோதரனாகிய அர்ச்சுனன். சாம்பவமூர்த்தியை நோக்கி தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்று வருவான் சஞ்சலப்பட வேண்டியதில்லை; நீ அரசருள் சிறந்த அரச

ளுதலால் மனவருத்தப்படாம லிருவென்று சொல்லி விட்டு தருமரிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு தன் கருத்துக்கிசைந்த விடத்திற்குச் சென்றூர்.

பின்பு தருமராஜன் தன் சகோதரனை அருச்சுனனை பார்த்து, ஓ பார்த்திபா! சாக்ஷாத் விஷ்ணுசொரூபமாகிய ஸ்ரீ வேதவியாசர் சொல்லிய கட்டளைப்படி தவத்திற்குச் செல்லென்று அனுப்ப, அருச்சுனனுனவர் சாம்பவமூர்த்தியை நோக்கி மகா கொடுமையாய் தவஞ்செய்ய அதற்கு சாம்பவமூர்த்தியானவர் மன திறங்கி வந்து உனக்கென்ன வரம் வேண்டியதென்று கேட்க, அர்ச்சுனனுனவன் என் பகைவரான துரியோதனுதிகளை ஜெயிக்கும்படி பாசுபதாஸ்திரம் கொடுக்க வேண்டுமென்று கேட்க, சாம்பசிவமூர்த்தியானவர் அருச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் இன்னும் அனேக வரங்களையுங்கொடுத்துவிட்டு பார்வதிசமேதனுக கயிலாயத்திற்குச் சென்றனர். பின்பு இந்திரனுனவர் அருச்சுனன் தவஞ் செய்துக் கொண்டிருந்த வனத்திற்கு தன் பரிசனத்தோடு வந்து அருச்சுனனை அழைத்துக் கொண்டு பொன்னுலகத்திற் பிரவேசித்து தேவர்களுக்கு அருச்சுனனுடைய பிரதாபத்தை தெரிவித்து தெய்வசிங்கார கொலுமண்டபத்தில் ஒளிரும் நவரத்தின சிங்காதனத்தில் வீற்றிருக்கும்படி மகுடத்தை யெடுத்து ஜெயவிஜயபவாவென்று பல ஆசிகள் கூறி அர்ச்சுனன் சிரசில் தரித்துக் கிரீடி கிரீடி யென்று மூன்றுதரந் தன் வாயாற் சொல்லி பலவாறு வாழ்த்தி அருச்சுனனைப் பார்த்து, ஐயா புத்திரசிகாமணியே! எனக்கொரு வரங் கொடுக்க வேணுமென்று கூற, அருச்சுனனுனவன் பிதாவை வணங்கி, என்னுல் தங்களுக்கு வரும் பெருஞ் செல்வ மென்ன விருக்கின்றது. அதை திருவுளங்களித் துரைத்தால் செய்கிறேனென்று கூற, இந்திரனுனவன் ஐயா அருச்சுனு! திரிலோகத்தையுந் தத்தளிக்கச் செய்கிறவர்களாதலால் அவர்களுக்கு நிவாதகவசரென்று நாமம்பூண்ட அவர்களை நீபோய் ஜெயித்து வரவேணுமென்று கூற, அருச்சுனனுனவன் அதற்கு சம்மதித்து அப்படியே ஆகட்டுமென்று புறப்பட்டு, நிவாத கவசகர்

ளிடத்திற்குப் போய் அவர்களை ஜெயித்து இந்திரலோகத்திற்கு வர, தேவர்கள் பல ஆசிகள் கூறி, தாங்க ளரிதிற்பெற்ற திவ்வியாஸ்திரங்களை கொடுத்து, தேவ சிங்காதனத்திலிருந்து அருச்சுனன் இந்திரனைப் பார்த்து, என்சகோதரர்களைப் பிரிந்து நெடுநாளாயிற்று ; நான் நாடிவந்த பொருளை யடைந்து என் சகோதரர்களுக்குத் தெரியாதவர்கள் வருத்தம் நீங்கி, மகிழ்வுற விடை கொடுத்தால் செய்கிறேனென்று கூற, இந்திரனுனவன் நீ இன்னஞ் சிலகாலமிருந்து தன்னுடைய பேடிரூபத்துக்குத் தகுந்தபாவை சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளச்சொல்லி, கட்டளையிட்ட பின்பு உரோமசன்மரை யழைத்துச் சொல்லுகிறான் ; ஓ முனிநாதா! மண்ணுலகத்திற் சென்று, வனத்திலிருக்குந் தருமராஜன் முதலான நால்வரையுங் கண்டு, அருச்சுனன் தவத்திற்குச் சென்றது முதல் தேவ சிங்காதனத்திலிருக்கிறபரியந்தம் நடந்த சரித்திரத்தை எடுத்தோதி அவர்களுடன் சில நாளிருந்து தானும் அருச்சுனனை யழைத்து வந்து தருமராஜனிடத்திற் கொண்டுவந்து விடுகிறேன் நீர் மண்ணுலகத்திற் செல்லுமென்று கூற, உரோமசன்மர் விடைபெற்று மண்ணுலகத்திற்குவந்தார். இங்கே தருமராஜன் முதலான நால்வரும் பாஞ்சாலியுஞ் சாம்பவமூர்த்தியை நோக்கி, பாசுபதாஸ்திரம் பெற்று வர வேணுமென்று போனவன் வரவில்லையேயென்று வியாகூலப்பட்டுக்கொண்டிருக்கிற தருணத்தில் காவிகாம்பர தண்டுகமண்டல தாரியாகிய உரோமசன்மர் மண்ணுலகத்தை யடைந்து ஐவரிருக்கிற காமியவனத்திற்கு வந்தார். நெடுந்தூரத்தில் வருகிற உரோமசன்மரைப் பார்த்து திடுக்கென் றெழுந்து எதிர்கொண்டு போய் உரோமசன்மருக்கு சாஷ்டாங்கமாக தெண்டனிட்டழைத்து வந்து தர்ப்பாசன மளித்திருக்கச் சொல்லி சோடசோபசாரஞ்செய்து வணங்கி எழுந்தெதிர் நின்று ஓ மாதவ சிரேஷ்ட சிலாக்கிய மகானுபாவா ! நாங்கள் செய்த தவப்பயனோ? தங்கள் திருவடி தரிசனங்கிடைத்தது எங்கள் தவப்பயனென்று பலவாறு துதித்து நிற்கும்போது உரோமசன்மர் மகிழ்ந்து ஐவரையும் ஆதரித்து பல ஆசிகள் கூறி, தருமன் முதலான நால்வரை

யும் இருக்கும்படி கட்டளையிட்டு தருமராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

நான் இந்திர லோகத்தி லிருக்கிறவன் என்பேர் உரோமசன்மர் இந்திரன் உம்மிடத்துபோய் அருச்சுனனுடைய க்ஷேமங்களை சொல்லிவரும்படி யனுப்பினாரென்று கூறிச் சொல்லுகிறார்; அருச்சுனன் தவத்திற்கு சென்றதுமுதல் இந்திரலோகம் போய்ச் சேர்ந்தவரைக்கும் சாங்கோப சாங்கமாகத் தெரிவித்து சில நாளைக்குப் பின்பு இந்திரன் அருச்சுனனை அழைத்துக்கொண்டு வருகிறபரியந்தம் என்னை உங்களிடத்திலிருக்க கட்டளையிட்டாரென்று கூறினார். இதைக்கேட்ட மாத்திரத்தில் தருமராஜன் முதலான நால்வர்கள் பேருனந்தத்தை யடைந்தவர்போல இன்ப மேலிட்டிருந்தனர்க ளிப்படி சிலகாலம் ஆரண்யத்தில் உரோமசன்மருடன் வாசஞ் செய்துக்கொண் டிருக்கும்போது ஸ்ரீ வேதவியாசர் பாண்டவர்களுடைய க்ஷேமங்களை விசாரிக்கவேணு மென்று கிருபைபுரிந்து வருவதைக் கண்டு தருமராஜன் எதிர்சென்றழைத்துத் தருப்பாசன மளித்துயிருக்கச் சொல்ல அப்போது வேதவியாசர் தருமராஜன் முகவாட்டத்தைக் கண்டு, (குறள்) 'அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங் கடுத்தது காட்டு முகம்' என்றதுபோ லுனக்கு முகவாட்டம் வருவானேன் தம்பி அருச்சுனன் தவசுக்கு போனவன் வரவில்லையென்கிற துயரத்தினால் முகவாட்டமா யிருக்கின்றதா என்று கேட்க, தருமராஜன் ஓ சுவாமி! தாங்களறியாத காரிய மொன்றுண்டோ? துரியோதனன் செய்த கொடுமையினால் நாங்கள் நாடுவிட்டு காடுறைந்து மாதா பிதாக்கள் சுகமுமிழந்து இந்த வனத்திலிருக்க எங்கட்கு விதி யிப்படி யிருந்ததென்று தருமராஜன் சொல்ல, ஸ்ரீவேதவியாசர், (குறள்) 'தோன்றௌிவுந் தெளிந்தான் களையுறலுந் தீராவிடும்பை தரும்' என்றதுபோல் மனத்தைரியமும் சௌரியமுமிடைவிடா திருந்தால் வந்த •யிக்கட்டு வந்து போகுமென்று கூற, அதற்கு தருமநந்தன ரந்த இக்கட்டுகள் எப்படி நீங்குமையாவென்று கேட்டதற்கு, ஸ்ரீவேத

வியாசர் ஆதியில் சந்திரவம்ச சிகாமணியாகிய புரூரவச் சக்கிரவர்த்தியானவர் பட்ட துன்பத்தைவிட நீங்கள் படுகிறதுன்பம் பெரிதல்லவென்று சொல்ல, அப்போது தருமராஜன் சந்திரவம்ச சிகாமணியாகிய புரூரவச் சக்கிரவர்த்தியான வரசர் அவருடைய சவிஸ்தாரத்தை ஆதியோடந்தமாக எங்களுக்குத் தெரியச் சொல்ல வேண்டுமென்று கேட்க, ஸ்ரீ வேதவியாசர் நீங்கள் சண்டையில்லாமல் சாவகாசமாகக் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினர்.

பாயிரம் - முற்றிற்று.

ஸ்ரீ

# புரூரவச்சக்கிரவர்த்தி கதை

கேளுந் தருமராஜனே! இவ்வுலகத்தைக்கடந்
தகாரமான இருளாகியது பிரவேசித்து நிகிலப்
பிராணிகளையும் மணவிடுக்கங்கள் செய்துகொண்டிருக்க
அவ்விருளை நீக்கும்பொருட்டு சகலஜென மனோரஞ்
சனமாகச் சந்திரபகவானானவர் உதயஞ்செய்து தனது
அமுத கிரகங்களால் மகா புருஷனுடைய கீர்த்தியைப்
போல் விண்ணு மண்ணும் விளங்க வியாபித்து யாவ
ருக்குஞ் சுகாநந்தங்களை யுண்டாக்குந் திவ்யகுணங்களை
யுடைய மகா கெம்பீரமான இந்தச் சந்திரவம்சத்திற்
ஜெனனஞ்செய்தி கீர்த்திகளையடைந்த புண்ணிய புரு
ஷர்களாகிய மகா ராஜாதிராஜர்களுடைய சத்ய தரும
சிலாதி நற்குணங்களையும் கீர்த்திகளோடுகூடிய பெரு
மிதங்களையு மவர்கள் சத் கருமங்களைச் செய்து சம்பா
தித்த விசேஷ புண்ணிய கதா சரித்திரங்களைச்சொல்லி
துதிக்கத் தொடங்கினால் இரண்டாயிரம் நாவுள்ள
ஆதிசேஷ் பகவானுக்கும் அரிதா யிருக்குமென்று
நினைக்கிறேன். ஆகையால், இந்தச் சந்திரவம்சக்கிரம
மெவ்விதமெனில்: திருப்பாற்கடலினிடத்தில் அனந்த
பணாமுக மண்டலங்களை யுடைத்தாகிய ஆதிசேஷ பக
வான்மீது அரி துயிலமர்ந்து பிரமானந்தசுக போகி
யாய்ச் சயனித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீ ஜெகந்நாத
ராகிய ஸ்ரீ ஆதி நாராயணமூர்த்தியினுடைய நாபிக்
கமல மலர்ந்து பிரமதேவனுண்டாய் அவருடைய
சிருஷ்டிக்குச் சகாயத் தக்ஷப்பிரஜாபதிக ளுண்டானார்
கள். இவர்களில் அந்த திரியென்னும் பிரஜாபதிக்கு
சந்திரபகவானுடைய சதுர்முகபகவானால் பிராமணர்
களுக்கும் விருட்சங்கள் முதலிய ஔஷதிகளுக்குந்
தீர்த்தப் பிரவாகங்களுக்கும் கோவினங்களுக்கும் ஈஸ்
வரனாகியும் எக்கிய யாக சத்கருமங்களுக்கும் பிரபுவா
யிருக்கும்படி நியமித்து கிரக நட்சத்திராதிபத்திய

அதிகாரங்களையுங் கொடுத்தனர். பின்பு இந்த தாரா விபுவாகிய அமுத்திரனுனவர் தாராதேவியைச் சேர்ந்து நவக்கிரகங்களி லொருத்தராகிய புத பகவானைத் தந்தனர். வாராய் அரசனே! இந்த புதனுனவர் இந்த பூமண்டலத்திற்கு விபுவாய வைவதவமனுவான வர் அதிகாரஞ் செலுத்திக் கொண்டிருந்து தமக்கு வம்ச பரம்பரையுண்டாக அவர்களா லிப்பூமி யெங்கும் அரசுசெய்து அதிகாரஞ் செலுத்த செய்ய வேணு மென்று மனதில் நினைத்து ஸ்ரீ வசிஷ்டரிடத்திற்குச் சென்று அவருக்குச் சாஷ்டாங்கமாக தெண்டஞ் சமர்ப் பித்து அவரால் ஆசிகள்கூற ஓர் ஆசனத்திலிருந்து அவருடன் தமது கருத்தைச் சொல்லி அவரனுக்கிர கத்தினுல் மித்திரா வருண தேவதைகளை உத்தேசித்து உபாசித்து யாகஞ் செய்யச் சொல்லி ஆக்யாபித்தார். இந்த மனுவானவர் அப்படி தமதிருப்பிடம் வந்து சேர்ந்து அத்தேவதைகளை உபாசித்துக் கொண்டு யக்கியதீட்சதர்களாகிய உத்தமபிராமணர்களையழைத்து புத்திர சந்ததியைக் கோரி மைத்திராவருண யாகஞ் செய்யத் தொடங்கினுர்.

அக்காலையில் தாமும் தமதுபத்தினியும் விரத நிஷ் டர்களாய்த் தீட்சை வகித்திருந்தனர்க ளந்தயாக தர்மம் நிறைவேற வருகின்ற தருணத்தி லிம்மனுபத்தினியான வள் அந்த யக்கிஹோதாவைப் பார்த்து ஐயரே என் மனமானது பெண் சந்ததியாக உண்டாக வேணு மென்று மிகவும் ஆவலாகக்கோறுகின்றது ஆகையால், நீ கிருபைசெய்து அப்படியே யோசிக்கவேணுமென்று பிரார்த்தித்த மாத்திரத்தில் அவரும் அப்படியே மந்தி ரஞ் சொல்லி யோசிக்க அந்த யாகத்தில் இளா தேவி என்னும் ஒரு பெண் குழந்தை யுதித்தனள். அப்போது மனுவானவர் பார்த்து மனது திருப்தி யில்லாமல் பெண்ணுக ஜெனிக்க வேண்டிய காரண மென்னவென்று மனங்கலங்கி சீக்கிரமாக வசிஷ்ட பகவானிடத்திற்குப் போய் வாரீர் குரு சிகாமணியே! புத்திரனை யபேக்ஷித்து யாகஞ் செய்து பெண்ணுதிக்க வேண்டிய காரணமென்னவோ வென்று சிந்தனைசெய்ய

அவரும் பிரமநிஷ்டராயிருந்தும் யக்கிய ஹோதாவினு டைய மந்திர பேதத்தினுல் உதித்த தென்று அறிந்து இம்மனுவுக்கு மனந்தெளிய அறிவித்து சிந்திக்கவேண் டாம் பெருமையுட னிருமென்று சொல்லி தானும் அம்மனுவும் அந்த எக்கிய சாலேக்கு வந்து புருஷ மந்திரஞ் சொல்லி யுபாசித்து ஆதி புரிஷராகிய ஸ்ரீ ஹரியை தியானித்த மாத்திரத்தில் அந்த யாகத்தில் ஸ்ரீ ஹரி பிரசன்னரா யந்த பெண் குழந்தையை ஆண் குழந்தையாக விளங்கச் செய்து அந்தரத்யான மாய்விட்டனர். பின்பு அந்த மனுவானவர் மிகவும் மனங்களித்து அநேக உத்தமதான தருமங்களேச்செய்து அக்குழந்தையை நாளுக்குநாள் சுகமாக அபிவிருத்தி அடையச்செய்து சுத்தியு மன்னனென்று நாமகரணஞ் செய்து சகல கலேக்கியானங்களேயும் தனுர்வேதாப்பியா சங்களேயுஞ் செய்வித்து சுத்தவீர தருமசிகாமணியா யிருக்கக் கண்டு பிரண்டு பிரதிஷ்டானபுர மென்று ஒரு பட்டணத்துக்கு அதிபதியாக பட்டாபிஷேகஞ் செய்த னர் அந்த சுத்தியுமன மகாராஜா சத்திய தருமநீதிகள் தவருமல் அரசு செலுத்தி வருங்காலத்தில் ஒருநாள் வனத்தில் வேட்டைக்குப் போகக் கருதித் தாமும் தமது மந்திரிகளும் ரதகஜ துரகபதாதி நான்குவித சேனுசமூகத்தோடு வனத்தில் பிரவேசித்து ஆரண் யங்க ளெல்லாந் திரிந்து நானுவித அஸ்திர சஸ் திரங்களினுல் விசித்திரமாகிய வேட்டைக ளாடிக் கொண்டு வெகுதூரஞ் சஞ்சரித்துச் சந்தோஷித்துக் கொண்டு இவ்வரசன் முதலிய யாவருந் தங்களூழ் வினையைக் கடக்கச் சக்தியற்றவர்களாய் ஸ்ரீ அம்பிகா தேவி சதாசம்பந்தமான குமாரவனத்திற் பிரவேசித் தனர்கள். வாராய் அரசனே! அவ்வனத்தில் நுழைந்த மாத்திரத்தில் இந்த சுத்தியுமன மகாராஜன் முனதான் அந்த யாகத்திற் சென்மித்த சிவரூப தருமமாகிய இளா தேவி உருவமானது தோன்றி பெண்ணுருவாய் விட் டனர். தன் மந்திரிகளும் அவ்வனத்தில் நுழைந்து சதுரங்க சேனேகளும் பெண்ணுருவங்களாய் விட்ட னர் சிலர் புறம்பா யிருந்தவர்கள் கண்டு மிகவும் வியா கூலப்பட்டு நகரம் போய்ச் சேர்ந்து அவ்விடத்தி

லுள்ள ராஜபத்தினிகள் முதலிய யாவருக்கு மறிவித்தனர்கள் அவர்களுடனே மனு முதலிய வசிஷ்டர்களுக்குத் தெரிவித்து விருத்தி நிஷ்டங்களை யாசரித்துக் கொண்டிருந்தனர்கள். வாராய் ராஜனே! இவ்விடத்தி லிருந்த சூரயுமனஸ்வரூப இளாதேவியானவள் தானே ராஜகன்னிகை யாகவும் மற்றவர்க ளெல்லாந் தனக்கு தோழிமார்களாகவும் விளங்கச் செய்வதுந் தவிர்வதுந் தோற்ருமல் தராந்தசித்தர்களாய் சஞ்சரித்துக்கொண்டு புத பகவானுடைய ஆசிர்மத்தில் வந்து சேர்ந்தனர்கள். இந்த இளாகன்னிகையும் தனது தோழிமார்களும் அவ்வனத்திற் சஞ்சரித்துக் கந்தமூலபலாதிகளை பட்சித்துக்கொண்டு, நாத னில்லாதவர்களாய்ப் பகற் பொழுதெல்லாம் மகா விருட்சங்களின் நிழல்களிலுஞ் சோலைகளிலுந் தங்கியிருந்து இரவு பகலில் சிம்ம சாப சார்த்துலாதி மிருகங்களுக்கஞ்சி புத பகவானுடைய பர்னகசாலையில் வந்து வாசஞ் செய்துக் கொண்டிருந்தனர்கள்.

அந்த புத பகவானனவர் நவக்கிரகங்களில் தாம் ஒரு ஆதிபத்தியம் வேண்டி தவஞ்செய்து நிஷ்டையிலிருந்து ஒருநாள் நிஷ்டைகலைந்து தெய்வீகமாகத் தனது ஆசிர்மத்தை யடைந்திருக்கின்ற இந்தச் சுந்தரவதிகளான பெண்களைக்கண்டு ஆச்சரியமானவராய், இந்திரியங்கள் சலித்து உள்ளங் கலங்கி இவர்களை நயமாக அழைத்து, வாரும் சுகுமாரவதிகளாகிய கணிகைமார்களே! நீங்கள்யார்? இவ்விடத்திற்கேன் வந்தீர்கள்? உங்களுக்கு வேண்டுவ தென்னவென்று அன்புடனே வினவ, அவர்களும் தங்கள் விருத்தாந்தங்களைச் சொல்லி நாதனற்றவர்களாய் நிலைமையில்லாமல் அலைந்துக் கொண்டிருக்கிறோமென்று வியாகூலமாக சொல்லிக் கொள்ள அவரும் தயாளுவா யவர்களை யாதரித்து இளாக் கன்னியைத்தான் காந்தருவமாய் அங்கீகரித்து சிலகாலம் அவளுடன் கூடிச் சுகபோகங்களை யனுபவித்து மகா குணசாலியான புரூரவநாமதேயமான ஒரு புத்திரனைப் பெற்று அந்த புத்திரனுக்கு சகல கலைக் ஞானங்களையும் தனுர் வித்தியாப்பியாசங்களையும் கற்பித்து மிகவும் யோக்கியனுகச் செய்து பின்பு எப்

போதும்போலத் தவஞ்செய்யத் தொடங்கி தவநிஷ்டை யடைந்து இவர்களை விட்டுக் காலசக்கிரத்தில் பூமண் டலாதிபதி பத்தியத்தை யடைந்தனர்.

அதன் பின்பு இந்த இளாதேவியானவள் தனக் கொன்றுந்தோற்றுமல் வியாகூலத்தை யடைந்து பூர்வ கியாபகங்கள் தோற்ற மகாபுத்திசாலியான புரூரவ புண்ணிய புத்திரனை யழைத்துக்கொண்டு, ஸ்ரீ வசிஷ்ட பகவானுடைய ஆசிர்மத்துக்கு வந்து அவருக்கு சாஷ் டாங்கமாகத் தண்டம்பண்ணி தனது விருத்தாந்தங் களைச்சொல்லி வியாகூலப்பட்டு யெங்களையே இரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்ற தரு ணத்தில் வைகதனுமனுவு மிந்தப்பெண்ணுகிய சுத்திய மனவருடைய பத்தினிகளும் அவ்விடம் வந்து இவர் களைப் பார்த்து சிந்தாக்கிரந்தர்களாய் விசனப்பட்டு ஸ்ரீ வசிஷ்டபகவானை பிரார்த்தித்த மாத்திரத்தி லவரும் மிகவும தயாபரிபூரணனுய் மகா யோக நிஷ்டையை வகித்து ஸ்ரீ மகதேவனுகிய பரமசிவனைத் துதித்து தியானஞ் செய்ய அப்பரமசிவனுனவர் மிகுந்த கிருபை யுடனே இருவருக்கும் பிரசன்னமாகத் தோற்றி நின்ற னர்.

அப்போது ஸ்ரீ வசிஷ்டரும் இம்மனுவும் ராஜ பத்தினிகளும் இந்த இளாதேவியும் ஆனந்தத்தை யடைந்து துதித்து, ஆ எங்கள் கடவுளே எங்கள் மனோரதங்களீடேற இந்த இளாதேவியினுடைய பெண்ணுருவ தோஷம் நீங்கி ஆணுருவாகி சுத்தியும் அஸ்வரூபத்தை யடையுப்படி வரந் தந்து இரட்சிக்க வேணுமென்று பிரார்த்தித்த மாத்திரத்தில் பரமசிவனு னவர் மிகவும் கிருபாநிதியாய் வாரீர் ஸ்ரீ வசிஷ்டரே! உமது தவத்திற்கு மனமூவந்து ஓர் மாதமளவு மெப் போதும்போல சுத்தியும்மனன் ஆணுகவிருந்து இப் பூமியை பரிபாலனஞ்செய்து இராச்சிய சுகபோகங்களை அனுபவிக்கக் கடவன் அந்த வனத்திற்கு ஸ்ரீ உமா தேவியினுடைய சாபமானதினுலந்த திவ்வியவாக்குப் பங்கமில்லாமல் மாசாந்தரத்தில் மூன்றுநாள்பெண்ணு ருவத்தை யடைந்து அந்த சாபத்தை யனுபவிக்கக் கட

வதென்று வரங்கொடுத்து இரட்சித்துயாவருந் துதிக்க அந்தரத்தியானமாய் விட்டார்.

பின்பு ஸ்ரீ வசிஷ்டபகவானுடைய அனுகூலத்தினால் யாவரும் பிரதிஷ்டானபுரம் வந்து சேர்ந்து இந்தச் சுத்தியுமன மகாராசனை ராச்சியாதிகாரத்தில் ஸ்தாபித்து இராச்சிய சுகபோகங்களை வெகுகால மனுபவித்துத் திருப்தி யடைந்து உத்தவன் செய்வன் விமலமன் என்று சொல்லப்படுகின்ற மூன்று நற்குணப் புண்ணிய புத்திரர்களைப் பெற்றும் அந்த புத்திரர்கள் விர்த்தி யடைந்து சகல வித்யாபார பராக்கிரமசாலிகளாய் விளங்கக் கண்டு இவ்வரசனுன அவ்வரசாட்சிக்கு உட்பட்ட ராச்சியங்களை மூன்று பாகமாகச் செய்து அவர்களை நியமித்து இம்மூன்று பிள்ளைகளுக்குங் கொடுத்து பட்டாபிஷேகமுஞ் செய்து அவர்களை நியமித்துவிட்டு தான் ஆண்டுக்கொண்டிருந்த பிரதிஷ்டானபுரத்தை இந்தப்புரூரவ பட்டமுங் கட்டிவிட்டு நிலைநிறுத்திச்சறுவகாமியர் தங்களில் நின்று மனம்வெறுத்து யாவரையுமழைப்பித்து புண்ணிய நீதிகளையு மிராச்சிய தருமங்களையும் பிரஜா பரிபாலன விதிகளையுஞ் சொல்லி இவர்களிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தனது பூர்வ கர்மவினைகள் நசித்து புண்ணிய லோகங்களையுடைய மனதை திடப்படுத்தி யடைந்து தவஞ்செய்ய வனத்திற் சென்றனர்.

வாராய் தருமராஜனே! இந்தப் புரூரவன் தனது சவுந்தரிய புஜபல பராக்கிரமமாகச் சுத்தவீர தருமகுணங்களாலும் மகாராஜ சுபலட்சணமும் கம்பீரமும் சத்தியமும் தருமமும் ராஜநீதியும் மகாகுணங்களினுலும் தான் சக்கிரவர்த்தியாய் சகல வைபவங்களையும் ஒரு தனிக்குடை நிழலில் செங்கோல் நடாத்தி திக்குவிஜயங்கள் செய்து மகா ராஜாதிராஜாக்களெல்லாந் தனக்கு கப்பங்கள் செலுத்தித் தன்னுக்கினையிலிருக்கும்படி யிசைவித்து விஜயசாலியாய் ராஜபோகங்களை யனுபவித்துக் கொண்டு மகா கீர்த்தியுடன் வாழ்கின்ற தருணத்தில் இந்திரலோகமாகிய சுவர்க்க மகாசபையிலே தேவேந்திர னுனவர் திரிலோக வதிகாரங்களைச்

செலுத்தி தேவ அரம்பையர்களாகிய ரம்பை ஊர்வசி திலோர்த்தமை முதலிய அப்சர ஸ்திரீகளினுடைய தெய்வ நடன மதுரமான இசைகளைக் கேட்டு நேத்திரோச்சவமாக நடனங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது சமஸ்தான தேவதைகளும்வந்து நிறைந்திருக்கின்ற அந்த சபைக்கு மித்திரவருணனென்ற தேவதைகள் வந்தனர்கள். அப்போது சகலமான கந்தருவர்களும் ஊர்வசியைத் தவிர மற்ற அரம்பையர்களும் மரியாதை செய்ய அங்கீகரித்துச் சந்தோஷித்தனர்கள். இந்த ஊர்வசியானவள் நடனஞ் செய்து அலுத்து ஆயாசந்தீர்த்துக்கொண்டிருக்கும் போது இவர்கள் வந்தமையைக் கண்டிருந்தும் தனது ரூபசவுந்தரி மாதவத்தினாலும் ஊழ்வினைப் பயனாலும் பார்த்து பாராதவளைப்போ லிருந்தபடியினாலே இவர்களுக்கு கோபம் வந்து அந்த ஊர்வசியைப்பார்த்து நீ சிலகாலம் மனுஷரூபத்தை யடைந்து மனிதர் போகங்களை யடையக் கடவாயென்று சபித்தனர்கள். உடனே அந்த ஊர்வசியானவள் வியாகூலத்தை யடைந்து சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, சர்வ லோகத்திற்கும் சர்வ பிராணிகளுக்கும் உபகாரியுமான ஸ்ரீ நாரத பகவானனவர் இந்தச்சபைக்கு வந்து பூலோகத்தில் மகா குணவந்தராகிய புரூரவனையும் மகா லக்ஷணங்களோடுங் கூடிய இருவருடைய சவுந்தரியாதி விசேஷ கம்பீரங்களையும் சொல்லிக்கொண்டு யாவருஞ் சந்தோஷித்திருந்தார்.

பின்பு சபைகலைந்து அவரவர்கள் தங்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தனர்கள். இந்த ஊர்வசியானவள் ஸ்ரீ நாரதரால் தேவசபையில் கேட்டுக்கொண்டிருந்த கியாபகத்தை நினைத்து சாபகாரண மோக்ஷத்தை யடைந்தவுடனே பூலோகத்தில் வந்து சஞ்சரித்து இந்தப் புரூரவச்சக்கிர வர்த்தியினுடைய ஏகாந்த தரிசனத்தைக் கோரிக் காத்திருந்தனர்.

வாராய் பாண்டுகுலாதிபனே! புரூரவச்சக்கிரவர்த்தியானவர் ராஜநீதிகளை செலுத்திக்கொண்டு வருங் காலத்தில் ஒருநாள் தனது உத்தியான வனத்திற்கு

வந்து சுகித்து மனேவுல்லாசமாய் ஏகாந்த சீலராயும் உலாவிக்கொண்டு அந்த புஷ்பங்களின் விசித்திரங்களை யும். பார்த்து அதன் பரிமளங்களை யனுபவித்துக் கொண்டிருக்குங் காலையில் ஊர்வசியானவள் நாரதபக வான் வசனப்படிக்கு பிரத்தியட்சத்தி லவருடைய ஸ்வ ரூபலாவண் யாதிசயங்களைக்கண்டு மனமகிழ்ந்து பின்பு அதிமோகத்தை யடைந்து எதிரில்தோற்றி நின்றனள் அப்போது இவ்வரசன்கண்டு ஆச்சரியமானவனும் மனந்திகைத்து, இந்தக் கன்னிகையானவளாரோ? தெரியவில்லை. இவளுடைய சவுந்தரிய ஸ்வரூபாதிசயங் களை யோசிக்குமளவில் தேவ அரம்பையோ ! மோகினி தேவதையோ ! மன்மதனுக்கொரு மங்கல தீபமோ ! மின்னற்கொடியோ ! புட்பபஞ்சபாணங்களினுருவமோ வென்று மோகித்து மனங்கலங்கிச் சிலநேரத்தில் தனது சித்தத்தை நிலைநிறுத்தினவராய் திவ்ய கன்னி கையே ! நீ யார் ! எங்கிருந்து வந்தனை? என்னெதிரில் தோன்றி நிற்கவேண்டிய காரண மென்னவென்று வினவ. இந்த ஊர்வசியானவள் வாரும் மகாராஜனே ! நான் மற்றொருவரு மல்ல தேவ சபாரஞ்சனவதியாகிய ஊர்வசிதான் நான் உமது மகாகுணங்களை நாரத முனிவரால் கேள்விப்பட்டு மிக ஆவலோடும் வந்தன னென்றனள்.

அப்படியானல் நாமிருவருங் கூடிச் சுகானந்தானு பவங்களை அடைவதற்குப் பிரமனுடைய சங்கல்பமே யாகுமென்று நினைக்கிறே னென்ற னத்தருணத்தில் வாரீர் சக்கிரவர்த்தியே ! எனக்கோர் விரத நிதியுண்டு அதென்ன வெனில்: எந்த காலத்திலாவது உம்மை விட்டுப் பிரிந்து நீங்கி விடும்படியாக விருக்கும் அப் போது நீர் மனவருத்த முறாமல் எனக்கு செலவு கொடுக்க வாக்குத்தத்தஞ் செய்வீரானல் நாமிருவரும் காந்தருவமாகக் கூடிக்கலந்து சுகபோகங்களை யனுப விக்கத் தகுதியாயிருக்கு மென்று பிரார்த்திக்க அவ்வித மாகவே சம்மதித்து அவருஞ்சேர்ந்து சுகங்களை யனுப வித் தரசனுடைய அரண்மனையில் பிரவேசித்தான். இராஜதானியாகச் சகல ராச்சிய வைபவாதிசயங்களை

யடைந்து மாடமாளிகையைச் சேர்ந்த மேற்கட்டு விதான்களாக உப்பரிகைகளின்மீது சுவர்ன மயமாகிய புஷ்ப சயனங்களோடுங் கூடிய சுகசப்ரகோடி மஞ்சங் களிடத்திலும் புஷ்ப வனங்களிலும் புண்ணியநதி தீரங்களிலும் குளிர்ந்தசோலைகளிலும் அங்கங்குபொன் னூசல்களிலும் இரத்னசாலைகளிலும் பர்வத சிகரபர தேசங்களிலும் இதுமுதலிய மனோரம்யமானசுகுமாரன் தனங்களில் தங்களிஷ்டப் பிரகாரம் மதன சரித்திரத் தில் சொல்லிய விதிப்படி சாஸ்திரத்திலும் வழுவில் லாமல் விசித்திரமாக தேவகாந்தருவ கின்னராதி லட் சண யுச்சமாயும் சிம்மசாப சார்த்தூல சகோதர சக்கிர வாதி பசு பட்சிகள்போல லட்சணயுத்தமாயும் இன்னு மனேக விசித்திரமாகவு மிரவுபகல் தோற்ருமல் சில காலம் மதனும் ரதியும்போல கேளிவிலாசக் கிரீடைக ளாகச் சுகங்களை அனுபவித்திருந்தார்கள்.

வாராய் தருமநந்தன ! இவ்விதமாக ஏகாந்தங்களை அனுபவித்துக்கொண் டிருக்கின்ற காலத்தில் தேவ ரம்பையான இந்த ஊர்வசியானவள் தனது ஏகாந்தமா கிய மனேபீதியி லிந்தப் பூமியில்வந்து வெகு நாளாச் சுது அந்த தேவதைகளின் சாபமும் நிறைவேறி வரு கின்றது. அரசு சேனபதி யடையவில்லை. இதற்கென்ன வுபாயமென்று சிந்தித்து ஒரு கந்தருவ வித்தியா மாயை யினல் இரண சுந்தரமாகிய ஆட்டுக் குட்டிகளைக் கற் பித்து மிகவும் வெகு போகத்தோடு காரியார்த்த மாய் வளர்த்துக்கொண் டிருந்தனள் சுவர்க்க லோகத் தில் தேவேந்திரனுனவர் ஒருநாள் கொலுவிருக்குஞ் சமயத்தில் ஊர்வசியை நினைத்து வெகு காலமாச்சுதே இன்னமேன் வரவில்லை; தேவசபை ரஞ்சிக்கவில்லை யென்று கந்தருவாளை யழைத்து அவளெங்கிருந்தா லும் மறுநாள் கொலுவுக்கு அழைத்துக் கொண்டு வாருங்களென் ருக்யாபித்தனர். அந்த கந்தருவர்கள் ஊர்வசிக்கு ஏகாந்தமா யறிவித்து ஒருநாளிரவில் வந்து இவள் வளர்த்துக் கொண்டிருந்த சிறு மிருகங்களை அவிழ்த்துக் கொண்டுபோக இந்த ஊர்வசியானவள் அந்தச் சக்கிரவர்த்தியினுடைய கையணைக்குள் ளிருந்த

படியே முறையோ முறையோவென் றரற்றி வாராய் நாதனே! நான் மிகவும் அன்புடன் வளர்த்துக்கொண் டிருந்த மகாசுந்தரமாகிய சிறுமிருகக்குட்டிகளை ஆரோ திருடிக்கொண்டு போய்விட்டனர் பாரும் பாருமென்று முறையிட்டுச் சொல்லியு மவ்வரசனுனவர் இவளுடைய மோக பரவசமான மதோன் மத்தனுயும் இவளுடைய போகங்களில் வெறுப் பில்லாதவனுயும் இதை எள்ளள வும் லக்ஷியஞ் செய்யாமலிருக்கக் கண்டு ஆ நாதனே! இதென்ன அனியாயம் உமது அரசாட்சி நீதிதப்பிற்றே உமது இராச்சியங்களில் சோரர்கள்மிகுந்திருக்கக் காரண மென்ன நீதியுள்ள வரசனுகிய நீர் இப்படிக்கொத்த சாமான்ய காமியபோகத்தில் சிந்தையை லயிக்கச் செய்து ஸ்மரணைதப்பி யிருக்கின்றதனுல் அல்லவா உமதரண்மனையிலேயே திருடர்கள் பிரவேசித்தார்கள்.

இதனுல் உமதாண்மையும் ஆக்கினையும் பொய்த்த தென்று நினைக்கின்றேனென்று பலவாருக சிந்தித்துக் கூக்குரலிட்ட மாத்திரத்தில் அந்த சக்கிரவர்த்தியினு டைய செவிக்கு நாராசம்போலத் தோன்றி பக்கத்தில் வைத்திருந்த உடைவாளைக் கையிலேந்தி அலங்கோல மாக ஓடி அக் கள்ளர்களை கண்டு துரத்தி சம்மரிக்கப் போனவிடத்தி லவர்களும் மிருகங்களை விட்டுவிட்டு ஓடிப்போய் மறைந்தார்கள். உடனே அம்மிருகங்களைக் கொண்டுவந்து இடஞ்சேர்த்து வஸ்திரவீனராய் வரும் போது ஊர்வசியானவள் கண்டு கண்களை மூடிக்கொண்டு ஆ! அரசனே யென்று அப்புறம் போய் மறைந்து மாய மாயினள். அந்த சமயத்தில் இந்தப் புரூரவச்சக்கிரவர் த்தியானவர் தமக்குப் பிரிந்த மாத்திரத்தில் அந்த ஊர் வசியைக்காணுமல் பயித்தியம் பிடித்தவனைப்போல மதி மயங்கி பூமியிற்படுத்துப் புரண்டு துக்கித்து மூர்ச்சித்து தெளிந்து ஆ என்பிரியமுள்ள மோகனுவதியான பிராண நாயகியே! என்று பித்தம் பிடித்தவன்போல தேடித்திரிந்துகொண்டு எவருங் காணுமல் ஏங்கி பாத வித்து சரஸ்வதி புண்ய தீர்த்தத்திற்கு வந்து சேர்ந்து அவ்வன மெங்குந் தேடிக்கொண் டிருந்தனன்.

வாராய் தருமபூபாலனே! சரஸ்வதிநதி தீர்த்தத்தில் அந்த தேவகன்னிகையான ஊர்வசியானவள் இந்த சக்கர வர்த்தியினுடைய துக்கத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு எதிரில்வந்து தோன்றி நின்றனள். அப்போது அவ்வரசர் கனவிற்கண்ட பொருள் கையிற் கிடைத்தாற்போலச் சந்தோஷித்து மிகவும் முகமலர்ச்சியுடன் அந்த ஊர்வசியைப் பார்த்து, ஆ பிராண நாயகியே! என்னை யேன் பிரிந்து வந்துவிட்டனை இது உனக்குத் தருமமா? நாமிருந்த அன்னியோன்னியங்களை மறந்து மரியாதையும் உரிமையான வார்த்தைகளையுந் தவறலாகுமோவென்று பலவாறு அன்பாகமொழிகளைக் கூறி வியாகூலப்பட்டு இனிமேலாவது கிருபைவைத்து என்னை பிரியாம லிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அத் தேவரம்பையானவள் இவ்வரசனுடைய மோக பரவசமாகிய மொழிகள் யாவுங் கேட்டு ஒரு வார்த்தை சொல்லுகின்றனள். ஊர்வசியினுடைய வாக்கியம்: வாரீர் மண்டலாதிபதியாகிய புரூவச் சக்கிரவர்த்தியே! நீர் சகல தரும நீதிகளும் தெரிந்தவர்; இப்போது என்னிடத்தில் வைத்த மோகபரவசத்தினால் சொல்லுகின்றீரல்லது வேறல்ல, நான் தேவேந்திரன் ஆதீனமாகிய தேவஸ்திரீ உமக்குத் தெரியாத காரண வசத்தினால் இப்பூமியி லுமக்கும் எமக்கும் சம்பந்தம் நேரிட்டது என்னை நீர் காந்தருவமாக அங்கீகரிக்கும் போது நானுமக்குச் சொல்லவில்லையா? நீர் வஸ்திர ஈனராய் எந்தகாலத்திற் றோன்றுகின்றீரோ? அக்காலையிலுமக்கு மெனக்கும் பிரிய நேரிடுமென்று சொன்னதை மறந்துவிட்டீர். புருஷனாயிருந்து ஒரு ஸ்திரீயின் பொருட்டுப் புத்தியீனர்களாகிய மனுஷபசுக்களைப் போல சாமான்ய காமபோக விஷயமெவ்விதமெனின்: ஈனமில்லாத நினைவுகளும், அமுதமும் பாலுந்தேனும் கற்கண்டு கட்டியுங் கலந்தொழுகாநின்ற வார்த்தைகளும், தனக்கு நேரிட்ட நாயகன் மன்மதனைப்போலொத்தவனானபோதிலும் கையிற்றனமற்றுமல் தாரணமாக நினைக்கின்ற எண்ணமும் சார்வதா பிறர்பேரிலிச்சையும் விசுவாச ஈனகடின குணமுடையவர்களாய் நானனுபவிக்கின்ற புருஷனானபோதிலும் இதுகள் முதலிய

அநேக குண துரோககுண சாம்பிராச்சிய மடைந்திருக்கின்றவர்களுடைய போகசுகத்தை விரும்பி விவேகிகள் மன தழுந்தார்களென்பது நமது சித்தத்தில் நன்ருய்த் தெரிந்திருக்குமல்லவா. நானேவென்ருல் தேவதீனமே யல்லது வேறல்லவே நீரேன் வியாகூலப் படுகின்றீரென்று இத் தேவராகாத தாயானவள் பலவாறு தைரியங்களைச்சொல்லி இன்னுமோராண்டு சுகித்திரும் மறுபடி ஓரிரவில் நான் உமதிடத்திற்கு வந்து நற்குண சாலிகளான இலட்சுயணபுருஷ சந்ததிகளைத் தருகிறேன்; மனவருத்தப் படாமல் உதரண்மனையைச் சேருமென்று சொல்லி, அரசனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு சுவர்க்கத்திற்குப் போயினள்.

இந்தச் சக்கரவர்த்தியானவர் மிகவுஞ் சவுந்திரவதியான ஊர்வசியை யனுப்பி விட்டு இவனுடைய முகக்குறியினல் கொடும்பிணியாக நினைத்துக்கொண்டு தன தரண்மனையில் வந்துசேர்ந்து ஒரு வருடத்தையும் ஒரு மகாயுகமாகக் கழித்து அவள் சொல்லிப்போன கெடுப் பிரகாரததிற்கு அந்த சரஸ்வதிநதி தீர்த்தத்தில் வந்து கார்த்திருந்தனர். அப்போது அந்த ஊர்வசியானவள் அவ்விடத்திற்கு வந்து இந்தச் சக்கிரவர்த்தியுந் தானுமாக சந்தோஷித்து சிலநாள் அன்னேன்ய சுகானந்தங்களை யனுபவித்துக் கொண்டிருந்து கிரமமாய் அந்த ஊர்வசியினுடைய கெர்ப்பத்தினின்றும் ஆய்வுருதாயவு அத்தியாவு விராயன் ஜெயன் விஜையன் என்கிற மகாபல பராக்கிரமசாலிகளாயும் நீதிகோபினர்களாயும் சத்திய சீலர்களாயும் மகா தீரசுந்தர புருஷர்களையும் பெற்ருள்.

இப்படிக்கொற்ற சுகுண தீர புத்திரர்களைப் பெற்றளித்து இந்தப் புரூரவச் சக்கிரவர்த்திக்கு மனம் திருப்தியாகும்படி செய்து இனியாவது நான் சுவர்க்க லோகப்போய் சேருப்படி செலவு கொடுமென்று கேட்க, அதற்கிவ்வரசனுனவர் சம்மதியாம விருக்கக் கண்டு, ஒருவார்த்தை சொல்லினள். வாராய் மண்டலாதிபதியே! நீர் சார்வதா யென்னையே அடையவேண்

டுமென்றுஇச்சிக்கிறபடியினல் நான்சொல்லும்படியான காந்தர்வ ரூபவதிகளை மனதில் தியானித்து தியானஞ் செய்வீராகில் என்னை யடையத் தகுந்த உபாயத்தை உமக்குத் தந்து கிருபை செய்வார்களென்று சமாதானஞ் சொல்லி செலவு பெற்றுக்கொண் டந்தரத்தியானமானுள்.

வாரீர் கௌவதேயரே! சிறிதுகாலஞ் சுகுணசாலிகளான புத்திரர்களை நாளுக்குநாள் விர்த்தியடையச் செய்தும் சகல விசயாதாரங்க தர்களாகச் செய்தும் பூமண்டலாதி காரியங்களை ஜெயித்துக் கொண்டிருந்து ஒருநாள் ஊர்வசியை நினைத்துக் கொண்டு சரஸ்வதி நதி தீரத்தத்திற்கு வந்து ஒரு நல்ல மங்களகரமாகிய சுகிர்த பரதேசத்தில் யோகாசனராயிருந்து கந்தருவ பதிகளைக் குறித்து தியானித்து செபித்து சந்தேகத் தியான நிஷ்டராயிருக்குஞ் சமயத்தில் அந்தக் கந்தருத் பதிகள் பிரசன்னர்களாய் இவ்வரசன் முன்றோன்றி நின்றார்கள் அப்போதுஇவ்வரசன்கண்டு ஆனந்தித்து நானுவிதங்களாகத் துதித்த மாத்திரத்தில் அந்தக் கந்தருவ பதிகள் சந்தோஷித்தொரு அக்கினிஸ்தாலியை கற்பித்து இதனுலத் தேவஸ்திரீயான ஊர்வசியை யடையக்கடவீ ரென்று அந்தரத்தானமாயினர்.

வாராய்பரத குலோத்தமனே! இந்தப்புரூரவச்சக்ரவர்த்தியானவர் அந்த அக்கினிஸ்தாலியைப் பெற்றுக் கொண்டு இதனுலூர்வசி சபிப்பாளென்று நினைத்துச் சிலகாலம் அவ்வனத்தில் சஞ்சரிக்க, ஊர்வசி பிரசன்னமில்லாததினுல் மனஞ்சலித்து அந்த அக்கினி ஸ்தாலியை ஒரு பத்திரமான சுகிப்பிரதேசத்தில் வைத்துவிட்டு தமது நகரத்திற்கு வந்துசேர்ந்து உத்தம புத்திரர்களாகிய சிறுவர்களுடனே கூடிவாழ்ந்து சுகித்திருக்குந் தருணத்தில் அந்நகரம் கிரகஸ்தா தருமத்துக்குரிய விவாக அபேட்சை மனதில் செனித்து யோசித்துக் கொண்டிருந்தார். கேளும் தருமநந்தனு! விசால நகரமென்றொரு நகரமுண்டு. அந்ந நகரத்துக்கு ச்ாமதத்தனென்றொரு அரசனுண்டு. அவ்வரசனுனவன் ஆறு சாஸ்

திரம் நாலுவேதம் அறுபத்துநாலு கலைக்ஞான முத லியவற்றை ஐயந்திரிபற உணர்ந்து சுந்தரத்தில்சூரியன் சந்திரன் அக்கினி இவர்களுக்குச் சமமான காந்தியும், பிரதாபமும், சௌகரியமும் உடைத்தாகிச் செங் கோல் நடத்தி வருங்காலத்தில் பாக்கியமெல்லா வற்றையும் பெற்று புத்திர பாக்கிய மொன்றில் லாதபடியினாலே கொலுமுகத்தி லிருந்துக்கொண்டு மந்திரிகள் பிரதானிகள் புரோகிதர் மற்று முண்டான பெரியோர்களை யெல்லாமழைப்பித்து அவர்களைப் பார் த்து அரசன் சொல்லுகிறான்.

கேளுங்கள் மந்திரிமார்களே! மற்று முண்டான சபையோர்களே! பூலோகத்திலேமனிதர்களுக்குபுத்திர னுண்டானால் புண்ணியலோகம் உண்டென்றும், புத்திர னில்லாத பேர்களுக்கு புண்ணியலோகமில்லை என்றும் வேதங்களிலே முறையிடுகின்றதாய் பெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டோம், ஆகையினால் புத்திர பாக்கியம் வேணுமென்ற அபேட்சை யுண்டாயிருப்ப தால் புத்திரசோபம் மெத்தப் பெரிதானபடியினாலே உலகத்திலே ஒருத்தரை யோகக்ஷேமம் விசாரிக்கும் போது தனதான்னிய சம்பத்துகளை விசாரியார் பிள்ளை யெத்தனை பெண்களெத்தனை என்று கேட்பார். அதுவு மல்லாமல் குழந்தைகளினுடைய வார்த்தையைக் கேட் டால் என்காதுகளுக்கு வீணைநாதம் வேணுநாதம்போ லின்பமா யிருக்கின்றது; பிள்ளைகளைப் பெற்றவர்கள் கனவான்களான படியினாலே நாங்கள் ஸ்திரீ புருஷர் கள் இருவரும் தவஞ்செய்யும் பொருட்டு இராஜ்யத்தை மந்திரிகள் வசம்பண்ணி காட்டுக்குப்போகிறோம், அவர் கள் ஆக்கினையைக் கடவாமல் நீங்கள் நடந்து கொள் ளுங்களென்று நல்ல வசனத்தினாலே உபகாரமாகச் சொல்லி அவர்கள் கையில் செலவுபெற்றுக் கொண்டு அரசனும் தன்னுடைய பெண்சாதியுந் தானுமாகச் சடைமுடியும் மரவுரியும் தரித்துக்கொண்டு நகரத்தை விட்டு வனத்திற் சென்று பணிவிடைகளைச் செய்துக் கொண்டிருக்கிற காலங்களில் அவ்வனத்திலுள்ள மகா ரிஷிகள் யாவரும் ஒரு காலவிசேஷத்தில் ஒன்றாய்ச்

சேர்ந்து சந்தோஷமாக லோகோபகார்த்தமான சில உத்கருமங்களை பேசிக்கொண்டிருந்த தருணத்தி லிவ்வரசனும் அவர் பெண்சாதியும் வெகுகாலமாக இவ்வனத்தில் வாசஞ் செய்துக்கொண்டு நமக்குப் பணிவிடை செய்து வருகிறார்கள்.

இவர்கள் மனதிலென்ன குறையோவென்று தங்களுக்குள்யோசித்துக்கொண்டு இவ்வரசனையழைப்பித்து வாராய் ராஜபூபதியே! நீங்களிருவரும் நெடுநாளாக இங்குவந்து இருக்கிற காரணமென்னவென்று மிகவுமாதரவுடனேகேட்க, இவர்களிருவரும் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு கைகூப்பிக்கொண்டு சொல்லுகிறார்கள். சுவாமிகளே! இதுபரியந்தம் சந்ததியில்லாதவனுயிருக்கிறபடியினுலே இராச்சிய சுகபோகங்களை வெறுத்து உங்களனுக்கிரகம் பெருவதற்கு வந்து காத்திருக்கிறேனென்றனர்க ளப்போதவர்கள் மிகவும் பரம தயா நிதிகளாய் யாவருங் கூடி ஓர் யாகத்தைச் செய்ய அந்த யாகத்தில் நின்றும் பிரசன்னமாய் தோன்றின அக்கினி பகவானிட கரத்திலிருக்கின்ற பாயசகிண்ணத்தை தாங்கள் பெற்றுக்கொண்டு அவரைப் பூசித்தனுப்பி விட்டு அந்த பாயச கிண்ணத்தை இராசனுக்குக் கொடுத்து வாராய் அரசோத்தமனே! இப்பிரசாதத்தையும் உமது பத்தினிக்குக் கொடுப்பீராஞல் ஒரு மகா குணமுள்ள சுத்தவீரப் பிரதாப சாலியான ஆண்குழந்தையும் ஒரு திவ்விய சுந்தரியுமாகிய பெண்குழந்தையு முண்டாகுமென்று ஆசிர்வதித்தார்கள். அவ்வசனப்படியே மகா ரிஷிகளுடைய அனுக்கிரகங்களைப் பெற்றுக்கொண்டு அந்த பாயச கிண்ணத்தை தமது பத்தினியுடனே வாங்கி சாப்பிட்டனர்கள்.

பின்பு அம்மகாரிஷியினிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தன் நகரத்தைச் சேர்ந்து அரசு செலுத்திக் கொண்டிருக்குங் காலத்தில் அத்தினம் மகாபதிவிரதையுமதுவே கெர்ப்பமாகவிருந்து அப்புண்ணிய கெர்ப்பமானது நாளுக்குநாள் விருத்தி யடைந்து பத்து மாதமுஞ் சென்று நல்ல சுபமுகூர்த்த காலத்திற் சுபப்பிரவேச

மாக ஆண் பெண் இரண்டு சுந்தரமான குழந்தைகளைப் பெற்றனள். அப்போது சோமதத்த மகாராஜனனவர் சீக்கிரமாக விதிப்பிரகாரம் ஸ்நானங்களைச் செய்து திவ்யாஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு உத்தம வேதியர்களை யழைப்பித்து விதை பொன் முதலிய அனந்தவிக்குஞ் சமயத்திலந்த வனத்திலுள்ள அம்மகாரிஷிகள் யாவரும் விசால பூபதியின் சபையில்வந்து நின்றார்கள். அப்போ தவ்வரசனனவர் அம்மகாரிஷிகள் யாவருக்கு மூசித தானங்களைக் கொடுத்து அர்க்கிய பாத்தியாதி மங்கல திவ்வியங்களினற் பூசித்து உபசரித்து சாஷ்டாங்கமாக தெண்டம் சமர்ப்பித்து நிற்கின்ற இவ்வரசனைப்பார்த்து அந்த ரிஷிகள்யாவரும் மிகவும் சந்தோஷத்தை யடைந்து பொற்றய்பாளத்தில் குழந்தைகளை எடுத்துவரச்சொல்லி அக்குழந்தைகளைக் கொண்டுவந்த மாத்திரத்தில் யாவருங் கண்டு களித்து சுபாக்ஷதைகளாலிறைத்து ஆசீர்வதித்து ஓமங்களக்கினி பகவானுக்கு திருப்திசெய்து சாதுக்கருமங்களை ஏற்படுத்தி அத்திவ்ய குழந்தைகளுக்கு சுபதினஞ்சனென்றும், ஜெயப்பிரதை யென்றும் நாமகரணஞ் செய்தபின்பு வாராய் ராசனே! உமது தவப் புத்திரனுகிய இந்த சுபதினஞ்சயனனவன் ஒரு மண்டலாதிபதி சகாயத்தை யுடையவனுக சத்துருக்களாகிய ராசாக்களுக்கு பராக்கிரமமுள்ள புருஷசிம்மனுய் சத்திதருமாதி சகல சாத்திர நற்குண விவேக தயாபுருஷனுய் மூன்றுலகமும் போற்றும்படியான விர்த்திவந்தனுய் இராஜ அரசோத்தமனுய் பூர்ண ஆயுளாய் நீங்கி அந்த ராச்சியாதிகாரியங்களை செலுத்தி ஒற்றைக் குடையான நிழலின்கண் அரசு செய்வானென்று சொன்னர்கள்.

இந்த மகா புண்ணியவதியான ஜெயப்பிரதை என்னும்பெண் குழந்தையானவள் உபயகுல பரிசுத்தனன மகா மண்டலாதிபதியை மணம்புரிந்து மகா பதிவிரதையாய் தீர்க்கசுப மங்கிலியாய் மகத்தான கீர்த்தியை யுடைய சுத்தவீரர்களைப்பெற்று தீர்க்காயுளுடன் வாழ்ந்திருப்பாளென்று ஆசீர்வதித்து அரசனிடத்தில் விடை

பெற்றுக்கொண்டு மகாரிஷிகள் யாவரும் தபோ வனத்திற்குச் சென்றனர்.

சோமதத்த மகாராஜனானவர் இந்த குழந்தைகளை நாளுக்குநாள் சுக்லபட்சத்து சந்திரனைப்போல விருத்தியடையச்செய்து வித்தியாப்பியாசங்களையும் ராஜநீதிகளையுங் கற்பித்து நாளுக்குநாள் மகிழ்ந்துகொண்டிருக்குங்காலத்தில் மகா குமரங்கிதமான தனது அருமைவாய்ந்த பெண்ணாகிய செயப்பிரதைபெதும்பைப்பருவம் நீங்கி மங்கைப்பருவம் வந்துவிட்டதென்று கருதி, அப்பெண்ணுக்கு நவரத்தின கசிதமயமான ஒரு கன்னியாமாடமும் கட்டிவைத்து அநேக செவிலித் தாய்மார்களும் அநேக தாதியர்களோடும் செயப்பிரதையை அக்கன்னியாமடத்தில் வைத்தனர். சிலநாள் சென்றபின்பு ஒரு நாள் வசந்தகாலத்தில் பூர்ண சந்திரோதயமான வேளையில் சிலதாதியர்களுடனே சிங்கார வனத்திற் சென்று சில விநோதங்களைப்பேசி விளையாடிக்கொண் டிருக்கும்போது அதில் ஒரு தாதியானவள் சிலதேசத்து அரசனுடைய பெருமைகளையுஞ்சொல்லி, பின்பு பிரதிஷ்டானபுரத்தை யாளுகின்ற சக்கிரவர்த்தியான புரூரவச்சக்கிரவர்த்தியின் ரூப சவுந்தரியத்தையும் புஜபல பராக்கிரமத்தையும் கெம்பீரமும் தருமகுணமும் சீலமும் உடையவனாகவும் அரசர்களிலிவ்விதமான புருஷர்கள் இல்லையென்று பலவாறாகப் புகழ்ந்து சொல்லி விளையாடிக்கொண் டிருக்கிற காலத்தில் தாதியர்கள் சொன்ன வார்த்தைகளை இன்பமாக கேட்டுக்கொண்டிருந்த செயப் பிரதையானவள் அதிக மோகாந்த காரணத்தினால் மனம் பூரித்து அந்தப் புரூரவச்சக்கிரவர்த்தியை நான் மணம் புரிந்து இஷ்டகாமிய போகங்களை யடைந்து சுகித்திருக்க வேணுமென்று நினைத்து கடவுளைக் குறித்து தான் கொண்ட கருத்தின்படி நிறைவேற்ற வேணுமென்று பிரார்த்தித்துக்கொண்டு கன்னியா மாடத்தை யடைந்து நாளுக்குநாள் ஜெயப்பிரதையானவள் காம விகாரத்தினால் தேக மெலிவுற்றும் வெறுப்புடன் மவுன முற்றிருந்தனள்.

அவ்விடத்திலிருக்கின்ற செவிலித் தாய்மார்களு மந்தப் பெண்ணுக்கிருக்கிற மனோபீஷ்டத்தை யறிய வேணுமென்று செயப்பிரதையைப்பார்த்து, வாராய்சுகு ணரத்தினமே! எங்களுடன் கூடி விளையாடியிருந்த நீ நாளுக்கு நாள் மனவெறுப்புண்டாக வேண்டியதென்ன வென்று கேட்க, அவர்களுக்கு ஒரு உத்தரமுஞ் சொல் லாமல் மவுனமுற்றிருந்ததை யுணர்ந்து, செவிலித் தாய் மார்கள் முதலிய யாவரும் ஏகோபித்து யோசிக்குமள வில் தோழிகளி லொருத்தி சிங்காரவனத்தில் அரசர் களுடைய குணுதிசயங்களைப் பேசின நாள் முதல் இவ் விதமான குணங்கள் அபிவிர்த்தியாகிறதென்று சொல் லவே, அதை யங்கீகாரங்கொண்டு அநேக சயித்திய உபசாரங்கள் செய்தும் காமவிகார மடங்காமல் அதிகப் பட்டு, உண்ணுள் உடுக்காள் குளியாள் உறங்காள் பேசாள் தாதியர்களுடன் விளையாடாள் நகைசெய்யாள் ஆபரண முதலியதை பூணுள் புரூரவச்சக்கிரவர்த்தியை மறவாததினு லிப்படியாக நாளுக்கு நாள் தேக காந்தி குறைபடுவதுமன்றி செய்கைகள் கூறுபாடாக விருக்கிற தைப் பார்த்து யாவருங் கூடி எப்படி யிருக்குமோ வென்று பலவாருக யோசித்து ஒன்றுந் தோன்ருமை யால் இனி நாம் சும்மா விருந்துவிட்டால் அரசனது ஆக்கினை கிடைக்குமென்று கருதி, செவிலித்தாய்மார் கள் அரசனிடத்திலும் அரசியினிடத்திலும் வந்தனை வழிபாடுடன் வணங்கிச் சொல்லுகிருர்கள்.

கேளும் மகாராச சேகரா! தேவரீருடைய குமாரத் தியை கன்னியாமாடத்தி லிருக்க எங்களிடத்தில் ஒப்பு வித்தீர்கள்; நாங்களும் இதுவரைக்கும் பாதுகாத்துக் கொண்டிருந்தோம். இப்போது காமவிகாரத்தால் சரீர மிளைத்து சந்தனசீதளமும் பன்னீரும் பொருக்கவில்லை யென்றும் சும்மா வைத்திருக்க லாகாதென்று சொல்லக் கேட்டு, அரசனும் தன் பத்தினியா ளிருவருங் கன் னியாமாடத்திற் சென்று தன் தவப்பெண்ணுகிய செயப் பிரதையின் தாயானவள், வாராய் சுபுத்திரிகாரத்தி னமே! நீ ஏன் வியாகூலத்துடன் ஒருவிதமாயிருக்க வேண்டிய தென்னவென்று பலவாருகக் கேட்க, தன்

தாயினிடத்தில் விவாகம் வேண்டியதென்று குறிப்பாகக் கேட்ட அரசனு மரசியும் இரண்டு பேருமாக பெண்ணுக்குத் தக்க உபசாரணை செய்துவிட்டுப் பின்பு அரசனது கொலுமண்டபத்திற் சென்று மந்திரியைப் பார்த்து, தன் குமாரத்திக்கு மணஞ் செய்யவேண்டும், ஆகையினாலே ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கு மணவோலை எழுதும்படி கட்டளையிட, மந்திரி சம்பிரதியை யழைப்பித்து விசால நகரத்து சோமதத்த மகாராஜாவின் குமாரத்தியாகிய செயப்பிரதையானவள் ஒரு சந்தேகம் கேட்கிறாள். அந்த சந்தேகத்துக்கு விடை கொடுத்தால் அந்த அரசனை மணம்புரிவாளென்று ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கு மணவோலை எழுதி யனுப்பிவிட்டு செயப்பிரதைக்கு சுயம் வரமென்று பேரிகை யறைவித்தான்.

அதுகேட்டு அங்கம், அருணம், அவத்தி, ஆந்திரம், இலாடம், இரவணம், ஒட்டியம், கஞ்சம், கலிங்கம், கன்னடம், கர்னாடகம், காஸ்மீரம், காம்போஜம், கிராடம், குகரம், குடகம், காகம், குந்தளம், குருபுவிந்தம், கூர்ச்சரம், மேகம், தோளம், கொங்கணம், கொல்லம், சாகலம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சாணகம், திராவிடம், துளுவம், தக்காணம், நிடதப், நேபாளம், பாஞ்சாலம், பரம்பாண்டியம், விந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், சங்கம், வங்காளம் : விகபரம் முதலான ஐம்பத்தாறு தேசாதிபதிகளாகிய அரசர்களும் தங்கள் தங்கள் இரத கஜ துரக பதாதிகளுடனே வஸ்திராபரணம் அலங்கிருதராய் குடை கொடிச்சீலை ஆலவட்டங்கள் வெண்சாமரைகளுடனேயும் நாகசுர மேளங்கள் முதலான பதினெட்டு வாத்தியங்களுடனேயும் ஜெயத் தொனிகளுடனே வெவ்வேறே தண்டுவிட்டிறங்கினார்கள்.

அப்போது புரூரவச் சக்கிரவர்த்தியானவர் மணவோலையைக் கண்டதிசயித்து நானே அக்கன்னியை மணம் புரிவேனே யல்லாது வேறே யொருவரும்

மணம் புரியார்களென்று நினைத்துக் கொண்டுவந்து இரத கஜ துரக பதாதிகளோடு கூடி சேனுசமூகத்துடன் பிரயாணமாய் வருகின்றதைக் கேள்வியுற்று இந்த சோமதத்த மகாராஜனும் தனது ரத கஜதுரக பதாதிகளோடு எதிர்சென்று உபசரித்து அழைத்துக்கொண்டு வரும்போது அந்நகரத்தி லுள்ளவர்களும் இந்த ரூப சவுந்தரியமான அரசனே தமது அரசன் குமாரத்தியை மணம் புரியவேண்டுமென்று பலவாருக ஈஸ்வரனை துதித்தனர்கள். மிகவும் பிரதாபசாலியான புரூரவச் சக்கிரவர்த்தியும் மற்ற அரசர்களுடன் நகரத்தையடைந்தவுடன் திவ்விய அலங்கிருதமாகிய விடுதிகள் ஏற்படுத்தி அவருக்கும் அவருடைய சைனியங்களுக்கும் யாதொரு குறைவுமின்றி சந்தோஷிக்கும்படி ஆதரித்து பூசித்தனர். இவ்விதங்களாகச் சகல மண்டலாதிபதிகள் யாவரும் வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள் சூரிய உதயத்தில் அநேக ரத்ன சிம்மாசனங்களும் உசிதாசனங்களு மமைத்து அலங்காரங்கள் செய்திருக்கின்ற சுயவரம் மணப்பந்தலில் தனது அருந்தவப் புத்திரியான செயப்பிரதையையும் செவிலித் தாய்களையும் தாதிமார்களையும் அழைத்து வரும்படியாக ஆக்யாபிக்க அவர்கள் அந்தப்பெண்ணை மஞ்சன சாலையிலழைத்துப்போய் மங்கள ஸ்நானஞ் செய்து திவ்விய வஸ்திரங்களை யுடுத்தி அளவில்லாத திவ்யாபரணங்களை யணிவித்து களபகஸ்தூரி சந்தனுதி பரிமள திரவியங்களை திருமேனியெங்கும் பூசிக்கரத்தில் திவ்விய புஷ்பமாலையைக் கொடுத்து நானுவித திவ்விய மங்கள வாத்தியங்கள் சப்திக்க வேதவேதியர்கள் பூரணக் கலசம் எடுத்துச்செல்ல மங்கள ஸ்திரீகள் மக்கள் மங்களம்பாட அநேகந் தாதியர்கள் புடைசூழ அன்னத்தைப்போல் நடைநடந்து சகல தேசாதிபதிகளும் அம் மகாமண்டபத்தில் வந்து சேர்ந்து சுகாதீனராய்ச் சிம்மாசனத்தில் வீற்றிருக்குந் தருணத்தில் ஜெகன்மோகன மோகினி தெய்வப் பெண்ணுருவம் போன்ற இந்தச் சுந்திரவதியான ஜெயப்பிரதை யென்கிற கன்னிகை அந்தச் சுயம்வர மண்டபத்தைச் சேர்ந்

தனள். அத்தருணத்தில் சகலமான ராஜாதிராஜங்களும் ரத்தினங்களிழைத்த சொர்ணமயமாகிய சிம்மாதனத்தில் கெம்பீரமாக விருந்து திவ்விய பரிமளாகளோடுகூடி யலங்கரித்திரா நின்ற ஒரு நன்மலரைப்போல இவ்வரசர்களுடைய கண்விழிகளானது அந்தப் பெண்மலரின்மீது பாய்ந்து சித்ரபாவைகளைப்போல் யாவரும் பிரமித்து பார்த்துக்கொண் டிருக்கிறபோது செவிலித்தாய்களும் மகா எச்சரிக்கையுடன் அந்த வரசர்களுடைய வம்ச பூர்வோத்தரங்களையும் வீரப்பிரதாப சவுந்தரியத்தையும் விவாகாதி குணங்களையும் குறித்து யாவரையுந் தெரிவித்தனர்கள்.

அப்படியிருக்க சுபதீஞ்சராஜன் தன் சகோதரியாகிய செயப்பிரதை சொன்ன சந்தேகத்தை ஐம்பத்தாறு தேசத்து அரசர்களைப்பார்த்து யானொரு சந்தேகங் கேட்கிறேன் அந்த சந்தேகத்துக்கு விடை கொடுப்பவர்களுக்கு என் சகோதரி செயப்பிரதை மாலையிடுவாள் என்றுகூற அரசர்கள் யாவரும் அந்த சந்தேகத்தை வெளியிடுமென்று கேட்க அப்போது சுபதீஞ்சராஜனனவன் அரசர்களைப் பார்த்து, ஓ அரசர்களே! இவ்வுலகத்தில் மகானுபாவர்களாகிய தாய் தந்தைகளின் மனோபீஷ்ட மந்திர பேதங்களினால் ஆண் பெண்ணுருவமாகச் செனித்து பெண்ணே ஆணாகிப் பெண்ணாகி ஆணும் பெண்ணுமாய் விளங்கிய வம்ச விர்த்திகளைச் செய்து மகத்தான கீர்த்தியடைந்த அவ்வாணே பெண்ணாகிய கருப்பத்திற் பிறந்து விருத்தியடைந்து சத்தியதருமாதி சகலசாஸ்திர விதிப்படி நடந்து மகா சுத்தவீரப் பிரதாபசாலிகளாக சகல திக்கு விஜயங்களையுஞ் செய்து மண்டலாதிபதியாய் பெண்ணையே வேண்டி தவங்கள் செய்தும் இராச்சியாதிகாரங்களையுஞ் செய்து சகல இராச்சியாதிபதிகளுக்கு இருதய பேதியான சுத்த வீரனாகிய மகாசூரனெவனோ அப்படிக்கொத்த வீரத்தையுடைய அரசனை என் சகோதரி மாலையிடுவாளென்று கூற அவர்கள் யாவருங் கேட்டு மவுனமுற்றிருந்தனர்கள்.

அந்தச் சமயத்தில் புரூரவச் சக்கிரவர்த்தியானவர் முற்றுங்கேட்டு சகல ராஜாக்களையும் பார்த்து சுககெம்பீரத்தையும் தன் வம்ச பூர்வோத்திரங்களை நினைத்து யாவருக்கும் தெரியும்படி மனுசரிதத்தையும் மனுவின் யாகப் பெருமையினையும் வசிட்டகுரு செனங்க ளனுக்கிரகத்தையும் அரிகராதி கடவுளினுடைய கிருபையின் அதிசயத்தையும் சூரிய சந்திரவம்சத்தின் விளக்கத்தையும் தனது தந்தைகளின் வரலாற்றையும் தன தெண்ணங்களின் கருத்தையுஞ்சொல்லி இதுகளை யெல்லாங் கேட்டிருந்த அரசர்கள் யாவரும் மகா ஆச்சரியமடைந்திருக்கின்ற தருணத்தில் இந்த மகாசுந்தரியான செயப்பிரதை என்கிற கன்னியா ரத்தினமானவள் எல்லாரும் பார்த்து அதிசயிக்குஞ் சுந்திரநடை நடந்து வந்து இந்த மண்டலாதிபதியாக புரூரவச்சக்கிரவர்த்தியின் அருகாமையிற் சென்று தன்கையி லிருந்த புஷ்பமாலையைச் சூட்டினாள். அப்போது ஆகாயத்தில் தேவதுந்துமிகள் திமிதிமியென்று முயங்கினதுகள் தேவர்கள் பாரிஜாத புஷ்பம் வருஷித்தார்கள். வீணைமீட்டி நாரதர்பாடினார் கந்தருவர்கள்கொண்டாடினார்கள். தேவஸ்திரீகள் நாட்டியம் பண்ணினார்கள் சகல தேவர்களும் அந்த பெண்ணுக்குத் தகுமான நாயகன் இந்தச் சக்கிரவர்த்தியே யல்லாமல் மற்றொரு அரசர்களுந் தகாதென்று சந்தோஷப்பட்டுக்கொண்டு அவ்வரவர்கள் நகரத்துக்குச் சென்றனர்கள்.

கேளுந் தருமநந்தனா! சோமதத்த மகாராஜா மிகவுந் சந்தோஷப்பட்டுப் புரூரவச்சக்கிரவர்த்தியே சகல சம்பிரமத்துடனேயும் பதினெட்டு வகை மேளவாத்தியங்களுடனேயு மழைத்துக்கொண்டு வந்து நம்முடைய அரண்மனைக்குப்போய் தன் அரண்மனைகளெல்லாம் வேடிக்கையாகவும் வெகு விநோதங்களாகவும் நவரத்தின மயமாக அலங்கரித்துப் பார்க்க பதினாயிரங்கண் வேணுமென்று சகலருஞ் சொல்லிக்கொள்ளத்தக்கதாக கலியாணப் பந்தலிலே நவரத்தின பீடமொன்று நியமித்து அதில் புரூரவச் சக்கிரவர்த்தியையும் தன் குமாரத்தியாகிய செயப்பிரதையையும் நல்ல சுபமுகூர்த்தத்

தில்மணவரையில் உட்காரவைத்துமங்களஸ்திரீகளால் நலங்கு முதலிய சடங்குகளை நிறைவேற்றி வேத வேதியர்களைக்கொண்டு சடங்குகள்செய்து மந்திரங்கள்கூறி எக்காளம் துத்தரி சின்னம் முரசு முதலிய வாத்தியங்கள்ஒளிக்கச்செயப்பிரதையின் கழுகை நிகர்த்தகழுத்தில் புரூரவச்சக்கிரவர்த்தியின் மங்கிலியத்தை தரித்து மங்களமாதர்கள் சோபனம்பாட புண்ணியஸ்திரீகளால் நவரத்தின சேஷையிட சாம்பவமூர்த்தியும் பார்வதா தேவியும் ஸ்ரீ மகாவிஷ்ணுவும் ஆதிலட்சுமியும், பிரம தேவரும் சரஸ்வதியும், தேவேந்திரனும் இந்திராணியும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும் (நவமாதர்களும்) திக்குப்பாலகர்களும்அவரவர்கள் தங்கள் தங்கள் தேவிமார்களுடனே வந்து சேஷையிட்டு அகண்ட ஐஸ்வரிய போகபாக்கியத்தை அனுபவிக்கும்படி ஆசீர்வாதம் பண்ணிப் போயினர்கள். பின்பு சகலமான பிராமணர்களுக்குந் தட்சணை தாம்பூலங்கள் கொடுத்தனுப்பிவிட்டு மற்ற பேர்களுக்கெல்லாம் அறுசுவை பதார்த்தங்களுடனே அன்னம் பகிர்ந்து சந்தன புஷ்பதாம்பூலங்களும் கொடுத்து வித்வாமிசர்கள் பாட்டர்கள் புகழ்ந்து தேவ தாசிகள் நாட்டியம் பண்ண சகலசம்பிரமத்துடனே இருவரும் சந்தோஷத்தை யடைந்து பின்பு அந்தப் புரத்திற்குச்சென்று மதன சாத்திராவிதி பிசகாமல்கூடி இன்பத்தை யனுபவித்து சுகித்திருக்குங் காலத்தில் ஒரு நாள் புரூரவச்சக்கிரவர்த்தி தன் மனையாளாகிய செயப்பிரதையை பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறுர்.

கேளும் பெண்ணே! நாமிவ்விடத்திற்கு வந்து நெடுநாளாச்சுது நம்முடைய இராச்சிய மெவ்விதமாக இருக்கின்றதோ தெரியவராது, நகரத்திற்குச் செல்ல வேணுமென்கிற கியாபகம் உனக்கு சற்றுகிலும் நினைவு பிறக்கவில்லையே? நம்முடைய தேசம் என்னபாடு படுகின்றதோ பிரஜைகள் என்ன விசாரப்படுகிறுர்களோ தெரியாது. எத்தனை காலமானுலும் நம்முடைய பட்டணத்தை விட்டு இவ்விடத்திலே யிருக்கலாமா? ஆகையால், நான் இனி இங்கே இருக்கக்கூடாது. நீபோய் உங்

கள் தாய்தகப்பனுக்கு இக் காரியங்களை தெரிவித்து அவர் கையில் சந்தோஷமாகச் செலவு பெற்றுக்கொண்டுவந்தால், பட்டணத்துக்குப் போவோமென்று சொன்னவுடனே செயப்பிரதை கேட்டு எழுந்திருந்து தெண்டனிட்டு தேவரீர் கட்டளையின்படியே என்தாய் தகப்பனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு நம்முடைய தேசத்திற் நாம் போகவேண்டியதே யல்லாமல் அந்நிய தேசத்திலிருப்பது தருமமல்ல இப்போது நான்போய்ச் செலவு பெற்றுக்கொண்டு வருகிறேனென்று சொல்லி விட்டு ஜெயப்பிரதையானவள் தன் தாயாரண்டைக்குப் போய் அவளுக்கு தயவு வரும்படிக்கு கொஞ்சின வார்த்தைகளாகப் பக்தியுடனே சேவித்து சொல்லுகிறுள்.

அம்மா ! இவ்வுலகத்திலே பெண்ணுகப்பிறந்தால் பிறந்த வீடு சொந்தமில்லையென்ற வார்த்தையானது இன்றைய தினந்தான் தெரியவந்தது அது எப்படியென்ருல் என் நாயகன்பட்டணத்திற்குப் போகவேணுமென்று உங்களிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு வரச் சொல்லி என்னை அனுப்புவித்தாரென்று குளிர்ந்த வசனமாகச் சொல்லி இரண்டு கண்களிலேயும் முத்துக்கள் உதிர்ந்தாப்போலே நீர் சொரிய துக்கித்துச் சொன்ன குமாரத்தியைப் பார்த்து தாயானவள் கண்களிலேயும் நீர் சொரியத் துக்கித்துச் சொல்லுகிறுள். அம்மா மகளே ! என் கட்டிக் கருணைக்கடலே ! என் தாயே ! இன்றைக்கு என்னைப் பிரிந்து போகும்படியாச்சுதே ! நான் பட்டணத்திற்குப்போய் வருகிறேனென்று சொல்லுகிறையே உன்னைவிட்டு அறை நிமிஷமாகிலும் பிரிந்திருக்கமாட்டேன். இதற் கெப்படியென்று புத்திரசோபம் சகிக்கமாட்டாமல் அடியுடனே வெட்டி சாய்ந்த மரம்போலே நிலத்திலே தொப்பென்று விழுந்து மூர்ச்சையடைந்தாள். ஜெயப்பிரதையும் தன் தாயைப் பார்த்து விசனத்தைப் பொறுக்கமாட்டாமல் அரசனும் மூர்ச்சையாய் விழுந்து விட்டனன். அதைப்பக்கத்தில் இருந்த பாங்கியர்கள் செய்த சயித்திய உபசாரத்திஞலே இருவருக்கும் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து உட்கார்ந்துகொண்டு விசனப்படுகிற

தைப் பாங்கியர்கள் கண்டு அவர்களுக்கு மனம் பொறுக்கமாட்டாமல் பரிதாபப் பட்டுக்கொண்டிருக்கச் சோமதத்த மகாராஜர் அவ்விடத்திற்குவந்து அவர்களிரண்டு பேரும் துக்கப்படுகிறதைப் பார்த்து தானும் சற்றே புத்திகலங்கி விசாரப்பட்டு உடனே தன் மனதைத் தானே ஒருவாராகத் தேற்றிக்கொண்டு தன் குமாரத்தியையும் பெண்சாதியைத் தேற்றி அவர்கள் சோபத்தை நீக்கிச் சந்தோஷப்படுத்தி பின்பு மருமகனுன சக்கிரவர்த்தியாகிய புரூரவச்சக்கிரவர்த்தியை யழைப்பித்து அவருக்குத் தகுந்த மரியாதைகள் பண்ணித் தன் கனக வஸ்து வாகனுதிகளும் கொடுத்து ரதகஜதுரகபதாதி சதுரங்க சேனைகளும் தண்டிகை முதலான வஸ்துக்களெல்லாம் குறைவில்லாமல் வெகுமானமாகக் கொடுத்துத் தன் குமாரத்திக்கும் நவரத்தின மயமான ஆபரணங்களும் தங்கமயமான வஸ்திரங்களும் பின்னையு மனேக வரிசைகள் சீதனமாகக்கொடுத்துச் சோமதத்த மகாராஜன் தன் குமாரத்தியைப் பார்த்து, அம்மா! உனக்கு ஐம்பத்தாறு தேச ராஜாக்களுக்கு அதிபதியான புரூரவச்சக்கிரவர்த்தி உனக்குப் புருஷனுகக் கிடைத்தார்; நாங்களுன்னை தபசுபண்ணிப் பெற்றதினுல் ஐம்பத்தாறு தேசத்தரசர்களையுங் கண்டோம். மகா கீர்த்தியையும் படைத்தோம்; எத்தனை காலமானுலும் நீயும் தாய்வீட்டிலேதானேயிருந்தால் தருமமல்லவம்மா நீ உன் மாமியார் வீட்டிற்குப் போகிறதே நலம். அடிக்கடி நான் விசாரணை செய்துக்கொண்டு வருகிறேனென்று சோமதத்த மகாராஜா சொல்லிவிட்டுத் தன் குமாரத்தியாகிய ஜெயப்பிரதையைத் தங்கப்பல்லக்கின் மீதேற்றிவைத்துத் தன் மருமகனுகிய சக்கிரவர்த்தியை நவரத்தினமிட்டிழைத்த இரதத்தின் மேலேற்றித் தானும் தன்சேனைகளுப் ரதகஜதுரகபதாதிகளுடனே பட்டணத்தை விட்டு வெளிப்பட்டுச் சகல மேளவாத்தியங்கள் முழங்க பிராமணர்கள் ஆசீர்வாதம் பண்ண வெகு ஆடம்பரத்துடனே சிறிது தூரம் வந்து ஓ ராஜேந்திரா! சகலலோகதுரந்தரா! பஞ்சாட்சதகோடி பூமண்டலத்தை பரிபாலனம் பண்ணப்பட்ட சக்கிரவர்த்தியே யென்று கொண்டாடிப் பலவிதங்களாகத்

தன் குமாரத்தியைக் குறித்துச் சொல்லி தானும் தன் குமாரனும் அவர்களிடத்தில் தாங்களும் செலவு பெற்றுக்கொண்டு திரும்பினார்கள்.

பின்பு சக்கிரவர்த்தியும் ஜெயப்பிரதையுடனே சகல சேனைகளும் புடை சூழ்ந்து வரச் சிறிது தூரஞ் சென்றபின்பு தண்டிகையிறக்கி பெண்ணைப் பாங்கிமாருடனே கூட தன் ரதத்தின்பேரில் ஏற்றிக்கொண்டு இருவரும் தாம்பூலமணிந்து சந்தோஷமாகச் சகல மேளவாத்தியங்களும் முழங்க வெகு உற்சாகத்துடனே காடுமேடுகள் ஆறுகள் மலைகள் செடிகள் பட்டணங்கள் முதலானதுகளையெல்லாங் கடந்து இந்திரபுரத்திற்குச் சமீபத்தில் வந்து தண்டுவிட்டிறங்கி மந்திரிகளுக்குத் தான் வந்த சமாச்சாரங்களைச்சொல்லி யனுப்புவித்தார். அது கேட்டு மந்திரி பிரதானிகள் சந்தோஷப்பட்டு பட்டணமெங்கும் வேடிக்கையாய் அலங்காரஞ் செய்து தங்க தட்டில் பழங்களும் தாம்பூலங்கள் கெந்தாட்சதைகள் இது முதலான வஸ்துக்கள் காணிக்கையாக எடுத்துக்கொண்டு மேளவாத்தியத் தொனியுடனே பட்டணத்தை விட்டு புறப்பட்டுவந்து புரூரவச் சக்கிரவர்த்தியைக் கண்டு நமஸ்காரங்களைச் செய்து கை கட்டிக் கொண்டு நின்றார்கள்.

அப்போது சக்கிரவர்த்தியாகிய புரூரவச்சக்கிரவர்த்தி சந்தோஷத்துடனே மந்திரிமுதலான பேர்களை ஆதரணைபண்ணி அவர்கள் கொண்டுவந்த வஸ்துக்களை யெல்லாம் பிராமணர்களுக்கு கொடுத்துவிட்டு அவர்களுடனே கூடி சக்கிரவர்த்தி சகல சம்பிரமத்துடனே பட்டணத்தில் நல்ல சுபமுகூர்த்தத்தில் பிரவேசித்து வீதிகளில் அலங்காரமாய்ப் புறப்பட்டு வருகிறபோது அந்தப் பட்டணத்தில் பொற்கோபுரங்களும் பொன்னுப்பரிகைகளும் பொற் கோட்டைகளும் நவரத்தினங்களும் தங்கத்தினாலே கட்டின வீதிகளும் நவரத்தின மயமாயிருக்கிற மாடமாளிகை கூடகோபுரங்களும் பொற் பிரகாசமான பிரசாரங்களும் அனேக விந்தையான வேடிக்கைகளை எல்லாம் புரூரவச் சக்கிரவர்த்தி ஜெயப்பிரதைக்குக் காண்பித்து வரச்சே பட்ட

ணத்து ஜெனங்களெல்லாம் கும்பு கும்பலாய்க் கூடிக் கொண்டு கற்பூர விளக்குகளும் ஆலாத்திகளும் காட்டப் பிராமண ஸ்திரீகள் கெந்தாட்சதைகள் இரைக்கப் பிராமணர்க ளெச்சரிக்கை சொல்லி யவருடைய பராக்கிரமங்களைக் கொண்டாட இரு பக்கத்திலும் இராஜ கூட்டங்கள் நெருங்கிவர மங்களஸ்திரீகள் புஷ்பசேஷைக ளிறைக்க பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் முதலான பேர்களும் மூத்துச் சேஷைக ளிறைக்கச் சகலஜெனங்களும் ஆனந்தமாய் வேடிக்கை பார்க்க புண்ணிய ஸ்திரீகளெல்லாம் மூத்தாலாத்தி பவளாலாத்தி நவரத்தினத்தா லாலாத்திகள் எடுக்க மகா உற்சாகத்துடனே புரூரவச் சக்கிரவர்த்தி இந்திர புரத்தைப் பிரதட்சணம் பண்ணித் தானுந் தன் பெண் சாதியும் அரண்மனைப் போகப் புண்ணிய ஸ்திரீகள் சோபனம்பாடப்பிராமணர்களும் வித்வாம்சருக்கும் மந்திரிகளுக்கும் பிரதானிகளுக்கும் மற்றுமுள்ள சேவகர் களுக்கும் அபரிமிதமான வெகுமானங்கள் கொடுத்து சகல சம்பிரமத்துடனே வேடிக்கையா யிருந்தார்கள்.

பின்பு ஜெயப்பிரதை தன் நாயகன் கட்டிவைத்த அரண்மனை அந்தப்புரங்களை நன்ருகப் பார்த்துத் தன் மனிதரை விட்டுப் பிரிந்து வந்ததும் நினையாமல் வெகு நாள் பழகினவளைப்போல் சந்தோஷத்துடனே தானும் தன் நாயகனும் கூடிச் சுகத்தை யடைந் திருந்தார்கள். ஒருவர்க்கொருவர் பிரியாவிடையாய்ப் பிராணன் ஒன்று பொருந்தி கண்க ளிரண்டுமாக ஒரு மனதாய்க் கலந்து தங்களுக்கு இச்சையானபடி கேளி விலாசமாகப் புட்ப வனங்களிலேயும் மேடைகளிலேயும் மன்மத கேளி விலாசங்களை நடத்திக்கொண்டு தருமநீதி தவருமல் செங்கோல்செலுத்தி உலகமெங்கும் தன்னைக்கொண்டாடத் தக்கதாக அரசாட்சி செய்துக்கொண்டிருந்தார்கள்.

கேட்டீரோ தருமநந்தனு! இதுவரைக்கும் நடந்த வற்றைச் சொன்னேன். இனி நடக்கப் போகிறதைச் சொல்லுகிறேன் கேளும். இப்படி சகல சம்பிரமத் துடனே அரசாட்சி செய்துக் கொண்டிருக்கிற புரூரவச் சக்கிரவர்த்தியைச் சனீஸ்வர பகவானுனவர் துக்கப்

படுத்துகிற நிமித்தம் பார்த்துச் சனீஸ்வர பகவான் பிராமண வேடமாக வந்து ஆசீர்வாதஞ் செய்யப் புரூர வச் சக்கிரவர்த்தி அந்தப் பிராமணனுக்கு நமஸ்காரங் கள் செய்து பொற்பீடமளித்து உட்காரச்சொல்லி நீர் எந்த தேசம்? எங்கே வந்தீரென்றுவினவ, அந்தப் பிரா மணன் சக்கிரவர்த்தியே! நான் சூரியபகவான் குமா ரன் என்பேர் ; சனீஸ்வரன் ; உம்மண்டைக்குக் கொஞ் சம் காரியார்த்தமாய் வந்தேன். இந்தப் பிராமணனென் னத்தைக் கேட்கப் போகிருனேவென்று சிந்திக்க வேண்டாமென விசேஷமும் உடனே சொல்லுகி றேன் கேளும். அதென்ன வென்ருல், தேவர்கள் யக்ஷகர்கள், கின்னரர்கள், மனிதர்கள், முதலானவர்கள் என்பேர்சொன்னுல் நடுநடுங்குவார்கள் அவர்களுடைய மதங்களை யெல்லாம் என்னுடைய மாய்கையினுலே யடக்குவேன் இப்படி சகல லோகத்தார்களையும் நடுங் கப்பண்ணி வைக்கிறவன் சாயாதேவிக்கும் சூரியபகவா னுக்நும் பிறந்தவன். நான் சகல ஜெயமுங் கொண்ட வன். அநேகங் கீர்த்தியுள்ளவன். என்னை உத்தமரான பெரியோர்கள் மிகவுங் கொண்டாடுவார்க ளானபடியி னுலே உம்மண்டைக்கு வந்தேன். உம்மிடத்தில்வருகிற தற்கு இளமை நல்லதோ முதுமை நல்லதோ உனக்குச் சம்மதியான காலத்தைச் சொல்லுயென்று கேட்டதற்கு புரூரவச் சக்கிரவர்த்தி, வாருமையா சனீஸ்வரரே! முதுமையான காலத்திலே உம்முடைய காலம்வந்து கூடினுல் உமது இடுக்கங்கள் பொறுக்கப் போகாது. ஆகையால், இளமையிலேதானே உம்முடைய கண்காட் சியைக் காட்டி எப்படியாகிலும் என்னை இரட்சிக்கிற கடமை உமக்கேயல்லாமல் மற்ருெருவருக்குண்டோ வென்று பலவாருகத் தோத்திரஞ் செய்ய சனீஸ்வரன் நல்லது ; நீர்சொன்னபடியே நாம் வருகிருேமென்று விடை பெற்றுக்கொண்டு அந்தரத் தியானமாய்ப் போய் விட்டார்.

சிலது காலத்துக்குப் பின்பு சனீஸ்வர பகவானுன வர் இந்தப் புரூரவச் சக்கிரவர்த்தியை நாம் சொற்ப அரசரென்றெண்ணி அவரிடத்திலேசெல்ல அப்போ

தவரைப்பார்க்குமளவில் இவ்வுலகத்திலிருக்கின்ற அரசர்களுக்கெல்லாம் மேன்மையான அரசனாகவும் தருமசொரூபனாகவும் சிவபூசை ஆசாரம் நீதிமார்க்கங்களிலும் தயை தாட்சண்யங்களிலும் துஷ்டானுக்கிரக சிஷ்ட பரிபாலனங்களிலும் குறைவில்லாமல் செங்கோல் நடத்திவருகின்ற சக்கிரேஸ்வரனை நாம் எவ்விதத்தில் பிடிக்கலாமென்று மகா தியாத்துடன் சமயம் பார்த்துக்கொண் டிருந்தனர்.

கேட்டீரோ தருமநந்தனா! இப்படிச் சனீஸ்வர பகவான் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிற காலத்தில் புரூரவச் சக்கிரவர்த்திக்குத் தெய்வ கடாக்ஷத்தில் ஜெயப்பிரதை வயிற்றில் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அப்புத்திரர்கள் பிறந்தவுடனே சந்தோஷமாகப் பூதானம், கோதானம், கன்னிகாதான முதலிய எல்லா தானங்க்ளும் சந்தோஷமாகக் கொடுத்துவிட்டுச் சுகஜீவியாய் இராச்சிய பரிபாலனஞ் செய்துக்கொண் டிருக்கிறபோது தலைவிதியைத் தள்ளக்கூடாதபடியினாலே பயிர்களை மிருகங்கள் வந்து அழித்துப் போய்விடுகிறதாய் குடிகள் முறையிட அப்போது ஒரு ஜீவயிம்சையும் சொர்ப்பனத்திலேயும் நினைக்காமலிருக்கிற சக்கிரவர்த்தியானவர் காட்டுக்கு வேட்டைமார்க்கம் போகவேணுமென்று நினைவு பிறந்தது, மந்திரிப் பிரதானிகளுடனே கூட இரதாரூடராய் வேட்டைக்காரர்களை யழைத்துக்கொண்டு ஜெயப்பிரதையையும் இரதத்தின்பேரி லேற்றிக்கொண்டு ரதகஜதுரக பதாதிகள் சூழ்ந்துவரச் சகல ஜெனங்களும் வேடிக்கையாகப் பிரயாணப்பட்டு பேரிகை முழக்கத்துடனே காட்டிற் சென்று வேட்டையாட உத்திரவு கொடுத்தார்.

அவர்கள் அப்படியே வேட்டைக்காரர்கள் வேட்டையாடி அநேக மிருகங்களைக் கொன்றுவிட்டோம். இனி எங்களால் முடியாதையா வென்று விண்ணப்பஞ் செய்ய சக்கிரவர்த்தியானவர் இம்சை செய்யலாகாதென்றிருந்தனர். வேட்டைக்காரருடனே கூடத்தானும் வேட்டையாடி குடிகளுக்கோர் துன்பமும் வரவொட்

டாமல் பாதுகாத்து இரட்சித்து வருங்காலத்தில் ஒரு நாள் சனீஸ்வர பகவான் மாயையினல் மறுமண்டலத் தரசர்க ளிவருடைய இராச்சியத்தை நாமெல்லோரு மாகக் கோட்டையை வளைத்துக்கொள்வோம் இவர் நம்முடனே உயுத்தத்திற்கு வருகிறதும் வாராததும் பார்ப்போமென்று மறுமண்டலத்தார்கள் யாவரும் கூடிக்கொண்டு இந்திர புரத்திற்குப் பதிங்காதவழிக் கப்புறத்திலே சுற்றிலு முற்றுகைபோட்டுக் கொண்ட சமாச்சாரம் தூதுவர்களால் மந்திரிக்குத் தெரிந்து மந்திரியானவர் இது ஏதோ விபரீத காலமாக இருக்கிற தென்று ஆலோசனைசெய்து நம்முடைய அரசனுகிய புரூரவச் சக்கிரவர்த்திக்கு ஆணை ஆக்கினைக்கு உட்பட் டுப் பகுதிபணம் கட்டுகிற அரசர்கள் இப்போது நமது நரகத்திற்குவந்து வளைத்ததற்குக் காரண மென்னமோ தெரியவில்லை. ஆகையால் நாமிதுகளை நம்முடைய அரசனுக்குத் தெரிவித்துச் செய்யவேண்டிய தின்ன தென்று தூதுவரை யழைத்து அந்த சமாசாரத்தை நம்முடைய அரசனுக்குச்சொல்லி வாருங்களென்று கட்டளையிட தூதுவர்கள் போய் அரசன் சமூகத்தைக் கண்டு மறுமண்டலத்தரசர்களிப்போதிந்த இந்திர புரத் திற்குப் பதிங்காத வழிக்குப்புறத்திலே சுற்றிலும் வந்து வளைந்திருக்கிருர்க ளென்று விண்ணப்பஞ் செய்ய அதைக்கேட்டு குலுங்க நகைத்து புரூரவச்சக்கிரவர்த்தி நம்மை வினைவந்து சூழ்ந்ததற்குச் சந்தேக மில்லை யென்று எண்ணிக்கொண்டு நல்லது எல்லாம் நாளைய தினம் சொல்லுகிறேனென்று தூதரை யனுப்பி விட்டுத் தான் அந்தப்புறத்திற்குப் போய் விட்டார்.

பின்பு மனைவியுந் தானுமாகக் கூடி விளையாடிக் கொண்டிருக்கையில் மனைவியானவள் புருஷனைப்பார்த் துச் சக்கிரேஸ்வரனே நீர்விளையாட்டைவிட்டு ஆலோ சனை பண்ணுகிற தென்னவென் று வினவ சக்கிரவர்த்தி சொல்லுகிருர் வாரும் பெண்ணே ! (குறள்) 'சூழ்ச்சி முடிவு துணிவெய்தத் துணிவு தாட்சியுட் டங்குற்றீது' என் று தியானஞ் செய்துக்கொண்டு வினையானது நம்மைவந்து சூழ்ந்துகொண்டால் அந்தவினை தீருகிற

வரைக்கு நாமென்ன உபாயம் பண்ணினாலும் தாழ்ச்சியான காலந் தாழ்வுபடுமே யல்லாமல் சவுக்கியத்தை யடையப் போகிறதில்லை வினை தீருகிறபோது ஆதித்தனைக் கண்ட பனிபோலவுந் தீராதபோது இருவினைப் போலவு மிருளுக்கு பந்தம் பிடித்தா லிருள் நீங்குமோ ஆதித்தனுதயமான பிறகு இருள் நிற்குமோ இதுவெல்லாம் வினைக்கேது வல்லவோ அதெப்படி யென்றால்: இந்நாள்வரைக்கும் நாம் ஒருதேவன்போலவும் மற்ற அரசர்களெல்லாம் நம்மை தொழுபவர்கள் போலுமிருக்க இப்போதவர்கள் வதைக்க இச்சை கொண்டார்கள். அது நம்மைச் சூழ்ந்த வினையானது அவர்களைப் பகைக்கச் செய்ததினால் நமக்கு வெற்றி கொடுக்க மாட்டாது. நல்வினையான காலத்திலே யாவரும் பகைவரே நமக்கு தீவினையான தாதையா லடுத்திருந்த அரசர்களே பகையானார்கள். (குறள்) 'என்பதையன்ன சிறுமைத்தேயாயினு மூட்பகை யுள்ளதாங் கேடு, என்றதுபோல எல்லா மருமங்களு மறிந்த அரசர்களிப்போது நம்மை ஒரு பொருட்டாக யெண்ணாமல் நகரத்தை வளைத்துக் கொண்டபோதே பொல்லாத வினையானது அவர்களை பகைக்கச் செய்ததே யல்லாமல் அவர்க ளிச்சையாகச் செய்ததல்ல ஆகையால் நம்முடைய இரதகஜ துரக பதாதிகளை வீணில் மாளக்கொடுப்பது தகுதியல்ல அவர் இப்படி மடிந்த காலத்தினும் நமக்கு வெற்றிகொடுக்க மாட்டாது அது எப்படியெனில் இராவணனுக்கு வினைவந்து சூழ்ந்தபடியால் இரண்டாயிரம் வெள்ளம்சேனை இராட்சதர்கள் படைத்துணையாக விருந்து அவர்களைச் செயம்பண்ண சத்தியற்றவனாய் மடிந்துபோனான். அவனுக்கு வினையில்லாத காலத்தில் தேவர்களும் எதிர்நிற்க மாட்டாமற் போனார்கள். அப்படிக்கல்லவா தேவியென்று சக்கிரவர்த்திசொல்லிவிட்டு நித்திரைசெய்துவிட்டார் சிலநேரஞ் சென்று நித்திரைதெளிந் தெழுந்திருந்து தன் மனைவியைப் பார்த்துச் சொல்லுகிறார்: கேளும் பெண்ணே நாம் வேட்டைக்குப் போனதாகவு மிவ்விடத்திலே ஒரு மானுங்கலையும் இரண்டு குட்டிகளையும் கண்ணினாலே கண்டதாகவும் அந்தக் கலையை நாய் தொடர்ந்து துரத்

தினதாகவும் மானுங் குட்டிகளும் போனவிடந்தெரியா மற்போனதாகவும் கலையை முன்னங்காலை நாய் பிடித்த தாகவும் பின்னை ஒரு மான் வந்து கலையுடனே கூடி மேய்ந்ததாகவும் அந்தக் கலைக்கொரு குறைவில்லாம விருந்ததாகவும் முன்னேடிப்போன மானுங் குட்டிக ளும் வந்து சேர்ந்ததாகவும் இரண்டு குட்டிகளு மந் தக் கலையுங்கூடிக் காட்டிலே தனது இனத்துடனே கூடி வாழ்ந்ததாகவும் இப்படிக் கெல்லாம் நான் கனவு கண்டேனென்று சக்கிரவர்த்திசொல்ல தேவியானவள் கேட்டு மனவருத்தத்துக் குள்ளாகி துயரத்துட னிருக் கையில் புரூரவச்சக்கிர வர்த்தியானவர் தன் மனைவி யைப் பார்த்து பெண்ணே ஏன் வருத்தப்படுகிருய்? 'எலியழுதால் பூனைவிடுமோ' வந்த விபத்தெல்லாம் அனுபவிக்கத்தானே வேண்டும்; ஆகையால் நீ கற்புநிலை தவருமலிருந்தால் எத்தனை விபத்து வந்த போதிலும் என்ன செய்யப் போகுது,

> இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
> துன்பத்துட் டுன்பங் கெடின்.

என்பதுபோல இப்போது வந்திருக்கிற துன்பத் திற்கு ஐசுவரியமென்கிற துன்பத்தைக்கொடுத்தாலின்ப மென்றெண்ணிக்கொள்ளவேணும் அவரவர் வினையை அவரவ ரனுபவிக்கத்தான் வேண்டு மென்று சொல்லி விட்டு எழுந்திருந்து ஸ்நானஞ் செய்து சிவபூசை முதலான தேவாராதனைகளைமுடித்துக்கொண்டு கொலு சிங்காரமாய் நவரத்தின மிழைத்த கிரீடமும் வாகு வலயமுந் தரித்துக்கொண்டு புரூரவச் சக்கிரவர்த்தி யானவர் தன் கொலுமண்டபத்தில் ஒற்றைக்குடை நிழற்ற உபய வெண்சாமரம் வீசச் சிங்காதனத்திலே வந்து உட்கார்ந்து கொலுவீற்றிருக்கின்ற வேளையில் மந்திரி முதலானவர்கள் வந்து அரசனுடைய முகத் தைக் கண்டு அவரவர்கள் செய்யுந் தொழில்களை செய் துக்கொண்டு வருகிற தருணத்தில் சக்கிரவர்த்தியான புரூரவச் சக்கிரவர்த்தி தன்னருகி லிருக்கின்ற மந்திரி யைப்பார்த்துநம்முடையாராணுவங்களுக்கெல்லாம்முன் சம்பளமும் கொடுத்துவிட்டுச் சிறையி லிருக்கப்பட்ட

வர்களுக்கும் பொக்கிஷத்தைத் திறந்துக்கொடுக்கும்படி சட்டளையிட அப்படியே மந்திரியானவர் சக்கிர வர்த்தியுடையக் கட்டளைப் பிரகாரஞ் சகல ஜனங்களுக்குங் கொடுத்தது மல்லாமற் பறையறைவித்து வந்து கேட்ட பேருக்கு அபரியாய் ஓர் குறைவில்லாமல் நடத்திவருகையில் இந்தச் சமாச்சாரத்தை அந்தப்புரத்தைச் சுற்றி வளைத்துக்கொண் டிருக்கிற அரசர்களெல்லாருங் கேட்டு திடுக்கிட்டு இதற்கென்ன செய்குவோம் எல்லோரும் நாளையதினம் சக்கிரவர்த்திக்கு சந்தோஷ மாகும்படி காணிக்கை கொண்டுபோய் வைத்துச் சமாதானஞ் செய்துக்கொள்ளுவோ மில்லாவிட்டால் தெய்வலோகதைதக் கார்த்த சக்கிரேஸ்வரனுக்கு நாமொரு எதிரோவென்று ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க, அன்று ராத்திரி சனீஸ்வர பகவானுடைய மாய்கையினல் சக்கிரவர்த்தி,

எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ தென்ப திழுக்கு. (குறள்)

என்றதுபோல எண்ணிக்கொண்டு தன்னுடைய தேவியைப் பார்த்துச் சொல்லுகிருர்: வாரும் பெண்ணே! இந்த ஐஸ்வரியத்தின் பேரில் மறுமண்டலத் தரசர்கள் இச்சைகொண்டு கோட்டையைச்சுற்றி வளைந்திருக்கிருர்கள். ஆகையாலிந்த ஐஸ்வரியத்தைவிட்டு அகன்று போகவேணும் நமக்கும் ஐசுவர்யம் வரும்போது தானேவரும் அதற்கிப்போது இராக்காலம் வந்தது நாம் இந்த நகரத்தைவிட்டுப் போகவேணுமென்று சக்கிரவர்த்தி சொல்ல ஜெயப்பிரதையானவள் நீர் மகத்தாகிய கீர்த்தியைப் பெற்ற சக்ரேஸ்வரனுகிய உம்முடைய திருவுளத்திற் கேற்றபடி நடக்கின்றேனென்று சொன்ன தேவியைப்பார்த்து சந்தோஷப்பட்டு இருவரும் ஆடையாபரணங்களைக் கழட்டிவைத்துப்போட்டு ஒரு பழங் கந்தையை தரித்துக்கொண்டு இரண்டு பிள்ளைகளையும் பேருக்கொரு குழந்தையாக வெடுத்துக் கொண்டு அரண்மனையை விட்டுப் புறப்பட்டு குதிரைக்குப் புல் கொண்டுவந்தார்கள் பிறகே தொடர்ந்து தன் நகரத்தை விட்டு மறுதேசம் போகையில் வழியில் சக்

கிரவர்த்தியானவர் நாம் தப்பி வந்தோம் இன்னஞ் சில நேரஞ்சென்று வந்தால் தலையாரிகள் விசாரிப்பார்கள் அதற்கு மூன்னமே வந்துவிட்டோமென்று பேசிக் கொண்டு நடக்கையில் சனீஸ்வரபகவானுனவர் ஒரு பிராமணனாக தனியே போகிறவன்போல வந்து நீங்க ளார் எங்கு போகிறீர்களென்று கேட்கப் புரூரவச்சக்கிர வர்த்தி நாங்கள் பரதேசிகள் பிழைக்கவந்த விடத்திலே கலகமென்று சொன்னபடியால் மறுபட்டணத்திலேயா வது போய் பிழைக்கலாமென்று புறப்பட்டோமையா வென்றூர்கள். அதற்கு சனீஸ்வரபகவானாகிய பிராம ணன் ஐயோ இந்தச் சிறுகுழந்தைகளையெடுக்க மாட்டா மற்போகிறீர்களேயென்று பச்சாதாபப்பட்டுத் தானொரு குழந்தையை வாங்கிக்கொண்டு நீங்கள் காட்டில் நடக்க மாட்டீர்களாகையால் நீங்கள் என்பிறகே நடப்பீர்களா கில் இந்தக் காடுமலைகளையுங் கடக்கக் கொண்டுபோய் விடுகிறேன் என் பிறகே தொடர்ந்து வாருங்களென்று பிராமணன் கூறச் சக்கிரவர்த்தி நமக்கு நல்ல துணை கிடைத்ததென்று அந்தப் பிராமணன் பிறகே தொடர்ந் துபோக அந்தப் பிராமணன் அநேக தூரம் காடு மலை கள் ஆறுகள் கடந்து ஓர் பட்டணத்தை காண்பித்து நீங்கள் போய் பிழையுங்களென்று தன் கையிலிருந்த குழந்தையை அவர்கள் கையில் கொடுத்துவிட்டுப் பிரா மணனாகிய சனீஸ்வர பகவான் போய்விட்டார்.

பின்பு சற்றுநேரஞ் சென்று சூரியனுதயமாச்சுது; அப்போது புரூரவச்சக்கிர வர்த்தியினுடைய கண் ணுக்கு ஒரு குளம் நந்தவனம் சண்டகம் கமுகு அசோகு தேவதாரு சந்தனம் தேக்கு வாழை பலா மரம் முதலான விருட்சங்களும் நிறைந்த தோப்பும் தாமரை நீலோற்பலம் அல்லி முதலான புட்பங்கள் நிறைந்திருக்கப்பட்ட தடாகத்தைக்கண்டு ராத்திரிநடந் திவந்த ஆயாசத்தை தீர்த்துக்கொண்டு சற்றுநேரஞ் சென்று ஸ்நானஞ்செய்து சிவபூசை முடித்துக்கொண்டு சக்கிரவர்த்தி பிள்ளைகளையும் மனைவியையும் பார்த்து இவர்கள் வருத்தப்படுகிற துன்பத்தைப் பார்க்கும்படி யாய் விதித்தீரோ சிவசிவா வென்று பஞ்சாக்ஷரத்தைத்

தியானித்துக்கொண்டு எழுந்திருந்தும் சகாயத்துடன் பேருக்கொரு குழந்தைகளை எடுத்துக்கொண்டு நடக்கிற போது அவ்விடத்தில் உண்டாகிய அதிசயங்களைத் தேவிக்கும் பிள்ளைகளுக்கும் காண்பித்து விநோதமாகப் பொழுதை போக்கிக் கொண்டு நடக்கிறபோது பாலை நிலமுங்கடந்து நன்னிலமாகிய மருதநிலத்து வருகிற போது வாழை மஞ்சள் இஞ்சி தெங்கு பலா நிறைந்த செந்நெல் மிகுந்த விளைவு கண்டு இது நல்ல நாடிவ் விடத்திலிருந்து பிழைக்கலாமென்று நடக்கும்போது மத்தியானகாலமாச்சுது ஒரு காலத்திலும் நடந்தறியா தவர்களாகையால் நித்திரை மயக்கமும் நடந்த ஆயாச மும் பசி மிகுதியினுல் நடக்கச் சக்தியற்று வழியிலே விழுந்து விட்டார்.

அப்பொழுது அந்த இரண்டு பிள்ளைகளும் அழு கிற சப்தத்தை அடுத்த வயலிலே அறுப்பறுக்க வந்த கூலியாளரில் ஆனந்த னென்கிற பெரியவ ரநேகம் பேருக்கு உபகாரியா யிருக்கிறவன் கண்டு ஏதடா வழி யொன்று போக வழிதப்பி வந்து விழுந்து விட்டார்கள் சிறு குழந்தைகளாக இரண்டு குழந்தைகளுடைய சப் தங் கேட்கிறபடியால் ஒருவன் ஓடிப்போய் பார்த்து வெகு ஆயாசமாய்விழுந்து கிடக்கின்றுர்களென்று சொ ல்லக்கேட்டு, தங்களுக்கு வந்திருக்கின்ற சாப்பாட்டை அவர்களுக்குப் போட்டு அவர்கள் ஆயாசந் தீர்ந்த பின்பு நீங்கள் யாரென்று கேட்க நாங்கள் புரூரவச்சக் கிரவர்த்தியினுடைய பட்டணத்தில் கணக்கெழுதிக் கொண்டிருந்தோம். அவ்விடத்தில் கலகமானபடியினு லெல்லாம் பறிகொடுத்திப்படி வந்து விட்டோமையா வென்றுர்கள்.

நல்லது நாங்கள் கூலியாள் எங்களாலியன்ற மாத் திரம் அன்னவஸ்திரம் கொடுக்கின்றோம் எங்களுக்கு பொதுவிலே வருகிற கூலியை ஆள்விகிதம் பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டு வருகிறோமென்று கூற சக்கிரவர் த்தியும் நல்லது அப்படியே செய்கிறேன் என்று சம்ம திக்க அவர்கள் அதற்கு ஒரு வஸ்திரம்பொதுவில் ஒரு சேலையும் வாங்கி ஒரு வீடுங் கட்டிக் கொடுத்து அன்ன

வஸ்திரத்திற்குக் குறைவில்லாமல் வைத்திருக்கிற காலத்தில் சக்கிரவர்த்தியானவர் சொல்லியது,

கற்பித்தான் போனுனே காக்கக் கடனில்லையோ
வற்பனே வன்னு யரன். (உப்பை)

என்றதுபோல தியானித்துக்கொண்டு இதெல்லாம் ஆண்டவன்செய லல்லாமல் வேறொரு செயலுண்டோ வென்று தேவியுடனே தருமார்த்த காமமோட்சத் தியல்பும் ஞானப்பிரசங்கமும் பேசிக்கொண்டிருக்க தேவியானவள்

தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. (குறள்)

என்பதுபோல வுணர்ந்து நமக்கு பத்தாவே துணையல்லாமல் வேறே தெய்வமில்லை யென்று தியானித்துக் கொண்டு பட்டணத்திலே சகல ஐசுவரியத்துடனே யிருந்து வாழ்க வாழ்விலும் பதின்மடங் கதிகமாகத் தானே எண்ணிக்கொண்டு பத்தாவுந்தானும் ஒரே இருதயமாக வந்த பரதேசிகளுக்கும் உள்ளத்துக்குள்ளே குறைவில்லாமற் செய்துகொண்டு வருகிறசோமபரி என்கிற பட்டணத்திலே சோமேசனென்கிற அரசன் நீதிவழுவாமல் அரசாட்சி செய்துக்கொண்டிருக்கிறது பட்டணத்தில் நவகோடி நாராயணனென்கிறசெட்டியாரென்பவருண்டு ; அவருக்கு முன்னிருந்த செல்வத்திற் இப்போது குறைவு வந்ததென்று,

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (குறள்)

என்பதுபோல தருமத்துக்கு மிஞ்சின ஆக்கமு மில்லை; நாம் தருமஞ் செய்யாதிருந்தபடியினல் நமக்கு செல்வத்திற்குக் குறைவுவந்து நேரிட்ட தென்று கருதி அப்பட்டணத்தி லிருக்கின்ற சாஸ்திர பண்டிதர்களை யழைப்பித்து தன்மனத்திலிருக்கின்ற துயரத்தை யவர்களிடத் தெடுத்தோத, அவர்கள் தருமசாஸ்திரங்களைப் பார்த்து செட்டியாரே! ஆதுலர்க்குச் சாலை ஒருவர்க்குணவு அறுசமயத்தோர்க் குண்டி பசுவுக்கு வாயுறை சிறைச்

சோறுஐம்பதின்பண்டநெல்லால் அரவைச்சோறுமகப் பெறுவித்தல் மகப்பால்வளர்த்தல் அறவைப் பிணஞ்சுடு தல் அறவைத்துரியம் சுண்ணம் நோய்மருந்து வண் ணார் நாவிதர் கண்ணாடி காதோலை கண்மருந்து தலைக் கெண்ணெய்பெண்போகம் பிறர்துயர்காத்தல்தண்ணீர்ப் பந்தல் மடம் தடம் சோலை ஆவுறிஞ்சுதறி விலங்கிற் குணவு ஏறுவிடுத்தல் விலைகொடுத் துயிர்காத்தல் கன் னிகாபரணம் சிவாலயங்களும் பிர்மாலயங்களும் நந்த வனங்களும் இப்போர்க்கொத்த தருமங்கள் வழுவாமல் நடத்தி வருவீராகில் உம்முடைய செல்வத்திற் கெப் போதும் ஓர்குறைவும் வரமாட்டாதென்று சொல்லினர் அதுகளைக் கேட்டிருந்த நவகோடி நாராயணனென்கிற செட்டியாரென்பவர் அதுகளி லொன்றாகிலும் குறை வில்லாமற் கட்டி பின்பு திருக்குளங் கட்டிவைக்க வேணுமென்று அப்படிப்பட்டணத்திலிருக்கின்ற கூலி யாளனாகிய ஆனந்தனென்கிறவனையு மவனைச் சார்ந்த வர்களையும் அழைப்பித்து ஓர் திருக்குளங் கட்டவேண் டும் அதற்கென்ன சொல்லுகிறாயென்று கேட்டதற்கு அவர்களில் பெரியவனாகிய ஆனந்தனென்கிறவன் ஒப் புக்கொண்டு குளம் வெட்டிக்கொண்டு வருகையில் செட்டியாரும் அவர்களுக் குண்டாகிய கூலி விகிதப் பிரகாரம் அளந்துகொடுக்க, அக் கூலியாளர் கணக்குப் பிள்ளைகளுக்கும் ஒரு பங்கு கொடுக்க சம்மதித்து கொடுத்துக் கொண்டு வருகையில் சனீஸ்வரருடைய மாய்கையிலே செட்டியார் புத்திமயங்கி கூலியாளிரைப் பார்த்து இனி நீங்கள் கூலிக்கு வரவேண்டியதில்லை; அவரவர் வீட்டுக்குப் பெண்கள்வந்து கூலியை வாங்கிக் கொண்டு போகும்படி திட்டஞ்செய்தார்.

அந்தப் பிரகாரம் அக்கூலியாளர்களுடைய பெண் கள் வந்து கூலியை வாங்கிக் கொள்ளும்போது உங்கள் கணக்கப்பிள்ளையினுடைய பெண்சாதி யாரென்று தர்ம சிந்தனையுள்ள செட்டியார் சனீஸ்வரன் மாய்கையினால் கேட்க, இவள் தானென்று வந்த பெண்டுகள் சொன்னார் கள். அவளைப்பார்த்து, இவள்தானோ கணக்கப்பிள்ளை பெண்சாதி இவளைப்பார்த்தால் மானிடவடிவாகக் காண

வில்லை: இவ்வளவு சௌந்தரியமாகிய பெண்ணை நாம் கண்டதில்லை; இவள் அழகோ மேகம் போன்ற அளக பாரமும், பிறைபோன்ற நெற்றியும், வில்லுக்குச் சமான மான புருவமும், சேற்கண்டையைப் போலொத்த நேத் திரமும், வள்ளைப்போல் காதும், குமிழம்போல நாசியும் முத்துப்போல பற்களும் பவழத்தை யொத்த வதனமும் பூரணச் சந்திரனைப் போலொத்த முகமும், பொற்கிண் ணத்தைப் போல ஸ்தனமும் இவ்விதமான பெண்ணை நான் கண்டதில்லை; இவள் தெய்வ கன்னிகையோ ஆரோ ? இப்படிப்பட்ட சவுந்தரியமுள்ள நாயகியை இவளுடைய தாய் தகப்பன் இந்தக் கணக்கப்பிள் ளைக்கு விவாகஞ் செய்து கொடுத்ததென்ன ? இந்தக் கூலிகாரனுக்கு வாய்க்கப்பட்டு மிகுதியும் வருத்தப்படுகி ருள் இவள் நம்மிட உடன்படிக்கைக்கு வருவாளோ ? வந்தால் ஓர் குறைவு மில்லாமல் காப்பாற்றுவோம்; இவள் நம்முடைய உடன் படிக்கைக்கு வராவிட் டால் ஒருவார்த்தைகேட்போம். அதற்கு உடன்பட்டா லாச்சு இல்லாவிட்டால் ஒரு தந்திரஞ் செய்வோ மென்று யோசித்துக் கொண்டிருந்த மறுநாள் கூலி யாளர் பெண்டுகள் வந்து கூலி வாங்க, அன்றைய தினம் கணக்கப்பிள்ளை பெண்சாதி எங்கே யென்று கேட்டார். அவள் வரவில்லை யென்று சொன்னுர்கள்.

செட்டியார் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலியை யளந்து கொடுத்துவிட்டு கணக்கப்பிள்ளை கூலியை மாத்திரம் உட்கட்டில் வைக்கச் சொல்லி தன் ஊழியக்காரர்களுக்கு கட்டளையிட்டு கணக்கப்பிள்ளை பெண்சாதி கூலி வாங்க வந்தால் உன் கூலியை மாத்தி ரம் செட்டியார் உட்கட்டில் வைத்துப்போனுர் எடுத் துக்கொண்டு போவென்று சொல்லி கதவைச் சாத்தி விடுங்கள் என்று இரகசியமாகச் சொல்லி யிருக்க, கூலி யாளருடைய பெண்கள் அவரவர்கள் கூலியை மாத்தி ரம் வாங்கிக்கொண்டு கணக்கப்பிள்ளை பெண்சாதியைப் பார்த்து, அம்மா! செட்டியார் இன்றைக்கு கூலி போட்டாரே நீர் போய் வாங்கிக் கொள்ளவில்லையா வென்று கேட்க, அவள் செட்டியார் கூலி கொடுத்தது

நானறியேனென்று சொன்னாள், அதை சக்கிரவர்த்தியாகிய கணக்கப்பிள்ளை மனைவியைப் பார்த்து, நீ போய் அந்தக் கூலியை வாங்கிக்கொண்டு வாவென்று சொன்னபடியால் கணக்கப்பிள்ளை பெண்சாதியாகிய ஜெயப்பிரதை தனியே போய் செட்டியார் வீட்டிலே காவலாக விருக்கிற பெயர்களைக் கேட்க, அவர்கள் நீ கூலி கொடுக்கும்போது வராமையால் செட்டியார் உட்கட்டில் கூலி யளந்து போட்டுப் போனார். நீ போய் எடுத்துக் கொள்ளென்று சொல்ல, இந்த புண்ணியவான் நம்முடைய கூலியை வெளியே வைத்து விட்டுப் போகலாகாதா வென்று முதற்கட்டு வாசற்படி கடந்து அறைவீட்டு வாசற்படிக் கப்புறம் போனாள். முன்னே செட்டியார் சொல்லி யிருந்தபடி அவ்விடத்திலிருந்த ஊழியக்காரர்கள் இரண்டாங்கட்டு வாசற்படி கடந்த பின்பு கதவை சாத்தினார்கள் அந்த சத்தங் கேட்டு உடனே சக்கிரவர்த்தியின் தேவி திடுக்கிட்டு நடு நடுங்கி சிவசிவா வென்று அறை வீட்டைப் பார்க்க, அவ்விடத்தி லொருவரையும் காணாமையால் அந்த அறைவீட்டுக் கதவை யடைத்துக் கொண்டு இதேதோ கபடமார்க்கமா யிருக்கின்றது நாம் தனியே வந்து மோசம் போயினோம் வெளியே நில்லாம லறை வீட்டிலே ஏன் புகுந்தோம் நம்முடைய வினையின் செயலென்று சக்கிரவர்த்தியையும் பிள்ளைகளையும் வெறுக்கி நம்மையும் அறைவீட்டில் அகப்பட்டுக் கொள்ளும்படி நேரிட்டபடியால் இனி நாமென்ன செய்வோமென்று தன்னுடைய பத்தாவை நினைத்துக் கொண்டந்த கூறைவீட்டை பார்க்குமிடத்தில் ஒரு பேழையைக் கண்டு சீக்கிரமா யதிலே புகுந்து மூடிக் கொண்டு இந்த பேழை என் பத்தா வந்து தீண்டின காலத்தில் திறக்கவும் மற்றப்படி நீரிலே போட்டாலு மாயுதங்களினாலே வெட்டினாலும் ஓர் சலன மில்லாம லிருக்கும்படி தன் பத்தாவையே தியானித்துக்கொண்டு நானுண்மையாக என் நாயகனுக்கோர் குறைவில்லாமல் நடந்தது மெய்யாகில் நான். சொன்ன சபதத்துக்கு ஓர் குறைவில்லாமல் நடக்க வேணுமென்று நினைத்து மறுபடியும் நான் பத்தாவைக் காணகிறவரைக்கும் ஆகா

ரம் நித்திரை பசி யில்லாம லிருக்கவேணுமென சபத மிட்டு பேழையை மூடிக்கொண்டாள்.

நவகோடி நாராயண செட்டியார்வந்து தன் ஊழி யக்காரரை யழைத்து கணக்கப்பிள்ளை பெண்சாதி வந்த வுடனே இரண்டாங்கட்டுக் கதவைச் சாத்தும்படி சொல்லியிருந்தேனே அவளெங்கே யிருக்கிறுள் என்று கேட்க ஐயா அந்த அறைவீட்டிலே தானே போனுள். அவள் போய் நுழைந்தபிறகு அந்தக் கட்டுக் கதவை சங்கிலி போட்டுக்கொண்டோம் அவளை திரும்பிக் காணேமையா வென்ருர்கள். செட்டியாரு மவளெங்கே போவாள் நமது அரைவீட்டை பாருங்களென்ருர். அவ்விடத்திலேயுங் காணமையால் அந்தவீட்டி லிருக் கிற பேழையைப் பார்க்க இதென்ன புதுமையா யிருக் கின்றது. பூட்டு மில்லாமல் திறவுகோலு மில்லாமல் திறந்துகிடந்த இந்த பேழை திறக்கப்படவில்லை யென் ருர்கள்.

இவ்விடத்தில் வந்தவள் திறக்கப்படாமலிருக்க என்ன வுபாயஞ் செய்தாளோ வென்று கோடலியைக் கொண்டு பிளந்து பாருங்களென்ருர் அவர்களப்படியே கோடாலியாலே வெட்ட கோடாலிவாய் மடிந்ததே யல் லாமல் பேழையின்பேரிலே கோடாலித்தழும்பு படாம லிருக்க அதை செட்டியார் பார்த்து இதென்ன காரண மென்று நானுவிதமான தந்திர வுபாயங்கள் செய்து பார்க்க அதனு லப்பேழையை திறக்கச் சக்தியற்றவனுய் என்ன வுபாயஞ் செய்வோம் கணக்கப்பிள்ளையானவன் தேடிவருவா னவன் வருகிறதற்கு முன்னமே அந்த வீட்டை நெருப்புவைத்து கொளுத்திவிட்டால் தேடி வந்தபேருக்கு கூலிக்காக அந்த அறை வீட்டிற்போன வள் இறந்தாளென்று சொல்வோமென்று யோசித்து அந்த வீட்டைக்கொளுத்த அந்தவீடும்வெந்து அதற் கடுத்த வீடும் வெந்துபோய் பேழைமாத்திரம் வேகாம லிருக்க இதுவரையில் ஒருவருந் தேடி வரவில்லையே ஆகையா லினி என்ன தந்திரஞ் செய்வோமென்று பேழையை எடுத்து வரச்சொல்லி பார்க்க முன்னிருந்த மாசி தீர்ந்து முன்னிலும் பிரகாசமாக யிருப்பதைக்

கண்டு செட்டியானவன் மிகவும் பயந்து கைகால் நடுக்க முற்று வாய்வறண்டு நாவுலர்ந்து ஒன்று நினைக்க ஒன்று முடிந்ததே இனி என்னசெய்வோம் இந்த பேழையி லேயே அவசிய மிருக்கிருள்.

இந்த இராச்சியத்தை யாளுகிற அரசன் கேள்விப் பட்டால் ஆக்கினை செய்வான் விருதாவில் வீட்டைப் போக்கடித்ததுமல்லாமல் பொருள் சேதமாய்போயும் பொல்லாத காலமாயிருக்கிறது என்று பயந்து அந்த செட்டியானவன் இப்பேழைக்கு கருங்கல்லைக்கட்டி சமுத்திரத்தில் போட்டுவிட்டான் ஓர் வில்லங்கமில்லை யென்று நினைத்துக்கொண்டு அந்தமானென்கிற தீவுக் குப் பிரயாணமாக விருக்கிற கப்பலிலே பேழையை ஏற்றி தானுங் கப்பலேறிப்போய் வெகுதூரஞ் சென்று அந்தப் பேழையை கப்பலைவிட்டு தண்ணீரிலே போடுவ தற்கு எடுக்கும்போது ஓஓ செட்டியாரே ! ஏன் சமுத்தி ரத்திலே போடுகிறீர் போட்டால் உம்மைவிடப் போகிற தில்லை எனக்கொரு நோன்புண்டு அது முடிவதற்கு ஏழரை வருஷம் செல்லும் அது தெரியாமல் பொல் லாத நினைப்பு நினைத்தீர் நோன்பு முடிகிறவரையில் ஒருவர் முகம் பார்க்கவொண்ணு தாகையால் இப்படி பிரதிக்கினை செய்துகொண்டேன் நோன்பு முடிந்த காலத்திலே பேழை தானே திறக்குமென்று ஜெயப் பிரதைசொல்லவே அதற்கு நவகோடி நாராயணசெட்டி யார் நோன்பு முடிய வெகுநாட் செல்லும் அவள் உயி ருடனிருந்தால் பார்த்துக் கொள்ளுவோம் இல்லாவிட் டால் சமுத்திரத்திலே போட்டுவிடுவோமென்று தன் மனதைத் தானே ஒருவாருக திடப்படுத்திக் கொண்டு அந்தமானென்கிற தீவுக்குப்போய் கப்பலை விட்டிறங்கி அக்கரை சேர்ந்து கரைக்கு சமீபத்திலொரு உப்பரிகை கட்டி அந்தப் பேழையை வைத்துக் கொண்டு மிக சாக் கிரதையோடு நித்தியம் அந்த பேழையினிடத்தில் வந்து சுவாசமுண்டாயிருக்கிறதுமில்லாததும் பார்த்து க்கொண்டு தன்னுடைய சொந்த வர்த்தகத்தைசெய்துக் கொண்டிருந்தனரென்றும், ஸ்ரீ வேதவியாசர் சொல்ல தருமராஜன் அந்த புரூரவச் சக்கிரவர்த்தியும் பிள்ளை களும் எவ்வாருகப் போனுர்கள் என்று கேட்க, வேத

வியாசர் சொல்லுகிருர் : வாராய் குருகுலோத்தமனே! புரூரவச்சக்கிரவர்த்தியாகிய கணக்கப்பிள்ளை தன் பிள்ளைகளை பாதுகாத்துக் கொண்டு அந்த குடிசையில் இருக்கிற வேளையில் கணக்கப்பிள்ளையினுடைய இடது பக்கத்தில் துடிக்கவும் இவ்விதத் துற்குணங்களைக் கண்டு இதென்ன விபரீதமாக விருக்கின்றது.

ஊழில் பெருவலி யாவுள மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும் (குறள்)

என்று தியானித்துக் கொண்டு நம்முடைய நாடு இராச்சியம் முதலானதும் விட்டு இவ்விடத்தில் வந்து கூலியாளருக்கு ஆளானதும் போதாமல் இன்றைக்கு இத்தனை துற்குணங் கண்டதிஞலே என்னவிபரீதம் விளையப் போகிறதோ கூலி வாங்கப் போனவள் இன்னம் வரவில்லையே நம்மையொரு நிமைப்போதாகிலும் விட்டு பிரியாதவள் ஒரு ஜாமம்வரை பிரிந்தால் செட்டியார் வீட்டுக்குப்போய் விசாரித்து வருவோமென்று இரண்டு குழந்தைகளையும் இரண்டு தோளில் எடுத்துக் கொண்டு செட்டியார் வீட்டிற்கு வந்து அவ்விடத்தில் காவலாக நிற்கின்ற பெயரைக் கேட்குமிடத்தில் அவர்கள் உம்முடைய பெண்சாதி வந்து கூலி கேட்டதற்கு நாங்கள் நீ வாராமையால் செட்டியார் உன் கூலியை மாத்திரம் உட்கட்டில் போட்டுவைத்திருக்கிருர் அதை எடுத்துக்கொள்ளென்று சொன்னேம். அவளுமப்படி இரண்டாங் கட்டிற்குப் போனுள். வீடு தீப்பட்டு வெந்துபோச்சுது அந்த வீட்டில் அவளைக் காணேம். செட்டியார் வீடு வெந்துபோச்சுதென்று வியாகூலப் பட்டுக்கொண்டு அந்தமானென்கிற தீவுக்குப் போய் விட்டார். இதுதான் நாங்கள் அறிந்தது யென்ருர்கள். கணக்கப்பிள்ளையாகிய சக்கிரவர்த்தியுந் திகைத்து, ஐயையோ இக்குழந்தைகளை எடுத்துக்கொண்டு போகாமற் போய்விட்டாளே நானெப்படி காப்பாற்றப்போகிறேன் சிவசிவா இதற்கோ நான் சரீரமெடுத்தது,

வேண்பா.

இல்லா ளகத்திருக்க யில்லாத தொன் றில்லை
இல்லாளு மில்லாளே யாமாகில்—இல்லாள்

வளிகிடந்த மாற்ற முறைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறுப் விடும். (ஔவையார்)

என்று பெரியோர்கள் சொன்னது பொய்யோ இக் குழந்தைகளினுடைய வருத்தத்தால் இறக்கவும் முடியா தென்று மனங்கலங்கி பெண்சாதியை இழந்து வாழ்வதி லும் பெருகிற ஆற்றிலே விழுகிறது நலமென்று கருதிக் கொண்டு ஒரு மனதால் அவ்விடம் விட்டு விழுந்த விடம் சுடுகாட்டென்று ஒரு காட்டின் வழியே நடந்து போனார்.

அப்போது சனீஸ்வர பகவான் பிள்ளைகளை பிரிக்க வேண்டுமென்று நினைத்து மின்னலு மிருட்டு மாக யுகாந்த காலம்போல வருஷங்கள் பெய்து எங் கும் வெள்ளப் பிரவாகமாய் ஒரு காட்டாறு வரக்கண்டு, சக்கிரவர்த்தி இருந்திருந்து வருத்தப்படுகிறதிலும் இந்த ஆற்றில் விழுந்து இறப்பதே நலமென்று மிகுதி யுங் கிலேசப்பட்டு பிள்ளைகளால் மனதைத் தேற்றிக் கொண்டு ஒரு செடியருகே போய் ஒரு குழந்தையை கொடியாலே கட்டிப்போட்டு மற்றொரு குழந்தையை எடுத்துக்கொண்டு ஆற்றை நீஞ்சி அக்கரையேறி அந் தக் குழந்தையை யங்கொரு செடியருகே கொடியினாலே கட்டிவைத்து அக்கரையிலிருக்கிற குழந்தையை எடுக்க வருகிறபோது ஆற்றுஜலம் பெருக்கெடுத்து அரசனை யடித்துக்கொண்டு போகிறபோது ஆற்றில் மிதந்து வருகிற கட்டையைப் பற்றிக்கொண்டு நானென்ன செய்யப் போகிறேன் இந்த வனத்திலிருக்கின்ற தேவதைகள்தான் என் குழந்தைகளைப் காப்பாற்ற வேண்டியது என்னைச் சூழ்ந்த வினையானது என் குழந்தைகளையும் ஒருகரையில் சேர்க்கவொட்டாமற் செய்து விட்டது சனீஸ்வரன் மாய்கையென்று மகா துயரத்துடன், சிவசிவா! கைலாசவாசா! ஆதிநா ராயணா! என்பிள்ளைகள் உங்களடைக்கலமென்றுவேண் வக்கொண்டே ஆற்றிலே மிதந்துப்போகையில் தெய்வ மென்கிற பட்டணத்து இடையர்கள்கண்டு, யாரோ ஒரு டின் ஆற்றிலே மிதந்துபோகிறான். இடையரே வாருங் களென்று தொடர்ந்து போகும்போது அருகாமையாய்

வருகிறதைப்பார்த்து உயிருடனிருக்கிறுரென்று தங்கள் கையிலிருக்கிற துறட்டுக்கோலை நீட்டி அத்துறட்டுக் கோலைப் பிடித்துக்கொண்டு கரையில் வர அவனுக்கு நடுக்கல் தீரும்படியாக அக்கினியைப் போட்டு தெளியச் செய்து அவளைப்பார்த்து நீ யாரென்று கேட்க, கணக் கப்பிள்ளையாகிய சக்கிரவர்த்தி சொல்லுகிறுர்.

நானொரு இடையனுக்கு ஆடு மேய்த்துக் கொண் டிருந்தேனதிலே ஆட்டிக்குட்டியும் பிரிந்து போச்சுது, அதைத் தேடி வருகிற வழியிலே ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டேனென்று கூற, இடையரும் இவன் நல்லவ னென்று உணர்ந்து அருகே வைத்துக்கொண்டு உன் பெயரென்னவென்று கேட்க, என் பெயர் ஆனந்தகோ னென்ருர். இடையரும் மகா சந்தோஷப்பட்டு ஆடா வது குட்டியாவது மேய்த்தால் வயிற்றுக் கன்னங் கொடுக்கிறேம் உமக்கு சம்மதியாவென்றுகேட்டார்கள். நல்லதென்று சம்மதித்து அவர்கள் ஒரு கம்பிளியுங் கொடுத்து தங்களுக்கு வந்த அன்னத்தில் கொஞ்சம் பகுந்து அப்பா! நீ ஆட்டின் பிறகே திரியமாட்டாய் குட்டிகளை மேய்த்துக்கொண்டு வந்து தொழுவத்தில் அடைத்து அருகே சயனித்துக் கொண்டிருவென்று கூற அப்படியே நல்லதென்று குட்டிகளை மேய்த்துக் கொண்டு இடையர் கொடுத்த அன்னத்தைப் புசித்து,

காலங்கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். (குறள்)

என்பதுணர்ந்து இதுவுங் கர்த்தாவின் செயலென்று இருந்தார்.

அது நிற்க, ஆற்றின் கரையில் கட்டியிருந்த குழந் தைகளை ஓர் இடைச்சி தயிர் விற்பனை செய்துவிட்டு அவள் வீட்டிற்குப் போகும்போது செடியருகே ஒரு குழந்தை யழுகிற சத்தங் கேட்டமாத்திரத்தில் அவள் புத்திரபாக்கிய மில்லாதவளாகையால் புத்திராபேட்சை யால் அந்த பிள்ளையைக் கண்டவுடனே எடுத்துக் கொண்டு ஒருவருக்குங் காணுமற் போகவேண்டுமென்று குழந்தையை கொடியினுலே கட்டியிருப்பதைக் கண்டு இக் குழந்தை தாய்தகப்பன் செடியினருகே கட்டிவைத்

துப் போனார்களோ வென்று சுற்றிலும் பார்க்க, ஒரு வரையுங் காணுமையால் நாம் எடுத்துக்கொண்டு போய் வைத்திருந்தால் தேடிவந்தவர்களுக்கு கொடுப்போ மென்று ஓர் மனதாய்க் கொடியை யறுத்து அக் குழந் தையை தயிர்பானையில் வைத்துக்கொண்டு ஆறுகடந்து அக்கரைபோக, அங்கொரு குழந்தையும் எடுத்துக் கொண்டு இதுவும் தெய்வச்செயலென்று போனனந் தத்தை யடைந்து அக்குழந்தைகளை இடுப்பில் வைத் துக்கொண்டு இரண்டு குழந்தைகளுக்கும் நானுவித மான பிரிய வசனங்களால் தேறுதலைசொல்லி தானிருக் கிற இடத்திற்குக் கொண்டு வந்து அந்தக் குழந்தை களுக்கு ஸ்நானம் செய்வித்து திருநீறுமிட்டு கலத்திலன்னமிட்டு பசுவின்பாலை வார்த்துப் பிசைந்து அமுதூட்டி வாயைச் சுத்திபண்ணி அக் குழந்தைகளை துயிலச்செய்து தானும் அருகே சயனித்திருந்தாள். மறுநாட் காலை அக் குழந்தைகளை யாராகிலும் பார்க் கப் போகிறார்களென்று அரைவீட்டில் வைத்து தானு மவர்களை விட்டுப் பிரியாமல் வளர்த்துக்கொண்டு வரு கையில் அக்குழந்தைகளுக்கு ஐந்து வயதான பின்பு இடைச்சி அக்குழந்தைகள் கையில் கோலைக் கொடுத்து மாடு கன்று ஆடு மேய்க்கச் சொல்லி யனுப்ப, அந்த பிள்ளைகள் கோலுகளை எரிந்துவிட்டு தங்களுக்குள்ளே தாங்களே ஒரு கொடுவாளால் சிறுகோல்களாகவெட்டி கையிற் பிடித்துக்கொண்டு இது வில்லென்றும் அம் பென்றும் ஆயுதங்களென்றும் ஒருவர்க்கொருவர் அதுவே விளையாட்டு விளையாடி வருகிறதை தன் இடைச்சி கண்டு இவர்கள் இராச குமாரர்களென்று மதித்து அக்குழந்தைகளைச் சிலம்பத்துக்கு விடவேணு மென்று நினைத்து ஒரு ஆசாரியனைத் தேடி, அதற்குச் செய்யவேண்டிய கிரியைகளுஞ்செய்து அப்பிள்ளைகள் சிலம்பத்தொழில் முதலான ஆயுத பரிட்சை களும் குதிரையேற்றம் யானையேற்றமும் இன்ன மும் அநேகவிதமான வித்தைகளும் கற்று கல்வியிற் சிறந்தவர்களாகவுந் தங்களுக்குத் தாங்கள் எஜமான னென்று ஓர் அரசனைப்போல இடைச்சி வீட்டில் இரண்டு பிள்ளைகளும் வளர்ந்துகொண்டு வருகிறார்கள்.

அவர்களப்படி யிருக்க, செய்தவமென்கிற பட்டணத்தில் செய்தவனென்கிற அரசன் இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டு வருகிற காலத்தில் ஒரு நாள் சனீஸ்வர பகவான் ஒருகன்ன மிடுகிறவனைப் போல வேடம்பூண்டு கருங்கச்சை இடுப்பில் கட்டிக்கொண்டு அநேக கன்ன மிடுகிறவர்களைச் சேர்த்துக் கன்ன மிடுகிறவர்களுக்கு பெரியவனென்று பெயர் வகித்துக் கொண்டு செய்தவபுர மென்கிற பட்டணத்திற்கு வந்து இடையனாகிய புரூரவச் சக்கிரவர்த்தியைத் திருடனாகச் செய்யவேண்டுமென்று நினைத்துச் சனீஸ்வரன் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிற சமயத்தில் ஒருநாள் இடையன் வீட்டிலிருக்கிற புரூரவச் சக்கிரவர்த்தி ஆட்டுக் குட்டியின் சமீபத்தில் நித்திரை செய்திருந்தார். காலையி லெழுந்திருந்து ஸ்நானஞ்செய்து நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு அன்னம் புசித்துப் பின்பு ஆட்டுக் குட்டிகளைக் காட்டிற் கொண்டுபோய் மேய்த்துக் கொண்டிருக்கையில் அவ்வனத்தில் வாசஞ் செய்கின்ற அன்னப் பட்சிகளையும் மயில்களையும் பார்த்து நீங்களினம் பிரிந்தவர்களைக் கண்ணினாலே பார்க்க வொண்ணாதோவென மனத்துயரஞ் சொல்லிக்கொண்டு ஆட்டுக்குட்டிகளை ஓட்டிவந்து தொழுவத்தி லடைத்து விட்டு அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு இடையர் கொடுத்த அன்னத்தைப் புசித்துப் பின்பு ஆட்டுக் கடாவருகே நித்திரை செய்ய வேணுமென்று ஈச்சங் கந்தையைப் போட்டு சயனித்துக் கொள்ளப்போகச்சே அவ்விடத்தில் ஒரு கௌளி சொல்ல, அதனைச் சக்கிரவர்த்தியாகிய இடையன் கேட்டு இன்றையதினம் நமக்கு பெரியதாகிய இக்கட்டு வருமென்று சொன்னபடியால் நம்முடைய இராச்சிய முதலானதுகளையும் பெண்சாதியு பிள்ளையுமிழந்து ஆட்டுக்குட்டியை மேய்த்துக் கொண்டு அரையில் கட்ட வஸ்திர மில்லாமலிருக்கிற என்னை என்னசெய்யப் போகிறது செய்கிற தெல்லாம் கண்ணாலே பார்ப்போமென்று நினைத்துக்கொண்டு,

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். (குறள்)

என்று சொன்னது பொய்யோ இளப்பகை யின்றேடே நிற்கும் வினைப்பகை யனுபவித்துத்தானே தீரவேண்டும் என்ன விபத்து வந்தபோதிலும் நாமே யனுபவிக்க வேண்டுமென்று சிந்தித்துக்கொண்டு நித்திரை போகச்சே அன்றையதினம் இராத்திரி கன்னக்காரனுகிய சனீஸ்வர பகவான் செய்தவனென்கிற வரசன் அரண்மனைக்குட் சென்று அரசன் பெண்சாதியாகிய திலர்த்தவதியாள் நித்திரை பண்ணுகிற அந்தப்புரத்திற்குப் போய் அவளுடைய இரத்தினுபரணங்கள் வைத்திருக்கிற அபாஞ்சிப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகும்போது அரசன் தேவி நித்திரை தெளிந்து ஆளரவத்தைக் கண்டு தன் ஆபரணப் பெட்டியைப் பார்க்குமிடத்தில் காணுமையாலுடனே அரசனுக்குத் தெரிவிக்க அரசன் நகரத்துக்கு காவலாகவிருக்கிற பெயரை அழைத்து நம்முடைய அரண்மனையிலே யிருக்கிற இரத்தினபூஷணப் பெட்டியைக் கன்னக்காரர்களெடுத்துக்கொண்டு போனுர்களாகையால் அதை கொண்டுபோன திருடனை இப்போது கொண்டு வந்தாலாச்சுது; இல்லாவிட்டாலுங்களுக்கு ஆக்கினை நேரிடுமென்று ஆக்யாபித்தான்.

உடனே காவற்காரர்கள் தீவட்டியை பிடித்துக் கொண்டு திருடன் போனவழியே தேட கள்ளக்காரர்கள் பேழையைப் போட்டுவிட்டாலும் காவற்காரர்கள் நம்மை விடார்களென்று நினைத்து ஆட்டுக்குட்டியினருகே நித்திரை செய்கிற சக்கிரவர்த்தியாகிய இடையனருகில் வைத்துப்போட்டுக் கன்னக்காரர்கள் மறைந்துவிட்டார்கள். பின்தொடர்ந்துவந்த காவற்காரருமடியைவிடாமற் சூரியனுதயமாகிற சமயத்தில் ஆட்டுக்குட்டியினருகே சூரிய பிரகாசம் கொண்டிருக்கிற அந்த இரத்தின பூஷணப் பெட்டியைக் கண்டு நடக்க சக்தியற்றவனுய் பெட்டியை அருகே வைத்துக்கொண்டு நித்திரையை செய்கிறவனைப் போல நித்திரை செய்கிருனென்று சமீபத்தில் வந்தெழுப்ப சக்கிரவர்த்தியான இடையன் திடுக்கென்று விழித்துக் கொண்டு திகைத்தாற்போல் நின்ருர். அப்போது காவற்காரர்க

ளிவன்தான் திருடனென்று கட்டி அப்பேழையை எடுத்துக்கொண்டு நகரத்திற்கு வரும்போது வேடிக்கை பார்ப்பவர்களிவன் திருடனல்ல இவனைப் பார்த்தால் அரசனைப்போ லிருக்கிறான். இத்தருணத்தில் பரதேசி காவற் செட்டியாரு மில்லையென்பாரும் அவர் முன்னொரு திருடனை ஆக்கினைசெய்யவொட்டாமல் விடுத்தாரென்பாரும் செட்டியார் இவனைக் கண்டா லாக்கினை பண்ணுமல் செய்விப்பாரென்பாரும் அவரும் ஊரிலில்லை யென்பாரும் இதுவும் இவன் பண்ணின பூசாபல மென்பாரும் வேறொருவிடத்துக் களவுமல்லவே அரசன் தேவி யிருக்கிற அந்தப்புரத்துக்குப் போய் கன்னமிட்டவனுக்கு மன்னிப்பு முண்டோ வென்பாரும், இப்படிப்பட்டவன் முகத்தில் முழிக்கக்கூடாதென்று இப்படி திருடினவனைக் கண்டதில்லை யென்பாரும் கோட்டை கடந்து அரண்மனைக்குள்ளே புகுந்து சித்திரமாளிகையிலிருந்த ஆபரணப்பேழையை எடுத்தவன் கன்னக்காரர்களுக்கெல்லாம் பெரியவனென்பாரும் இவனரச னென்பாரும் இவ்வரச னென்செய்வாரோ னென்பாரும் இவனைப் பார்த்தால் ஸ்திரீகள் மயங்கி இவன் மன்மதனே வென்பாரும் இப்படிப்பட்ட புருஷனைக் கண்டதில்லை யென்பாரும் வினைவந்து சூழ்ந்ததைப் பாரீரென்பாரும் இப்படியாகப் பட்டணத்திலுண்டான ஜெனங்களும் பல பல விதமாய் அவர்களுக்குத் தோன்றினபடி சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு நம்முடைய வினையின்பயன் இப்படி நடந்ததென்று மகா பரிசுத்தமான மனதுடனே வீதிவழியே போகிறபோது காவற்காரர்கள் முன்னும் பின்னுமாக அரசன் சமூகத்திற் கொண்டுபோக, அத்தருணத்தில் மந்திரி பிரதானிகள் புரோகிதர்கள் வித்வச் சிரோன்மணிகள் மற்றுமுள்ள பரிஜனங்கள்சூழ்ந்த சிங்காதனத்தில் அரசன் பூச்சக்கிரக்குடை நிழலியற்ற உரியவெண்சாமரை வீச அநேகம் பெண்கள் நடனம் பண்ணிக்கொலுச்சிங்காரம் பண்ணிக்கொண்டிருக்கிற சமயத்தில் தூதரும் போய்? சுவாமி! கட்டளையின்படி திருடனைக் கொண்டு வந்தோமென்று சொல்ல, அரசனும் அவ

னைக் கொண்டுவரும்படி கட்டளையிட, அப்படியே அரசன் முன் கொண்டுபோய் விட்டனர்கள்.

அரச னிவனைப்பார்த்து இவன்தானே நம்முடைய அந்தப் புறத்தில் திருடினவன் இவனுடனே கூடித் திருடினவர் ஆராகிலு முண்டோ? அவர்க ளோடிப் போய்விட்டார்களோ? இவன் ஓடாமல் அகப்பட்டுக் கொண்டானே? திருடுகிற வல்லவன் அகப்படமாட்டான். நீங்கள் நம்முடைய ஆக்கினைக்குப் பயந்து ஒருவனைக் கொண்டுபோய் இந்தவேளைத் தப்பித்துக் கொள்ளுவோமென்று இவனைப் பார்க்குமிடத்தில் நம்மிலும் மகா சுந்தரமாகிய தேககாந்தியுடனே யிருக்கிறான். அதுவுமல்லாமல் முடிதரித்தராஜாக்களுக் குண்டாகிய லக்ஷணங்களும் இருக்கின்றது இவனுங்களுக் கென்ன குறைசெய்தானே? இவனைத் திருடனென்று என்முன் கொண்டுவந்தீர்கள். இவனிருக்கிற லக்ஷணத்தைப் பார்த்தால திருடனென்று சொல்ல மனம் வரவில்லை. உள்ளபடி நடந்ததைச் சொல்லுங்களென் றரசன் கேட்க, வேவுக்காரர்கள் நாங்கள் உள்ளபடி கண்ணினுற் கண்டதைச் சொல்லுகிறோமையா சுவாமி அரண்மனை மனிதர்களும் கன்னமிட்ட வாசல் முதலாகச் சோதித்துக்கொண்டு அடிக்கண்டுபிடித்து அடியின் பின்னே தொடர்ந்துபோனபடி மற்றொருவிடமும் பிசகாமல் தொடர்ந்து போகும்போது சூரியனுதயமாகிய வேளையி லிவன் ஓட சக்தியற்றவனாய் பெட்டியைக் கம்பளியாலே மறைத்துக்கொண்டு இடையனைப் போல் ஆட்டுக்குட்டியருகே படுத்துக்கொண்டிருந்தான். நாங்கள் போய் பிடித்துக் கொண்டோமென்று சொல்லி ஆபரணமிருக்கிற அபரஞ்சிப்பெட்டியை அரசன் முன்வைக்க அரசனும் திருடனைப் பார்த்து அடா திருடா! நம்முடைய அரண்மனையில் கன்னமிட்டவன் நீதானே வேறேயுண்டோ அனுமான முண்டானல் சொல்லென்று கேட்கப் புரூரவச் சக்கிரவர்த்தியான திருடன்,

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். (குறள்)

திருடனென்கிற வல்லமைபோ விழிவாகிய துன்பம் நேரிடுமென்று யெண்ணிக்கொண்டு ஒரு மனதாய் தான் திருடினவன் அங்க சாதனத்துடனே களவு அகப்பட்டிருக்கச் சந்தேகப் படுகிறதேது சந்தேகப் பட்டா லுமக்குத் தோன்றினபடி செய்யுங்களென்று சொல்லக் காவலாளிகள் அரசன் சமூகத்தில் திருடனிவனே திருடனென்று சொல்லக்கேட்டு அரசன் சபையாரைப் பார்த்து இவனையறிந்த பேர்க ளுளரா வென்று கேட்க நாங்கள் ஒருவரு மிவனை யறிந்திருக்க மாட்டோமென்று சொன்னார்கள். அரசன் மந்திரிகளையும் சாஸ்திர பண்டிதர்களையும் பார்த்து நம்முடையபேரில் நிந்தையான குற்றங்க ளுண்டாயிருந்தால் சொல்லுங்க ளென்று கேட்க அரசனுக்குத் தேவரீருக்கு ஒரு நிந்தையுமில்லை அந்தப்புரத்தில் திருடினவன் அங்கசாதனத்துடனே அகப்பட்டிருக்க அவனை ஆக்கினை செய்கிறதற்கென்ன யோசனையென்று அவர்கள் சொல்ல அதற்கரசன் இவ்வரசனுக்கென்ன ஆக்கினைவிதிப்பது சொல்லுங்களென்று கூற, அதற்கு சாஸ்திரிகள் தர்மசாஸ்திரப் பிரகாரம் சூத்திரர் ஆக்கினை செய்யவேண்டு மென்றார்கள் அரசனும் கொலையாளரை யழைப்பித்துத் தன்கையிலிருக்கிற கணையாழி மோதிரத்தை யவர்கள்கையிற் கொடுத்து இவனை ஒரு காலும் கையும் வாங்கிப் போடுங்களென்று கட்டளையிட அக்கொலையாளிகள் அந்தத் திருடனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு கொலைசெய்கிற விடத்திற் கொண்டு போய் அஸ்தமிக்கிற தருணத்தில் ஒருகாலையும் ஒருகையையும் துண்டித்துப் போட்டு அரசன் சமூகத்திற்கு வந்து திருடனை ஆக்யாபித்த பிரகாரம் செய்துவிட்டோமென்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

பின்பு இவ்விடத்தி லொருகாலும் கையுமிழந்த இடையனுன புரூரவச் சக்கிரவர்த்தியானவர் சிவ சிவா! பார்வதி சமேதா! திரிபுரதகனு! மங்கைபாகா! என்னுடைய வருத்தம் உமது திருவுளத்துக்கே பாங்கென்று தன் பிள்ளைகளையும் பெண்சாதியையும் நினைத்துக் கொண்டு களையாய் விழுந்து சிறிதுநேரஞ்சென்று தெளிந்து,

ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறாஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர். (நாலடியார்)

என்று தியானித்துக்கொண்டு இன்னம் வருகிற துன்பமெல்லாம் வரட்டும் இதுகளெல்லாம் ஆண்டவனுக்குத் திருவிளையாட்டென்று பஞ்சாட்சரத்தை செபித்துப் பின்பு சரஸ்வதியம்மனை நினைக்க சரஸ்வதியானவள் ஒரு மூக்கிரைச்சியைப்போல வடிவுகொண்டு கையில் எண்ணையும் எலுமிச்சம்பழமுங் கொண்டு வந்து காயத்துக்கு ஒத்தன மிட்டுத் தான் கொண்டு வந்த தேவாமிர்தத்தை ஊட்டிவிட்டுப் பின்பவரை சயனிக்கச்செய்து தானும் அருகே இருக்கச் சரஸ்வதியம்மனைப் பார்த்துச் சொல்லுகிறார்,

கில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (குறள்)

தாயே யின்னமும் உயிருடனிருந்து வாழ்கவேண்டுமோ இத்துன்பத்தினுல் உயிர் போகாமற் போய்விட்டதே அம்மா! நீர் யார்? தெரியச் சொல்லவேண்டு மென்று கேட்டதற்கு நான் முன்செய்த தீவினையினுல் மூக்கறுபட்டவள்; என்பேர் மூக்கிரைச்சி; உம்மைப் போலே ஆக்கினைபட்டபேரைக் காப்பாற்றுகிற கடமையாகையால் உம்மிடத்திற்கு வந்தெனென்று கூறச் சக்கிரவர்த்தியானவர் சரஸ்வதியென் றுணர்ந்து தாயே! என் வேதனையைத் தீர்த்தபடியால் நீயே சரஸ்வதியல்லாமல் வேறில்லையென்று கூறச் சக்கிரவர்த்தியம்மன் என்னைப் பிள்ளையில்லாதவளென்று சொல்லுகிறதேயொழிய சகலரும் என்பெயரைச் சொல்லிக்கொண்டு பிழையாத பேரில்லை. ஆகிலும், நீர் எனக்குப் புத்திரன் தான் வேறென்றுக்கும் ஆலோசனை வேண்டியதில்லை. உமக்கு வேண்டியவற்றைக் கேளும் நான் கொண்டு வந்து கொடுக்கிறேனென்றுள். சக்கிரவர்த்தி சரஸ்வதியைப் பார்த்து, தாயே! ஆக்கினைப் பட்டவனென்கிற அபகீர்த்தி என்னை வந்து அடைந்தபோதே சீவன் போகாமலிருக்கலாமோ வென்று கேட்டதற்கு சரஸ்

வதியானவள் வாரும் பிள்ளாய்! விதிதப்பாது; ஆதி பிரமனுக்கு மெத்த குறைவுண்டு. தக்கன் தலை யிழந்தான். சந்திரன் கலை குறைந்தான். அக்கினி கையிழந்தான். ஆதித்தன் பல்லிழந்தான். சுக்கிரன கண்ணிழந்தான். சரஸ்வதி மூக்கிழந்தாள். இப்படி பின்னப்பட்டிருந்தாலும் அவர்களுக்குக் குறைவுண்டோ என்று சொல்லினள். சக்கிரவர்த்தி அதுகளைக் கேட்டு விசனப்பட, சரஸ்வதி வாராய் மகனே! இத்தனையும் சனீஸ்வரபகவான் மாய்கையால் உன் காலுங்கையும் வருகிறபோது தானேவரும், இன்னம் சிறிது காரணம் நடக்கப்போகின்றது. நீ யொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. என்று கட்டளையிடத் தாயே! என்னுடைய அங்கம் பழுதானாலும் நான் சொன்ன வாக்கு பழுதாகாமலும் சிவந்த சிந்தனையும் லோக தரிசனமும் காலாகாலம் கற்ப வுற்பத்தியுந் தரவேண்டும். ஆதிசத்தியென்று தெண்டனிட்டார். அதற்கு அப்படியேஉண்டாகக் கடவதென்று வரங்கொடுத்து உனதுகாரியம் நிறைவேறுகிற பரியந்தம் உன்னைவிட்டுப் பிரியாமலிருப்பேன். நீ யொன்றுக்கும் அஞ்ச வேண்டாமென்று சொல்லிவிட்டு அந்தரத்தியானமானாள்.

அப்போது சூரிய னுதயமாச்சுது. பின்பு முடவனாகிய புரூரவச்சக்கிரவர்த்திக்கு நோயானது எவ்விதமாக யிருந்ததென்றால், நித்திரை செய்தவன் கண்ட கனவு எப்படியோ அப்படிபோலவும், சலத்தி லழுந்திக்கிடந்து கரையேறினாற்போலவும், ஆக்கினைப்பட்ட வருத்தமும் அந்த வருத்தத்தை அர்த்த ராத்திரியில் சரஸ்வதியம்மன் வந்து தீர்த்ததுவும், அவர்க்கு வரங் கொடுத்ததுவும் கனவு கண்டாற்போற் றேறி சுகமாயிருந்தார்.

அப்படியிருக்க அந்தப் பட்டணத்தி லுண்டான ஜனங்கள் நேற்றையதினம் திருடனென்று ஒருவனைப் பிடித்துக்கொண்டு போனார்களே? அவனைப் பட்டணத்திற்குக் கிழக்கே ஒருகாலும் ஒரு கையும் வாங்கிவிட்டார்களே? அவன் எவ்விதமா யிருக்கிறானோ? போய் பார்த்து வருவோமென்று சிறிதுபேர் தாம்பூலங்

கொண்டு போவாரும், சிறிதுபேர் இவன் நேற்றைய தினம் ஆக்கினைப்பட்டவனல்லவென்பாரும், இவன் மற்றொருவனைப்போல் இருக்கிறானென்பாரும், ஆக்கினைப்பட்ட விடத்திலே உதிரங்கள் சற்றாகிலுங் காணோமென்பாரும், ஓர் இராத்திரிக்குள்ளே அவன் வேதனையை எப்படி தீர்த்துக்கொண்டானென்பாரும், இப்படியாக ஜனங்கள் அவரவர்களுக்குத் தோன்றின பிரகாரம் பேசிக்கொண்டு நிற்கிற தருணத்தில் அந்தப் பட்டணத்திலிரா நின்ற பரதேசி காவற்செட்டியாரென்பவர் அவருடைய கப்பலிலொன்று தீவு தீவாந்திரங்கள் போய் திசைதப்பி இரண்டு வருஷங்காணாமல் நேற்றையதினம் வெகு திரவியத்துடன் வந்ததென்று கேள்விப்பட்டவுடனே அக்கப்பலைப் போய் பார்த்து வருவோமென்று போய் பார்க்க, மனதிற்கு வெகு சந்தோஷ முண்டாகித் தானதருமஞ் செய்யவேண்டுமென்று பட்டணத்திற்கு வரும்போது செட்டியார் இந்தவார்த்தை கேட்டு நேற்றையதினங் கேட்ட பரமானந்த மலைபோலிருக்கிறது சிவசிவாவென்று மனத்துயரடைந்து தெய்வசங்கல்பமின்றையத் தினம் சந்தோஷத்தையுண்டாக்கிப் பிரித்துப்போட்டதென்று செட்டியார் வியாகூலப்பட்டுக்கொண்டு தன் வீட்டுக்குப்போகாமல் ஆக்கினைப்பட்டவனருகே போனார். அந்தத் திருடனாகிய சக்கிரவர்த்தியைச் சூழ்ந்திருக்கிற ஜனங்களை செட்டியார் கண்டு, ஐயையோ! பரதேசி காவற்செட்டியாரே! நேற்றையதினம் நீர் ஊரிலிருந்தால் இவனுக்கு இப்பேர்க்கொத்த ஆக்கினை வராது. இவருடைய வினையானது உம்மை இந்த ஊரைவிட்டுப் பிரித்துப் போட்டதென்று ஜனங்கள் தோத்திரங்கள் செய்ய, பரதேசி காவல் செட்டியார் ஆக்கினைப்பட்ட திருடனிடத்திற்கு வந்து மனத்துயரடைந்து என்னுடைய கிரகாசாரம் உம்மைக் காப்பாற்ற வொட்டாமல் நேற்றையதினம் ஓர் சந்தோஷத்தை யுண்டாக்கிப் பிரித்துவிட்டதென்று மிகவுங் கிலேசப்படச் சக்கிரவர்த்தியாரும் செட்டியாரே! உம்முடைய தயவினாலே எனக்கொரு துன்பமுமில்லை; ஆக்கினைப்பட்ட வருத்தமும் கனவுகண்டதுபோல யிருக்கிறது; உம்மைக்

கண்டயாத்திரத்தி லென் துன்பமெல்லாம் நீங்கிப் போச்சுதென்று சொல்ல, செட்டியார் சக்கிரவர்த்தியைத் தனது தண்டிகையின் பேரில் வைத்துக்கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு கொண்டுபோய் நவரத்தின கசிதமாயிருக்கிற அம்சதூளிகா மஞ்சத்தின்பேரிலிருக்கவைத்துச் செட்டியார் கீழே யிருந்துகொண்டு சக்கிரவர்த்தியைப் பார்த்து, தேவரீர் ஆர் இந்த வினை வந்த காரணமேதென்று வினவ, சக்கிரவர்த்தியும் நாம் வந்த காரணமேதென்று சில நாளைக்குப் பின்பு உமக்கே தெரியவரும்; இப்போது எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை; என் தாயார் இந்நேரம் வருவாள் அவள்தானே சொன்னால் சொல்லுவாளல்லாமல் வலியக் கேட்டால் சொல்லுகிறவ ளல்லவென்று சொல்லினார்.

செட்டியார் மூடவனுகிய சக்கிரவர்த்தியினிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு அமுது புசிக்கிறதற்குப் போயிருக்கிற வேளையில் சரஸ்வதி மூக்கிறைச்சியைப் போல வடிவுகொண்டு பொற்றும்பாளத்திலே அறுசுவை பதார்த்தங்களோடு செட்டியார் வருமளவிலே கொண்டுவந்து மூடவனுகிய என் பிள்ளை யிருக்கிறானே வென்று உள்ளே நுழைந்து பார்க்கும்போது சக்கிரவர்த்தியாகிய மூடவனைக் கண்டு மெத்தவு மாவலோடு கொண்டுவந்த தேவாமிர்தத்தை ஊட்டிக்கொண்டிருக்கிறதீருணத்தில் செட்டியார்வந்து இந்தப்பட்டணத்தில் நம்மையறியாத பேரில்லை; நாமுமறியாத பேரில்லை; இவளாரோ புதிதா யிருக்கிருள், இவளை யாரென்று கேட்போமென்று சமீபத்தில் தாயே! நீர் ஆரென்று வினவ, சரஸ்வதி நான் தெய்வீகபுரம்; இவர் ஆக்கினைப் பட்டாரென்று சேதியறிந்து என் புருஷனுத்தரவின் படிக்கு வந்தேனே இருவருக்கும் பசி வந்தபோது கண் காண வருவேன்; மற்ற காலத்தில் மறைவாகத்தானிருப்பேனென்று கூற, செட்டியார் நல்லது தாயே தாங்கள் கொண்டுவந்த அமுதில் கொஞ்ச மடியேனுக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று கேட்க, சரஸ்வதியுஞ் சம்மதித்த வளாய் அந்த அமுதில் கொஞ்

சங் கொடுக்க, அதைச் செட்டியார் அமுதம்போலிருக்கிறது இதற்குச் சமானமான அன்னம் இவ்விடத்தில் கிடையாதென்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் சரஸ்வதியும் போய்விட்டாள்.

பின்பு சக்கிரவர்த்தியும் செட்டியாரும் வேதாகம புராண சாஸ்திரங்களைப் பிரசங்கஞ் செய்துக்கொண்டு தேசவர்த்தமானங்களைப் பேசிப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிற வேளையில் உபரிஷி யென்கிற மகாரிஷி யானவர் செட்டியார் வளவிலே சக்கிரவர்த்திபை பார்க்க வேண்டுமென்று வர, அந்த மகாரிஷியைக் கண்டு மூடவனுகிய சக்கிரவர்த்தியும் செட்டியாரும் சோடசோபசாரங்கள் செய்து நமஸ்காரம் பண்ண அந்த ரிஷியானவர் அவர்களுக்கு ஆசீர்வாதஞ் செய்து ஆசனத்திலிருந்தார்.

அப்போது சரஸ்வதியும் சக்கிரவர்த்திக்குப் பசியாற்றவேண்டிய மூக்கிறைச்சி வேடம்பூண்டு வந்தனள். அவளைக்கண்டு திரிகாலங்களை யறிந்த உபரிஷியென்கிற ரிஷி எழுந்திருந்து நமஸ்காரம்பண்ணி இரண்டு கைகளையுஞ் சிரசின்பேரில் வைத்துக்கொண்டு அம்மா சரஸ்வதி தேவி! சகலருக்குந் தாயானவளே! வேதாகம புராணங்களுக்கு முதன்மையானவளே! கீதநாதம் பிரபந்த வித்வியா விநோத சகல மந்தாரூபி! அகண்ட பரிபூரணி! எள்ளுக்குள் எண்ணெயைப்போல் எங்கும் வியாபித்திருக்கப்பட்டவளே! அடியேனை இரட்சிக்க வேண்டுமென்று தோத்திரம் பண்ணும்போது மூடவனுகிய சக்கிரவர்த்தியும் செட்டியாரும் சரீரம் புளகாங்கிதமாய் ஆனந்தபரவசராய் தேவியைத் தோத்திரஞ் செய்து கூத்தாடி இரண்டுகைகளையுஞ் சிரசின்பேரில் வைத்துக்கொண்டு நின்றார்கள்.

அப்போது சரஸ்வதி மகாரிஷியைப் பார்த்து உட்காருமென்று கட்டளையிட்டுப் பின்பு சக்கிரவர்த்தியும் செட்டியாரையும் உட்காருங்களென்று சொல்லி மூடவனுகிய சக்கிரவர்த்தியைப் பார்த்து ஆயாசமாக யிருக்கிறது, அமுதபானம் பண்ணுமென்று தன் கரத்தால் ஊட்டிவிட்டு அந்தரத் தியானமானுள். அப்போது

செட்டியார் அந்த ரிஷியைப் பார்த்து, இவர் யார்? இவருக்கு அன்னங் கொடுத்து வருகிற மூக்கரைச்சி யாகிய தேவதையார் அவருக்கிப்படிவந்த காரணமேது சொல்லவேண்டுமென்று கேட்க, ரிஷியானவர் வாரும் பரதேசி செட்டியாரே! இப்போது இவருடைய சரித்திரம் வெளியாக மாட்டாது இன்னம் மூன்று வருஷஞ் சென்ற பின்பு இவருடைய பெண்சாதியும் பிள்ளைகளும் கூடுவார்கள் சகல தேவர்களும் வந்து காண இவருடைய சரித்திரம் தெரியவரும் இப்போது நடந்துவருகிற காரணங்களெல்லாம் நடந்துவரு மிவர் சங்கீத வித்தையில் வல்லவர் இவருக்குச் சமானமானவர்களொருவருமில்லை யென்று சொல்லிவிட்டுச் செலவு பெற்றுக்கொண்டு சென்றனர்.

அப்படியிருக்க சிறிது நாளைக்குப் பின்பு உபரிஷியானவர் பிள்ளைகளை வளர்க்கின்ற செங்கமலமென்கிற இடைச்சி வீட்டிற்குவந்து பிள்ளைகளைக்கண்டு இடைச்சியை யழைத்து இந்தப் பிள்ளைகள் இராஜகுமாரர்களாகவேண்டும் இவர்களுக்கு நயன உபதேச முதலாகியதுங் கற்பிக்க வேணுமென்று கூற, அதுகேட்டிடைச்சி வெகு திரவியங்களைக் கொடுத்தாள். அந்த உபரிஷி யென்கிற ரிஷியும் அந்தப்பிள்ளைகட் காசாரியராகவிருந்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நாலு கலைக்கியானம் மநுவிக்கியான முதலானதுங் கற்பித்துவருங்கால் ஆசாரியரைப் பார்த்திந்த மநுவிக்கியான சாஸ்திரப்படி நடந்தவர்களுண்டோ வென்று கேட்க, உபரிஷி சொல்லுகிறார்; அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூரவன், கார்த்தவீரியன், இரகுநாயகன் இவர்கள் மநுநீதி தவறாமல் செங்கோல் நடத்தி பரகதி யடைந்தார்கள்.

அதில் புரூரவச்சக்கிரவர்த்தி யென்றொரு சக்கிரவர்த்தி மநுவிக்கியானந் தவறாமல் செங்கோல் நடத்தி வருகையில் சனீஸ்வரபகவான் வந்து தன்னுடைய காலமென்று சொல்ல, அந்த உறுதியினாலே நாடு இராச்சியமு மிழந்து பெண்சாதி பிள்ளைகளையு மிழந்து தானும் வேறாய் படாதபாடெல்லாம் பட்டு கையுங்

காலு மிழந்து தியானம் விடாமல் இருக்கையில் சரஸ்வதி வந்து அவரைக் காப்பாற்றிக்கொண் டிருக்கிருளென்று சொன்னர். அதற்கு அந்தப்பிள்ளைகளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீரொழுக மயிர்க்குச்செறிந்து இந்தப் புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய சரித்திரத்தைக் கேட்கக் கோபமாகுதென்று மயங்கி விழுந்த குமாரர்களை எடுத்தணைத்து அவர்கள் தாபசோபத்தைத் தீர்த்து அவர்களைப் பார்த்து ரிஷி சொல்லுகிருர். அந்தச் சக்கிரவர்த்தி எப்போதும் போலே பெண்சாதியும் பிள்ளைகளும் கூடி இராச்சிய பரிபாலனஞ் செய்வாரென்று அந்தப் பிள்ளைகளுக்கு தேறுதலை சொல்லி அவர்களிடத்திற் செலவு பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

அப்படியிருக்க உபரிஷியானவர் ஒருநாள் அந்தமானென்கிற தீவுக்குப்போய் நவகோடி நாராயணனென்கிற செட்டியாரைக்கண்டு ஆசீர்வாதம்பண்ணுர் செட்டியாரும் ரிஷிக்கு நமஸ்காரஞ்செய்து பேழையினருகாமையில் பொற்பீட மளித்திருக்கச் சொல்லிப் பின்பு சுவாமி தேவரீர் எந்தவூர் எந்த தேசம் இங்குவந்த காரணமேதென்றுகேட்க, தாம் பரதேசி நாம் லோகமாதியந்தமும் திரிவோம் நமக்கொரு பகுதி யுண்டாவென்று கூறச் செட்டியானவர் நீங்கள் திரிந்து சஞ்சாரஞ் செய்துவந்த பட்டணத்தில் புதுமைகள் ஏதாகிலுமுண்டோ சொல்லுங்களையாவென்று கேட்டதற்கு அந்த மகாரிஷியானவர் நான் கண்ட பட்டணத்திலே புரூரவச்சக்கிரவர்த்தியினுடைய பட்டணம்போல பட்டணமில்லை; அவரைப்போல தருமசிந்தனையுள்ள சக்கிரவர்த்தியுமில்லை; அவர் பட்ட அவதியைப்போல ஒருவரும் பட்டதில்லை யென்ருர் செட்டியாரும் அவர் யார் அவருடைய சரித்திரததைச் சொல்லவேண்டுமென்று கேட்க, உபரிஷியானவர் சொல்லுகிருர் :

அந்தச் சக்கிரவர்த்தி சனீஸ்வரபகவானுல் நாடு ராச்சியமு மிழந்து பெண்சாதி பிள்ளைகளுடனே வெளிப்பட்டுக் கூலியாளரிடத்திலே கணக்கெழுதிக் கொண் டிருக்கையில் பெண்சாதியை யிழந்து பிள்ளை

களையும் ஆற்றங்கரையிலேயிழந்து, இடையருக்காளான காலத்திலே கள்ளனென்று காலுங் கையும் அறுப் புண்டு நொண்டியாக விருக்கிறார். பிள்ளைகளையும் ஓரிடைச்சி வளர்த்துக்கொண்டு வருகிறாளென்று சொல்லிவிட்டுச் செட்டியாரிடத்தில் செலவு பெற்றுக் கொண்டுபோய்விட்டார். இதுகளையெல்லாம் பேழைமி லிருந்த அரசன் மனைவி மெய்நடுங்கி ஐயையோ என் பர்த்தாவுக்குச் சரீரங் குறைவுபட நான் பார்ப்பேனோ இன்னமும் உயிருடன் வாழ்வேனோ ஆனாலென்ன பழுதுபட்ட திருமேனியானாலும் உயிருடனே யிருக் கிறாரென்று கேட்டோம் நாம் உயிர்விடுகிறது தரும மல்ல இன்னஞ் சில காலத்திற்குப்பின் என் நாயகனைக் காண்பனேயல்லது காணமற் போகிறதில்லையென்று துயரத்தை ஒருவாறுகத்தேற்றிக்கொண்டாள். செட்டி யார் அந்த ரிஷி சொன்ன காரியங்களையெல்லாம் கேட் டோம் ஆகையினாலே நமக்கொரு ஐயமில்லை நம்மு டைய தேசத்திற்குப் போகலாமென்று யோசனைபண் ணிக்கொண்டுதான் கொண்டுவந்த சரக்குகளை விற்று மறுசரக்கேற்றிக் கப்பலேறிப் பாய்விரித்து நடக்கிற சமயத்தில் திசைதப்பித் தன் பட்டணஞ் சேராமல் தூரத்தில் ஒரு திட்டினருகில் வந்து சேர்ந்து அந்தத் திட்டுக்கொரு பக்கம் கடலும் ஒரு பக்கம் மலையும் ஒரு பக்கம் ஆறுமசூழ்ந்திருந்ததும் அந்தத் திட்டில் கப் பலைவிட்டிறங்கி இது நமக்கு வர்த்தகத்திற்குத் தகுதி யான இடமென்று நிச்சயித்து அந்தத் தீவில் மேடு பள்ளங்களில்லாமல் திருத்தி ஒரு அரண்மனை கட்டி அதில் வர்த்தகஞ் செய்துக்கொண்டு சுகித்திருந்தார்.

கேளும் தருமநந்தனா! அவர்களிப்படியிருக்க இவ் விடத்திலே பரதேசி காவற்செட்டியார் வீட்டிலிருக்கிற புரூரவச்சக்கிரவர்த்தி ஒருநாள் சூரியனஸ்தமித்தபிறகு அவருடைய நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு வர பூசை செய்கையில் வீணை யெடுத்துக்கொண்டு சந் தோஷமாகச் சந்திரோதய வேளையில் தென்றல்வீச வெகு விநோதமாக விரதாக்கினியாலே மதனகீதமென் கிற கீதத்தைப் பாடிக்கொண் டிருக்கிற காலத்தில்

தேவபுரத்தை யாளுகின்ற தெய்வதனென்கிற இராஜாவுக்கு புத்திரன் இல்லாமையால் அனேக விரதங்களை யனுஷ்டித்துப் பயனில்லாமல் பின்பு சாம்பவமூர்த்தியாகிய பரமசிவத்தை நோக்கித் தபசு செய்து அத்தவத்தால் ஒரு பெண்குழந்தை மகாசுந்தரமாகப் பெற்ருள். அப் பெண்ணுக்குப் புட்ப பாஞ்சாலி யென்று நாமகரணமிட்டு அருமையாக வளர்த்துக் கொண்டு வந்து ஐந்தாம் வயதில் பள்ளிக்குவைத்து ஆறுசாஸ்திரம் நாலுவேதம் அறுபத்து நாலு கலைக்கியானங்களுஞ் சங்கீத சாகித்தியத்திலும் இவளுக்கிணையாக ஒருவருமில்லை யென்பதுபோலக் கற்பித்து அப் பெண்ணுக்கோர் கன்னிகா மாளிகையு மியற்றி சிலதாதியர்களுடனே அந்த மாளிகையி லிருக்கவைத்தான். அப் பெண்ணை ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் விரும்பிக் கேட்ட காலத்தில் தேவபுரத்தையாளுகிற செய்தவனென்கிற ராஜா யாதாமொருவர் சங்கீதத்தினுலே பட்டமரந் துளிர்க்கும் கல்லுருவி விழவும் அந்தரப்படல் வரவும் இப்படி பாடினபேருக்கென் குமாரத்தியாகிய புஷ்பபாஞ்சாலி மாலையிடுவாள் என்று சொல்லினர்.

அப்படிப் பாடத்தக்கினபே ரில்லாதபடியினுலே அரசர்களெல்லாம் வலிமையினுலே யாகிலும் இவன் கோட்டையை வளைத்து அந்தப் பெண்ணைக்கொண்டு போவோமென்று தங்கள் தங்கள் ரதகஜ துரகபதாதிகளோடு வந்து தண்டு வாங்கி உயுத்தமபண்ணி நிற்கமாட்டாமல் முறிந்தோடிப் போனதைப்பார்த்து பாஞ்சாலி மிகுந்த வியாகூலத்தை யடைந்து இந்தப் பூமியினிடத்தில் தன்னுடைய சவுந்தரியத்திலும் சங்கீதத்திலும் தமக் கெண்மடங்கதிகமான புருடன் கிடைப்பானே வென்று சோதிட பண்டிதர்களை வரவழைத்துக் கேட்க அவர்களின்னம் சிறிதுநாளையி லிந்தப்பட்டணத்தி லுன்னினு மெண்மடங்கதிகமான சவுந்தரியமுள்ள புருஷன் இரவிலோர்கீதம் வாசிப்பான் அந்த கீதமானது உன் செவிக்கு விநோதமாககேட்கும் அந்தக் கீதம் பாடினவனுக்கே உன் மனம் பொருந்தும் அவனுக்கே நீ மாலையிடுவாயென்று சொல்லிப் போயினர்,

சோதிட சாஸ்திரங்கள் சொன்ன சொற்கேட்டும் புஷ்ப பாஞ்சாலி இன்னம் எத்தனைகாலம் செல்லுமோ வென்று தனது வுப்பரிகை மேடையின்பேரில் சயனித்துக்கொண்டிருக்கும்போது காமவிகார மேற்கொண்டு அதிலிருக்கிறஉயிர்த்தோழியைப்பார்த்துஇந்நாள்வரைக்குமிந்தக்காமவிகார மென்கிற தெப்படியோ வறியேன் இன்றைக்கு ஏதோ காமவிகார மேற்கொண்டிருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிற சமயத்தில் ஓர் கீத நாதத்தினுடைய தொனி இவள் செவிக்குக் கேட்ட மாத்திரத்தில் அவ ளணிந்திருக்கிற சுட்டி யிருந்த பச்சைக்கல்லானது உருகி விழுந்ததைக் கண்டு, மெய் சோர்ந்து, தெளிந்து இதுவரையில் இந்தக் கீதநாதம் பாடத் தக்கினவர்கள் இந்த அரசாட்சி எல்லையிற் காணேம். ஆகையால், தன் னருகிலிருக்கிற தோழி முகத்தைப்பார்த்து, இந்தச் சத்தத்தின் வழியே போய் பார்த்து வரவேண்டுமென்று அனுப்ப, அவர்கள் நல்லதென்று நூலேணியா லிறங்கி வெளிப்பட்டு வந்து கீத நாதத்தினுடைய சப்தத்தைக்கேட்க, இந்த சப்தமானது இந்தப் பட்டணத்தில் பாடுகிற சப்தந்தானென்று நிச்சயித்து இவ்விடத்தில் பாடுகிற தொனியென்று அவள் புத்திக்குத் தோன்றுமையால் தெளிந்து பின்பு அச்சப்தத்தின் வழியே சென்று பரதேசி காவற் செட்டியார் அரண்மனைக்குப் போய் இவ்விடத்திலே கீதம் பாடுகிற பேர்களாரென்று வினவ, அவ்விடத்திலிருந்த பேர்கள் இராஜாவின் அரண்மனையிலே பொக்கிஷப் பெட்டி திருடினனென்று கை கால் வாங்கிப் போட்டார்களே அவன்தான் பாடுகிறுனென்று சொல்ல, ஓகோ காலுங் கையு மறுப்புண்டவனு பாடுகிறுனென்று மிகுதியுங் கிலேசப்பட்டுக்கொண்டு இராஜாவின் குமாரத்தியாகிய புஷ்ப பாஞ்சாலியி னிடத்திற்கு வந்து இந்த சமாச்சாரத்தை தெரிவிக்க, அவள் தாதியைப் பார்த்து அவன் எப்படிப்பட்டவனுகிலும் அவனுக்கே நான் மாலையிடுவே னென்றுள். இல்லாவிட்டால் என் பிராணனை விடுவேனென்றுள். அதற்குத் தாதியானவள் எல்லாம் நாளைய தினம் சொல்லுகிறேன் பயப்படாதே யென்று தோழியானவள் சடுதியில் உபசாரத்

துடன் சொல்லி விட்டு தாதி இவள் தலைவிதியோ மூடவனுக்கு மாலையிடலாச்சுதென்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது இராஜகுமாரத்தி காமவிகாரத்தினல் அன்னம் புசியாமல் படுக்கையும் பொருந்தாமல் அதிக விரதாக்கினியால் மெய் வெதும்பிப் பசலை பூத்து சரீரம் வெளுத்து ஆபரணங்களும் சுகந்தாதிகளும் மறந்திருக்கிறதைப் பாங்கியர்கள் கண்டு இராஜாவின் தேவியான திலகவதியாளிடத்திற்கு வந்து புஷ்பபாஞ்சாலியினுடைய விரகதாபத்தை தாதியர் கண்டு சொல்லக் கேட்டு மனவருத்தமுற்றுத் திலதவதியாள் இராஜாவின் சமீபத்திற்குப் போய் தெரிவிக்க, அரசன் அவர்களுக்குக் காலம் வந்தால் தடை பண்ணக் கூடுமோ கூடாது. அதற்கெப்படி ஆலோசனை செய்ய வேண்டுமோ அப்படிச் செய்கிறேனென்று சொல்லி விட்டுப் பின்பு தன் கொலுமண்டபத்திற்கு வந்து மந்திரி பிரதானிகள் புரோகிதர்கள் இவர்களை யழைப்பித்து இந்த வசந்த காலத்தில் என் குமாரத்தியாகிய புஷ்ப பாஞ்சாலிக்கு விவாக முகூர்த்தம் செய்யவேண்டும் அதற்குப் பொருந்தின திதி வாரம் யோகம் கரண நட்சத்திரம் இதுகளைப் பார்த்து முகூர்த்த நாள் ஒன்று நிச்சயப்படுத்துங்களென்று கட்டளை யிட்டார்.

அப்படியே அவர்கள் சோதிட சாஸ்திரங்களை எல்லாம் பரிசோதித்து ஓர் முகூர்த்தநாள் நிச்சயித்து இந்த சுப முகூர்த்தத்தில் விவாகம் நடக்க வேண்டியதென்று அரசனுக்குச் சொல்லினர். அரசன் மிகவுஞ் சந்தோஷப்பட்டு மந்திரியைப் பார்த்து தேவபுரத்தை யாளுகின்ற செய்தவ மகாராஜன் குமாரத்தியாகிய புஷ்பபாஞ்சாலிக்குச் சுயம்வரம் நாட்டி யிருப்பதால் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வரவேண்டுமென்று திருமுக மெழுதித் தூதுவர் கையில் கொடுத்தனுப்புங்களென்று கட்டளையிட்டார்.

அப்படியே மந்திரியானவன் தூதுவர் கையில் திருமுகமெழுதி யனுப்ப, அத் திருமுகத்தைப் பார்த்த அரசர்கள் தங்கள் தங்கள் இரதகஜதுரகபதாதிகளோடு வருகிறதை அரசன் கண்டு அவர்களுக்கு எதிர்

கொண்டு போய் உபசாரஞ்செய்து அழைத்துவந்து அவரவர்களுக்கு விடுதிகளும்விட அரசர்களெல்லாம் வெகு சம்பிரமத்துடனே யிருந்தார்கள். அப்படியிருக்கச் செட்டியார் தினசரி பட்டணத்தில் நடந்து வருகிற அதிசயங்களெல்லாம் முடவனுகிய புரூரவச் சக்கிரவர்த்தியைப் பார்த்துச் செட்டியார் சொல்லுகிறுர்.

கேளுமையா! இந்த பட்டணத்து இராசாவின் குமாரத்தியை முன்ஞெருதரம் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் கேட்டபோது கொடுக்கச் சம்மதியில்லாமலிருக்க அரசன் இப்போது அவர்களை வலிய மண ஓலையெழுதி அழைப்பித்திருக்கிறுன். அந்த பெண்யாருக்கு மாலையிடுவாளோ தெரியாதென்று சொல்ல, புரூரவச் சக்கிரவர்த்தியும் பிரமன் கட்டளைப்படி முடியுமென்று சொல்லி விட்டுத் தனிமையாக இராக்காலத்தில் வீணையை எடுத்து மீட்ட, அந்தக் கீதநாதத்தினுடைய சப்தமானது உப்பரிகை மேடைமேலிருக்கிற இராஜ குமாரத்தியானவள் கேட்டு மெய்மறந்து பூமியில் விழுந்து களைதெளிந்து எழுந்திருந்து தோழியைப் பார்த்து இப்படிப்பட்ட கீதம் பாடுகிறபேர்களை கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; இந்தகீதபிரபந்தம் நானறிந்ததல்ல; இதுவோ கீதம் போலிருக்கிறது. ஆகையால் நீர் போய் பரதேசி காவற்செட்டியார் வீட்டிலே பாடுகிறவனுர் அவனுக்கிப்படி வந்த காரணம் ஏதென்று விசாரித்து வாவென் றனுப்ப, பாங்கியும் நல்லதென்று ஆண்டிச்சிவேடம் பூண்டுக்கொண்டு செட்டியார் வீட்டுக்கு வந்தாள்.

அங்கே இவளைப்போலே ஆண்டிச்சிகள் அநேகம் பேரிருந்தார்கள். அவர்களுடன் கூடியிருந்து சகல காரியங்களையும் விசாரித்துக் கொண்டு மறுபடியும் இராஜ குமாரத்தியின் சமீபத்தில் வந்து சொல்லுகிறுர்கள். அம்மா! செட்டியார் வீட்டிலே இருக்கிறவரைப் பார்த்தால் அவர்களுடைய ராஜ லக்ஷணங்களெல்லா மிருக்கிறது; ஒரு மூக்கிரைச்சி வந்து அன்னமூட்டுகிறுள். செட்டியார் தாம்பூல மடித்துக் கொண்டு அங்கே யிருக்கிறுர். அவரைப் பார்த்தால் முன்னுலே

நம்முடைய அரண்மனையிலே பூஷணபெட்டி திருடினு ரென்று கட்டிக்கொண்டுபோய் கையுங் காலையும் ஆக்கினை செய்தார்களே அவர்போ லிருக்கிறதென்று சொல்லினள். இந்த வார்த்தையைக் கேட்க பாஞ்சாலி மிகுதியும் சந்தோஷப்பட்டு நமக்கு மணஞ்செய்து சுயம்வர மண்டபத்திலே ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வருவார்களே அவர்களையெல்லாம் நானறிந்தவள்தானே இப்போதும் வருவார்கள் செட்டியார் வீட்டி லிருக்கிறவர் இந்த சபையில் வருவாரோ வந்தாலும் இராஜ கூட்டங்களைக் கடந்து நடுமண்டபத்தில் வந்தாலல்லவோ காண்போம் கண்டாலும் அவர் அடையாளம் தெரியுமோ தெரியாது, மற்றுமுள்ள இராஜாக்க ளெல்லாம் மணக்கோலங் கொண்டு மணவரையில் வருவார்களே அவர் மூடவனுனபடியால் என்னமாய் வரப்போகிருர். ஒருவர் அன்னம் ஊட்டுகிருளென்றபோதே காவில்லையே அவரை முன்னம் நீ பூஷணப் பெட்டி திருடினுரென்று பிடித்துக் கொண்டு வந்து என் தகப்பன் சமுகத்தில் விட்டபோது நான் கண்டு இச்சைகொண்டு இவர் நமக்கும் புருஷனுவாரோ வென்று தடுத்துக் கலியாணம் பண்ணிக்கொள்ளலா மென்று நினைத்தேன் உலகத்தார் திருடனுக்கு ஆசை கொண்டவள் இவளு மொரு திருடியென்று சொல் வார்களென்று நினைத்தேன் இப்போது நானினைத்த படி விதி கூடினுல் நான் செய்த பாக்கியந்தான் இவரும் செட்டியார் வீட்டைவிட்டு கலியாண மண்டபத்திலே வேடிக்கையாகிலும் பார்க்கவேணுமென்று அநேகவிதமாகத் தங்கள் குல தெய்வத்தை தோத்திரஞ்செய்து அவருக்கே நான் பாரியாகக் கட்டளை யிட வேண்டிய பிரதிக்கினை பண்ணிக்கொண்டு வியாகூலத்துடனிருந்தாள். அப்போது முகூர்த்த நாள் சமீபித்ததென்று ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் இரதகஜதுரகபதாதிகளோடு வருகிறதைக்கண்டு செய்தவனென்கிற மகாராஜனது பரிவாரங்களோடு எதிர்சென்று அழைத்து வந்து சபா மண்டபமாகிய சுயம்வர மண்டபத்தில் அவர்களுக்குச் சிம்மாதனமளித்துச் சோட

சோபசாரங்களுடன் உட்காரச் சொல்லி கட்டளை யிட்டான்.

கேளும் தருமநந்தன ! இப்படி யிருக்கிறபோது சரஸ்வதியம்மன் செட்டியார் வீட்டிலிருக்கிற மூடவனுகிய புரூரவச் சக்கிரவர்த்திக்கு தேவாமிர்தத்தை யூட்டி விட்டுப் போகும்போது அப்பா இன்றைக்கு இந்தப் பட்டணத்து ராஜாவின் குமாரத்தியாகிய புஷ்ப பாஞ்சாலிக்கு விவாகம் அவளை நாடி ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் மூன்னம் தோற்றுப்போயினர்கள் அவர்களிப்போது அரசனுடைய மணவோலையினுல் மாலையிடப்போகிறதில்லை அவள் உனக்கே மாலையிடப்போகிருள் உன்னை யல்லாமல் உயிர்வாழ மாட்டாளென்று சொல்லிவிட்டுச் சரஸ்வதியம்மனும் போயினள்.

பின்பு மூடவனுகிய புரூரவச்சக்கரவர்த்தி இதுவும் ஒரு பெண்பாவம் வரவேண்டுமோ ? நாமேன் கீதநாதம் பாடினேம். அதனுலல்லவோ இப்படி வந்து மூடியலாச்சுது. வினை இப்படி யிருந்தால் என்ன செய்யப் போகிறேன். இதற்கொரு யோசனையு மில்லையோ சரஸ்வதியம்மன் சொன்ன வாக்குத் தப்பாதே. கலியாண மண்டபத்திற்குப் போகாமலும் நம்மை நாடி யிருக்கிற பெண் என்ன பாடு படுவாளோ? நமக்கு இதுவும் ஒரு வினை வந்து பீடிக்குமே இந்த முகூர்த்தத்திற்கு மணக் கோலத்துடன் வந்த பெண் முகூர்த்தப்பெண். முகூர்த்தம் தப்பினுல் என்னமாய் முடியுமோ ? நம்முடைய வினைப்பயன் இப்படியிருக்க. அப்பெண்ணினுடைய வினைப்பயனும் இப்படியாக முடியு வேண்டுமோ? நானுவிதமாக நினைத்துக்கொண்டிருக்கிறபோது செட்டியார் அந்த மூடவனுகிய புரூரவச்சக்கிரவர்த்தியைப் பார்த்து வாருமையா! இந்தப் பட்டணத்து ராஜாவின் குமாரத்திக்குக் கலியாணம் ; நாம் போய் வேடிக்கை பார்த்து வருவோம் என்று சொல்லி அவரை சிவிகையின்பேரில் வைத்துக்கொண்டு தானுமொரு சிவிகையின் பேரிலே ஏறிக்கொண்டு கலியாணமண்டபம் வந்து ஓரிடத்திலிருந்தார்கள்.

அப்படி யிருக்கச் செய்த அரசன் புரோகிதரைப் பார்த்து முகூர்த்தம் தப்பாமல் பெண்ணை அழைத்து வாருங்களென்று கட்டளையிட அவர்கள் தாதியருடனே சொல்ல. அவர்கள் அப்பெண்ணுக்குங் கங்கை முதலான தீர்த்தங்களால் ஸ்நானம் பண்ணி வைத்து ஈரங்களைந்து சிணுக்கறுத்து இழையாயிரம் பொன்பெற்ற ரத்தினச் சுருகுச்சேலையுங் கட்டி வாசனைபூட்டி நவரத்தின மிழைத்த குச்சு குப்பி சடையில்லை யணிந்து மல்லிகை முல்லை இருவாட்சி செண்பகம் குருவேர் மருக்கொழுந்து முதலாகிய புஷ்பங்கள் மூடித்து கண்களுக்கு மையிட்டு நெற்றியில் திலதமிட்டுவாசனையுடையதாகிய திவ்விய சந்தனம் பூசி நவரத்தின மயமான சரிகை ரவிக்கை தரித்து, மூக்குத்தி சிந்தாக்கு நெற்றிப் பட்டம் ரத்தினவாளி ரத்தினவோலை அஸ்தகடகம் வன்னரசம் கழுத்துமாலை மாணிக்கபதக்கம் சரப்பளி சூடம் சரிவளை ஒட்டியாணம் காலாழி பீலாழி சிலம்பு தண்டை கொலுசு முதலான ஆபரணங்களெல்லாம் விதம்விதமாகத் தரித்து அலங்காரம் பண்ணியது எப்படிக் கிருக்குதென்றால் ஜீவரத்தினத்தை தழுவியொப்பமிட்டால் எப்படியோ அப்படிபோல ஒப்புவமைக் கடங்காமல் தானே தமக்குச் சமானமாகிய திவ்விய சொரூபத்துடனே விளங்குகிறதைத் தேவகன்னியர்கள் பார்த்து இப்படிப்பட்ட சவுந்தரிய முள்ள பெண் தெய்வலோகத்திலு மில்லையென்று பார்த்த கண்கள் மாறுமல், இமை கொட்டாமலிருக்க, இந்த பூலோகத்து மனிதர் படும்பாடு ஒருவராலே சொல்லக் கூடுமோ? இவ்விதமாக அலங்காரம் பண்ணிக்கொண்ட பெண் செப்பஞ் சூட்டிய பக்கத்திலே ரத்தினுதிகளிழைத்த பாதரசங்கள் சிலம்பு தண்டைகள் கலீர் கலீரென அரவின் படம்போன்ற அல்குல் மண்டபத்தின் பேரில் கட்டிய மேகலாபரணமும் உடைதாரமும் ஆர்ப்பரிக்க அளகாபாரத்திற் சொரூப சுகந்தாதியும் இன்னது இன்னதென்று நிர்மிக்கப்படாத ஆபரணங்களை அலங்காரஞ் செய்து கையில் பூச்செண்டு பிடித்துக் கொண்டு சிறிது பெண்கள் முத்தாலாத்திப் பவளாலாத்தியும், சிறிது பெண்கள் வெண்சாமரமும், சிறிது

பேர்க ளாலாத்தியு மேந்திச், சிறிதுபேர் எச்சரிக்கை செய்துவர, சிறிது பெண்கள் பொற்பிரம்புக்கொண்டு ஜனங்களை விலக்கிவர இத்தியாதி வைபவத்துடனே அந்தப்புராங் கடந்து வரச்சே, தோற்கருவி துளைக் கருவி கஞ்சக்கருவி நரம்புக்கருவி முதலான வாத் தியங்களு முழங்கச் சமுத்திர கோஷ்டம்போல வோசையும், ஆசீர்வாத வோசையும், தேவகீதவோசை யும், மங்கள வாழ்த்தும், சங்கீதத் தொனியும் முழங்க கடந்துவந்து சபாமண்டபத்தி லிருக்கின்ற தந்தையின் பாதத்தில் அடிபணிந்து நின்றனன்.

அப்படி பணிந்து நிற்கின்ற பெண்ணைப் பார்த்து சந்தோஷப்பட்டு பாங்கியரைப்பார்த்து, இவ்விடத்தில் வந்திருக்கிற அரசர்களுடைய சம்பிரதாயங்க ளல் லவோ தெரியவரும், ஆகையால் அவர்களை காண்பித்து மாலையிடச் சொல்லென்று பாங்கிமார் பிறகே தன் குமா ரத்தியைக் கூட்டிக் கையிலே ஒரு மலையுங் கொடுத்து அனுப்ப அப்படியே அவர்கள் இராஜ குமாரத்தியை சுயம்வர மண்டபத்திற்கு அழைத்து வந்து நிற் கையில் அரசர்களெல்லாம் அப்பெண்ணைப் பார்த்து இவள் ரதியோ! இந்திராணியோ! மேனகையோ! தேவகன்னிகையோ! பாதாதிகேச பரியந்தம் பார் த்து இப்படிப்பட்ட பெண்ணை எங்குங் கண்டதில்லை யென்று மெய்மறந்து எழுதிவைத்த சித்திரம்போல் பார் க்க கிண்கள் மாருமல் பார்த்திருந்தார்கள் அப்போது தாதியும் அரசர்களுடைய பராக்கிரமமும் உண்மையும் பொறுமையும் தயவு தாட்சண்ணியமும் அழகும் வித் தையும் அவர்கள் தேசத்திலிருக்கும் அதிசயங்களை எடுத்துச் சொல்லக்கேட்டும் இராஜ குமாரத்தியாகிய புஷ்ப பாஞ்சாலி இவர்களை நாம் அறியோமே? முன் சங்கீதத்துக்குத் தோர்வையாகப் போன அரசர்களல் லவோ வென்று யோசனை பண்ணிகொண்டு அவ் விடத்தில் நானுவிதமான வருணத்திலுள்ள செனங்க ளும் சபையில் வந்திருக்கிற படியினலே அவர்களைப் பார்க்கமுடியாமல் திகைத்து நின்றனள்.

கேளுந் தருமநந்தன! ஆகாயவீதியிலே மேகமண்டலமளவாய் தேவர்களிருந்துகொண்டு பிரமதேவரைப் பார்த்து ஏதையா இந்தப் பெண்களைக் கடந்து அவ்விடத்தில் நானுவிதமான வருணத்திலுள்ள செனங்களும் சபையில் வந்திருக்கிறபடியினலே அவர்களைப் பார்க்க முடியாமல் திகைத்து நின்றனர்.

கேளுந் தருமநந்தன! ஆகாயவீதியிலே மேகமண்டலமளவாய் தேவர்களிருந்துகொண்டு பிரமதேவரைப் பார்த்து ஏதையா இந்தப் பெண்ணுனவள் இராஜசபையில்வந்து அவர்களைவிட்டு இதரமான செனங்களிருக்கிற இடத்தில் வந்தும் திகைத்தாற்போல் இருக்கிருள். இவள் யாருக்கு மாலையிடப் போகிருள் அதிவுமல்லாமல் வேறெருகாரணமும் நடவாது. அதை எங்களுக்குத் தெரியும்படி சொல்ல வேண்டுமென்று கேட்பதற்குப் பிரமதேவரும் இன்னம் இரண்டு நாழிகையில் ஒரு முடவனுக்கு மாலையிடப் போகிருள் பார்த்திருங்களென்று கூறிஞர். அதை தேவர்களறிய வேண்டுமென்று ஆகாயவீதியிலிருக்கும்போது இவ்விடத்தில் இராஜகுமாரத்திக்குத் தாதியர்கள் அரசர்களுடைய சரித்திரங்களை எடுத்துச் சொல்லக் கேட்டும், அவர்களைக் கண்ணிஞலே பார்த்தும் தன் மனதுக்கொவ்வாதபடியினலே அவள் மனதில் நிச்சயித்துக்கொண்டிருக்கிற புருஷனைக் காணுமல் வருத்தமுற்று எந்த வேளையில் இந்த மணமாலையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேனே வென்று தாதியர்களைப் பார்த்துச் சொல்லுகிருள்.

அடி தாதிகளே! நான் நினைத்திருக்கிற புருஷனுக்கு இன்றைபதினம் மாலையிட்டாலாச்சுது இல்லாவிட்டால் பிராணத்தியாகம் செய்துகொள்ளுகிறதே நலமென்று நயனபாஷையாகச் சொல்லிவிட்டுஓர் நினைவாகத்தன் குலதெய்வத்தை தியானித்து நான் கற்புடையாது மெய்யானல், நான் நினைத்த காரியம் பொய்யிராமல் நான் நினைத்த புருஷனே எனக்கு பத்தாவாக வேணுமென்று தியானித்துக்கொண்டிருக்கிற தருணத்தில் அருகிலிருக்கிற உயிர்த்தோழியானவள் இராசகுமா

ரத்தியைப் பார்த்து நானொரு விநோதமான கதை சொல்லுகிறேன். அதை கவனமாகக் கேளுமென்று சொல்லுகிருள்.

விசால நகரமென்றொரு பட்டணமுண்டு. அதில் விசாலப்பூபதி யென்றொரு அரசன் நீதி வழுவாமல் செங்கோல் நடாத்திக்கொண்டு வாழுகிறகாலத்தில் அவ்வரசனுக்கு புத்திரபாக்கிய மில்லாமல் மனவருத்த முற்று அனேக தானதருமங்கள் செய்தும் பலனில்லா மல் சாக்ஷாத்காரமாகிய பரமசிவனை நோக்கித் தவம் செய்ய அத்தவத்தால் அவருக் கொரு பெண் குழந்தை பிறந்தது. அதை நாளொரு மேனியாக வளர்த்து ஐந் தாம் வயதில் பள்ளிக்கு வைத்துச் சகல சாஸ்திரங்களை யுங் கற்பித்துப் பெதும்பைப் பருவம் வந்தவுடனே அர சன் தன் குமாரத்திக்கு ஓர் உப்பரிகைகட்டி அதில் குமா ரத்தியைச் சில தாதியருட னிருக்கும்படி கட்டளையிட்ட னர். அப்படி சிலகாலம் தாதியர்களுடன் கூடி விளை யாடிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் அரசன் தேவி அரசனிடத்திற்கு வந்து நம்முடைய பெண்ணை என் தம்பி பிள்ளைக்கு விவாகஞ் செய்து கொடுக்க வேணு மென்று கூறினள்.

அதற்கரசன் பெண்ணே! நான் என் தமக்கை பிள் ளைக்கு விவாகஞ்செய்து கொடுக்கவேணுமென்று நிச்ச யித்து ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களுக்கு மண வோலைப் போக்கி மணவரைப்பந்தல் அலங்காரஞ் செய்திருக்கிற காலத்தில் உன் தம்பி பிள்ளைக்கு விவா கஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டால் நான் முன்னமே நிச்சயார்த்தஞ்செய்து அரசர்களுக்கும் மண வோலை போக்கி மணவரைப் பந்தல்களுக்கு மலங் காரஞ் செய்தபின் நீ நினைத்த காரியம் முடியாதென்று சொல்லி விட்டனர். அதை அரசன் தேவி கேட்டு என் தம்பி பிள்ளைக்கு விவாகஞ் செய்து கொடுக்கப் போகிறீர் அதைப் பார்ப்போமென்று சொல்லி விட்டு அந்தப்புறஞ் சென்றனள்.

இதுகளையெல்லாம் ஆகாய வீதியில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற தேவர்களுணர்ந்து தேவேந்திரன்

முதலாகிய தேவர்களும் அஷ்டதிக்குப் பாலகர்களும் மற்றுமுண்டான ரிஷிகளும் கூடியிருக்கிற தேவசபையிற் சென்று பிரமதேவரைப் பார்த்து விசாலதேசத்தரசனுக்கும் தேவிக்கும் விரோதப்பட்டு ஒருவர்க்கொருவர் சபதஞ் செய்துக்கொண்டிருக்கிறூர்க ளப்பெண்ணை யாருக்கு பாரியாளாக நினைத்தீர் அதை எங்களுக்கு தெரியச் சொல்ல வேண்டுமென்று கேட்டதற்குப் பிரம்மதேவர்,

> உள்ளிய தெள்ளிய ராயினு மூழ்வினை
> பைய நுழைந்து விடும். (குறள்)

என்பதுபோல ஒரு முடவன் குஷ்டரோகியரால் ஒரு மலையடிவாரத்தி லிருக்கிறு னவனுக்கு மாலையிடுவாள் என்றூர். அதைக்கேட்டு தேவர்கள் இதையறியவேண்டுமென்று கெருடனை யழைத்து, ஓ கெருடனே ! அந்த மலையடிவாரத்தி லிருக்கிற குஷ்டரோகியை ஒரு நிமை நேரத்தில் மகமேரு பர்வதத்தின்பேரில் ஒளித்து வைத்து வாருமென்று கட்டளையிட, அப்படியே நல்லதென்று கெருடபகவான் வந்து அந்த முடவனை களைந்தெடுத்துக் கொண்டுபோய் மகமேரு பர்வதத்தின் பேரில் ஒரு சுனையில் வைத்துவிட்டுப் புறப்படும்போது முடவனுகிய குஷ்டரோகி, ஓ ஐயா! என்னைக் கொண்டு வந்து மனிதர்கள் சஞ்சாரஞ் செய்யாத விடத்தில் ஓர் குகையில் வைத்துவிட்டுப் போகிறீரே உமக்குத் தருமமா எனக்கு மிகவு மாயாசமா யிருக்கின்றது ; நானென்ன செய்வேனையா வென்று முறையிட, அதற்கு கெருடபகவானும் நல்லதென்று வெளியில் புறப்பட்டு வருகையில் பட்டணத்தில் இராசாவின் கலியாண வீட்டில் அரசனுக்கும் அரசன் தேவிக்கும் விரோதப்பட்டுக் கொண்டிருக்கிற தருணத்தில் அரசன் தேவியானவள் தன் குமாரத்தியை ஒரு பேயையில் வைத்து அந்தப்பெண் கையில் திருமங்கிலியமும் மாலையுங் கொடுத்துச் சிறிது கச்சாயமும் பேழையில் வைத்துப் பெண்ணைப் பார்த்து, அம்மா இந்தப் பேழையைத் திறந்தவன் கையில் இந்த மங்கிலியத்தைக் கொடுத்து தரித்துக் கொள்ளென்று சொல்லி விட்டு அப் பேழையைப்

பூட்டி ஒரு மனிதன் தலையின்பேரில் வைத்துத் தன் தாய்வீட்டிற் கனுப்பினள்.

அவன் அரசன் தேவி கட்டளையிட்டபடியே அப் பேழையை எடுத்துக்கொண்டுபோகையில் கெருடபகவா னவர் பார்த்து, இது பலகாரப்பேழையென்று வந்து அறைந் தெடுத்துக்கொண்டு மகமேரு பருவதத்திற் கொண்டுபோய் மூடவனாகிய குஷ்டரோகியருகில் வைத் துபேழையில் உன்பசிக்குவேண்டியதிருக்கிறது; அதை எடுத்து புசித்துப் பசியாறி சுகித்திருவென்று சொல்லி விட்டுபாறையையெடுத்து மூடிவிட்டுத்தேவர்களிடத்திற் குவந்து அந்த மூடவனாகிய குஷ்டரோகியை ஒளித்து வைத்து வந்தேனென்று சொல்லிவிட்டு சென்றனர்.

இங்கே மூடவனாகிய குஷ்டரோகி மிகுந்த பசியான படியினால் பேழையைத் திறக்க, அதிற் கோடி சூரியப் பிரகாசமாக விருக்கின்ற ஒரு பெண்ணிருப்பதை கண்டு பிரமித்திருந்தான். அப்போதப்பேழையிலிருந்த இராஜ குமாரத்தி தன் கரத்திலிருக்கின்ற மங்கிலியத்தை அவன் கையில் கொடுக்க, மூடவனாகிய குஷ்டரோகி அதை வாங்கிக்கொண்டு திகைத்தாற்போல் நிற்கை யில் அப்பெணணனவள் நடந்த காரணங்களை யெல் லாஞ் சொல்லிவிட்டுத் தன் தாய் சொன்ன வாக்கு தப்பாமல் என் கழுத்தில் கட்டுமென்று சொன்னவுடன் மூடவனாகிய குஷ்டரோகி தன் கையிலிருக்கிற மங்கிலி யத்தைக் கட்டி மாலையுந் தரித்துப் பலகாரங்களுஞ் சாப்பிட்டு கெந்த புஷ்ப தாம்பூல மணிந்து இருவருங் கூடி விளையாடிச் சுகித்திருந்தார்கள்.

கேட்டீரோ தருமநந்தனா! கலியாண வீட்டில் பெண்ணைக் காணாமல் ஒருவருக்கொருவர் சண்டை செய் துக்கொண்டு பெண்ணை நீ யொளித்துவைத்தாயென்று அரசன் கோபிக்க, அதை யந்தரவாதிகளாகிய தேவர்களறிந்து பிரமதேவனிடத்திற்கு வந்து இந்த முகூர்த்தத்தில் அப்பெண்ணுக்கும் விவாகம் நடக்கு மென்று சொன்னீரே அந்த முகூர்த்தம் தப்பிப் போய் பெண்ணைக்காணோமென்று சண்டையிடுகிறார்களென்று கேட்டதற்கு பிரமதேவர் அந்த முகூர்த்தத்தில் மூடவ

ணுகிய குஷ்டரோகிக்கு விவாகம் நடந்து விட்டது; நீங்க ளொத்திருக்கிற இடத்திற்குப் போய் பார்த்து வந்தீர்களேயானல் உண்மை வெளிப்படுமென்று கூறினார்.

தேவர்கள் அதைப் போய் பார்த்து வருவோமென்று புறப்பட்டு மகம்மேரு பர்வதத்தின் சமீபத்திற் போய் மலைகுகையில் பாறையை வைத்து அடைத்திருந்ததை திறந்து பார்க்குமிடத்தில் அவ்விடத்தில் பெண்ணும் பிள்ளையும் இருவருமாகச் சந்தோஷமா யிருப்பதைக் கண்டு, கெருடனை யழைத்து மூடவணுகிய குஷ்டரோகியை ஒளித்துவைக்கும்படி சொன்னோமே அவ்விடத்தில் நடந்தவற்றை கூறென்று கேட்க, கெருடனும் நான் ஒளித்து வைத்துத் திரும்பும்போது மூடவணுகிய குஷ்டரோகி இந்தக் குகையில் என்னை கொண்டுவந்து விட்டுவிட்டீரே எனக்கு மிகவும் ஆயாசமாக விருக்கிறது ஏதாகிலும் தின்பண்டங் கொண்டு வந்து கொடுக்கவேணுமென்று கேட்டதற்கு ஏதாகிலும் கொண்டுவந்து கொடுக்கலாமென்று புறப்பட்டு வரும்போது வழியிலிந்தப் பலகார பேழையைக் கண்டு எடுத்துக்கொண்டு போய் கொடுத்து விட்டுப் பாறையை எடுத்து மூடிவிட்டு வந்தேன். இதிலிப்படியிருந்தது நானறியேனென்று சொல்லத் தேவர்களும் பிரமலபி தப்பாதென்று சந்தோஷித்து பிரமதேவ னிடத்திற்கு வந்து தெய்வ அரம்பைக் கொப்பான பெண்ணை அந்த சப்பாணிக்கு மாலையிடக் கட்டளையிட்டீர்; அவனை எங்களுக்காக மன்மத சொரூபமாகக் கட்டளையிட்டு ரக்ஷியுமையாவென்று கேட்க, பிரமதேவரு மப்படியே உங்கள் கருத்தின்படி செய்கிறேன் என்றவனுந் திவ்விய தேகமாகும்படி அவனுக்கனுக்கிரகித்து ஒரு நகரத் தரசனென மகுடஞ்சூட்டி அநேக வரங்களையும் கொடுத்தனர். அதைப் பெற்றுக்கொண்டு சிலகாலம் இராச்சிய சம்பத்து நீதி வழுவாமல் அரசாட்சி செய்துக் கொண்டிருந்து பின்பு சாம்பவமூர்த்தியை நோக்கி தவஞ்செய்து அத்தவத்தால் சாம்பவமூர்த்தியினுடைய வனுக்கிரகம் பெற்றுச் சாயுச்சிய பதவி யடைந்தார்கள்.

ஆகையால் விதிவசம் தப்பாதென்று செவிலித்தா யானவள் கதை சொல்லி முடித்துவிட்டனள்.

பின்பு ராஜகுமாரத்தியாகிய அதிரூப புஷ்பபாஞ் சாலி செவிலித்தாயிடத்தி லிருக்கிற மணமாலையைத் தன் கரத்தில் வாங்கிக்கொண்டு எனது எண்ணத் தின்படியே முடிக்கவேண்டுமென்று பரமசிவத்தை தியானித்து தன் கையிலிருக்கிற மணமாலையை சுழற்றி ஆகாயவீதியிலெறிந்து கும்பிட்டுகொண்டு நின்றாள் அந்த மாலையானது சுழன்றுகொண்டேவந்து அநேக தூரத்திலே யிருக்கிற மூடவனாகிய புரூரவ சக்கிரவர்த் தியினுடைய கழுத்திலே விழுந்தது. விழுந்த மாத்திரத் தில் ஓவென்ற சப்தமாயும் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத் திரனென்று சொல்லப்பட்ட நான்கு வருணத்திலுள்ள ஜனங்களும் கைகொட்டி நகைத்து, ஓஓ ராஜாவின் குமாரத்திக்கு வந்த விதியைப் பார்த்தீர்களோ வென்பா ரும், இராஜர்களிருக்க அவளுக்கென்ன தெரியாதோ வென்பாரும், தெய்வமிப்படி செய்யவேண்டுமோ வென் பாரும், திருடியறுப்புண்ட சப்பாணிக்கு மாலையிட்டா ளென்பாரும் ராஜாக்களை யெல்லாம் ஏளனம் பண்ண படியால் சங்கீதம் வாசிக்கப்பட்டவர் களுக்கும் இப்படி தான்வாசிக்க வேண்டுமோ வென்பாரும், ஆனாலென்ன இன்னமொருதரம் தனக்குச் சரியான பேருக்கு மாலையிடுவா ளென்பாரும் இவ்விதமாக அவர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளை புஷ்பபாஞ்சாலி கேட்டு நானினைத்த படியே நமதெண்ணம் பலித்ததே நான் தொழுததெய்வமே தெய்வமென்று அதிக ஆவலுடனே செட்டியாரருகி லிருக்கிற சப்பாணியாகிய புரூரவச் சக் கிரவர்த்தியி னருகேபோய் நின்றுக்கொண்டு என்பத்தா வானவர் இவரேயென்று சந்தோஷித்துக் கைகொட்டி நின்றாள்.

அப்போதிந்த வர்த்தமானமெல்லாம் தகப்பனாகிய செய்தவராஜன் கேட்டு மெய்மறந்து சிங்காதனத்தி லிருந்து மூர்ச்சையாய் கீழேவிழ அருகில் நிற்கின்ற மந் திரி பிரதானிக ளெடுத்தணைத்தது மூர்ச்சை தெளியச் சயித்திய உபசாரங்கள்செய்ய மயக்கந்தெளிந்து புலம்பு

கிறதும், பெண் சப்பாணிக்கு மாலேயிட்டதும் இப்படியாய் அரசன் மகா துயரத்துட னிருக்கும்போ தந்தப்புரத்தி லிருக்கிற அரசன் தேவியான திலதவதியாள் கேட்டு என் பெண் மூடவனுக்கு மாலேயிட்டாளோ வென்று ஓ வென்ற சப்தமா யடியற்ற மரம்போல் பூமியில் தொப்பென்று விழுந்து மூர்ச்சையாய் கிடப்பதை யருகிலிருக்கிற தாதியர்க ளநேக சயித்தியோபசாரங்கள் செய்து மனம் பொறுக்க முடியாமல் சமுத்திர கோஷ்டம்போல் அரசனிருக்கிற சபா மண்டபத்திற்கு வந்து நாம் புத்திரபாக்கிய மில்லாமல் தபசு பண்ணி பெற்ற பெண்ணுக்கு இப்படி லபிக்குமோவென்று அரசனிட பாதத்தில விழுந்து புரண்டழுகிறபோது அருகிலிருக்கிற தாதியர்களெடுத்து மார்புடன் சாத்திக்கொண்டு அந்தப்புரத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

அரசன் மந்திரியைப் பார்த்து திருடி ஆக்கினேபட்டவனுக்கு மாலேயிட்டாளென்கிற வார்த்தையைக் கேட்டும் உயிருடனிருப்பது நலமல்ல வென்று உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிற சமயத்தில் குலகுருவாகிய வதிஷ்ட முனிவர் வந்து கையைப் பிடித்துக்கொண்டு இப்படி செய்வார்களோ பேய்கொண்ட அரசனே அவள் விதி இப்படி யிருந்தால் நாம் செய்வதாவதேது வலிய உயிரை மாய்த்துக் கொண்டால் சாகத்துவமளவும் அதனுலே நரகமுண்டு. அப் பெண்ணினுடைய அருமையைப் பாராமல் அவள் புருஷனுடனே கூட்டி அடவியில் போகச் சொல்லுகிறதே நலம் அதற்காக மனங் கலங்குவார்களோ வென்று சொல்லினர்.

அரசன் அருமையாய் பெற்று வளர்த்த பெண்ணே காட்டிற்குப் போகச் சொல்லி எப்படி சகித்திருப்பேனென்றதற்குக் குலகுருவாகிய வதிஷ்டர் ஜனக சக்கிரவர்த்தியினுடைய பெண்ணுகிய சீதாபிராட்டியார் கலியாணம் பண்ணினவுடனே காட்டிற்குப் போக வில்லேயா அவளே யறிந்த பேருண்டோ அப்படி போலவே இதுவுமொரு காரணத்துக் கேதுவானபடியால் இவ் விதமாக முடிந்ததென்ருர்.

அரசன் இவைகளையெல்லாங் கேட்டு அந்தப்புரஞ் சென்று தன் தேவியாகிய திலதவதியாளிடத்தில் குல குருவாகிய வசிஷ்டர் சொன்ன பிரகாரஞ் சொல்லினர். திலதவதியாரும் குருவாக்கியமே பெரிதாகையால் அப் படி செய்வதே நலமென்றாள். உடனே அரசன் ஊழியக் காரர்களை யழைத்துவரச் சொல்லிக் கட்டிக்கொண்டு, அம்மா உன்னுடைய கலியாணத்தில் இழிவு இவ்வள வென்று சொல்ல முடியாது முன்னமே அரசர்கள் வந்து கேட்டபோது அவர்களுக்குக் கொடுக்க சம் மதிக்காமல் பண்ணி வைத்தது விதியே யல்லாமல் வேறல்ல வென்று வருத்தப் படுகிறபோது புஷ்ப பாஞ் சாலி அரசனைப் பார்த்து என் பத்தாவை விட்டு இவ் விடத்தில் வந்து வெகுநேர மாச்சுது நீரும் வ்சை பொறுக்கமாட்டீர் நீரிவ்விடத்தில் இருக்கச் சொன்ன போதிலும் நானிவ்விடத்திலிருந்து இகழ்ச்சியான வார் த்தைகளை கேட்டுக் கொண்டிந்த பட்டணத்தி லிருக்க மாட்டேன் நானுமென்னுடைய பத்தாவும் காட்டிலே போய்க் கந்தமூலபலாதிகளைப் பரித்தவருக்கு கொடுத்து தானுமருந்தி என் பத்தாவுள்ளமட்டும் மிருப்பேனென் றும் அவரிறந்த காலத்தில் நானுமிறப்பேன் இனி ஒரு நாழிகையாகிலும் இவ்விடத்தி லிரேனென்று சொல்லினள்.

இதுகளை யெல்லாம் அரசன் கேட்டு, நல்லது தாயே எனக்கு வேண்டிய பாக்கிய மிருக்க இவைகள் வேண்டாமென்று சொல்லித் தானணிந்திருந்த ஆபர ணங்களை யெல்லாம் கழட்டி பரதேசிகளுக்கு அரசன் முன்பாகக் கொடுத்து தகப்பனிடத்திலும் தாயிடத்தி லும் செலவு பெற்றுக்கொண்டு புரோகிதருடனே தன் பத்தாவான புரூரவச் சக்கிரவர்த்தியின் சமீபத்தில் வந்து நின்றனள் முடவனாகிய சக்கிரவர்த்தி புஷ்பபாஞ் சாலியைப் பார்த்து மெத்தவும் வியாகூல மடைந்து முன்னாலே திருடிக் கைகால் அறுப்புண்ட எனக்கு நீ மாலையிடலாமா? இனிமேலாகிலும் உனக்குச் சம்மதி யான பேருக்கு மாலையிடும் என்று கூற, புஷ்பபாஞ்சாலி

உம்மிட பாதமே யல்லாமல் வேறு கதி யில்லையென்று தலை யிறங்கிக்கொண்டு நின்றனள்.

அப்போ தருகிலிருந்த பரதேசி காவற் செட்டியாரும் வாருமம்மா என்னுடைய அரண்மனையி லிருங்கள்; உங்களுக்கு வேண்டிய பாக்கியத்தைத் தருகிறேன் சுகித்திருங்க ளென்றார். அதற்கு இராஜகுமாரத்தி நானிந்தப் பட்டணத்தில் நிமைப்பொழுதாகிலு மிருக்கிறதில்லை; உன் பத்தாவையும் நான் விட்டுப் பிரிகிறதில்லை யென்று கூறினள். சப்பாணியாகிய புரூரவச் சக்கிரவர்த்தி பெண்ணே! இன்றையதினம் பரதேசி காவற் செட்டியார் மனதின்படி யிருந்து இவ்விடத்தில் செலவு பெற்றுக்கொண்டு போகலாமென்று சொன்னதற்கு அரை நிமிஷமாகிலும் இந்தப்பட்டணத்திலிருப்பது நலமல்ல வென்று கூறினள். அந்த வார்த்தைகளைக் கேட்டிருந்த செட்டியார் வெகு உற்சாகங்களுடனே இரண்டு பேரையும் பல்லக்கின் மேல் வைத்துக்கொண்டு பட்டணங் கடக்க கொண்டு வந்து விட்டு முடவனாகிய சக்கிரவர்த்தியினிடத்திற் செலவு பெற்றுக் கொண்டு தாமிருக்கிற விடத்திற்கு வந்து விட்டார். இவர்க ளிரண்டுபேரும் ஒரு செடியருகே யிருக்கிற வேளையில் சப்பாணியாகிய புரூரவச்சக்கிரவர்த்தி தன் மனைவியைப் பார்த்து என் விதி இப்படி யிருந்தால் நீ தூங்கு மஞ்சத்தின்பேரில் தோழிமார் சூழ விருக்கிற உனக்கு இப்படி வரவேண்டுமோ? இவையும் திருவுளச் செயலென்று விசனப்பட, ராஜகுமாரத்தி அடியேனுக் கென்ன தேவரீர் திருமேனி வருந்தாமலிருக்க எப்போது காண்பேனோ? அடியேன் ஜனன மென்றைக் கீடேறு மென்று விசனப்பட, முடவனாகிய சக்கிரவர்த்தி இவள் வருத்தமும் வணக்கமுங் கண்டு சந்தோஷித்து இவளே கற்புடைய ஸ்திரீ என்று மதித்து இவளாலே நமக்கு நலமுண்டாகு மென்றெண்ணிக்கொண்டு பாஞ்சாலியைப் பார்த்து, என்னை நீ முன்பின் னறிந்தவளல்லவே உனக்கென்பேரில் இத்தனை தயவானதென்ன வென்று வினவ, புஷ்பபாஞ்சாலி சுவாமி! நான் வசந்த காலத்தில் ஒரு நாள் உப்பரிகை மேடை

யின்பேரில் தாதியருடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது தென்றல் வீச மனஞ் சகிக்காமல் அந்த மேடையின் பேரில் சயனித்துக் கொண்டு அருகி லிருக்கிற உயிர்த்தோழியைப் பார்த்து இந்நாள் வரைக்கும் இந்த காமவிகார மென்கிறது இன்னதென்று சொல்லிக் கொண்டிருக்கிற காலத்தில் ஓர் கீதநாதத்தினுடைய தொனி என் செவிக்குக் கேட்ட மாத்திரத்தில் நான் அணிந்திருந்த கம்மலிலிருந்த பச்சைக்கல்லானது உருகி விழுந்ததைக் கண்டு மெய் சோர்ந்து தெளிந்து அருகிலிருக்கிற உயிர்த்தோழியைப் பார்த்து இந்தக் கீதநாதம் பாடத் தக்கினவர்க ளிந்த அரசாட்சியிலில்லையே. ஆகையால் நீ போய் பார்த்துவா வென்று உத்தரவு செய்தேன்; அதே பிரகாரம் பார்த்து வந்து பரதேசி காவற் செட்டியார் வீட்டிலிருக்கிறவர் அரண்மனையில் பேழை திருடினவரென்று அரசன் ஓர் கையுங் காலையும் வாங்கிப் போட்டாரே அவர் செட்டியார் வீட்டில் கீதநாதம் வாசித்துக் கொண் டிருக்கிறரென்று கூறினள். அன்று முதற்கொண்டு சப்பாணியாகிலும் அவரே பத்தாவென்று திருவுளப்பாங்காக எண்ணியிருந்தேன் எனது எண்ணத்தின்படி முடிந்த தென்று சொல்லினள்.

அவள் வார்த்தைகளைக் கேட்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிற தருணத்தில் சரஸ்வதியம்மன் இவர்க ளிருக்கிற விடத்திற்கு தேவாமிர்தத்தைக் கொண்டுவந்து நீங்கள் இராக்காலத்தில் தனியே யிருப்பீர்களோ வென்று கேட்டதற்கு தாயே! உம்முடைய கடாட்ச முண்டா யிருக்க, நாங்கள் எங்கே யிருந்தா லென்னவென்று மிகுதியுமானவுடனே வணங்கிச் சொல்ல, சரஸ்வதியம்மனும் ஒரு இரத்தினத்தை வைத்துப் பிரகாச முண்டாக்கினள் அந்தப் பிரகாசத்தைக் கண்ட மாத்திரத்தில் புஷ்பபாஞ்சாலி எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்ய. சரஸ்வதியும் தீர்க்க சுமங்கலியா யிருக்கக் கடவதென்று வாழ்த்தி தான்

கொண்டு வந்த தேவாமிர்தத்தை இருவருக்கும் கொடுத்துவிட்டு அந்த விடத்தில் விசுவகருமனை அழைப்பித்து சொர்னமயமான மாளிகையும் இரத்தின கோபுரமும் வெள்ளி மதிலும் மாடமாளிகையும் கூடகோபுரமும் உப்பரிகையு முண்டாக்கி அந்த மாளிகையில் இவர்க ளிருவரையுங் கொண்டுபோய் வைத்துச் சுகத்திலிருங்களென்று சொல்லிவிட்டுப் போயினர்.

கேளும் தருமபூபதியே! அந்தச் சபா மண்டபத்தில் அபரஞ்சி மேடையின்பேரில் சிறிது நாளிருக்கையில் தெய்வலோகத்திலே விதியு மதியுமாகிய தேவர்கள் இரண்டுபேரும் நீ பெரியவனென்று நான் பெரியவனென்று ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக் கொண்டு இருவரும் தெய்வசபைக்கு வந்து கூறினர்கள். தேவர்கள் எங்களுக்குத் தெரியாது பூலோகத்திலே மனுவிக்கியான ராஜனுக்குந் தெரியுமென்று கூற, அவரெங்கே யிருக்கிருரென்று கேட்டதற்கு அவர் சனீஸ்வரபகவான் சோதனையினுல் வனத்தில் வாசமாக விருக்கிருர். அவராலே உங்களிருவருடைய வழக்குத் தீருமென்று சொன்னதைக் கேட்டு இருவரும் பூலோகத்திற்குப் போகலாமென்று பிராமணர்களைப் போலே வேடங்கொண்டு சக்கிரவர்த்தியைக் கண்டு ஆசீர்வாதம் பண்ணி அட்சதையும் கொடுத்தார்கள். புரூரவச் சக்கிரவர்த்தி அந்தப் பிராமணர்களைப் பார்த்து நீங்களெவ்விடத்திலிருந்து வருகிறீர்கள் உண்மை வெளியிடுங்களென்று கேட்டதற்கு நாங்கள் தீர்த்தவாசிகள் வழி நடக்கும்போது விதி பெரிதென்றும் மதி பெரிதென்றும் ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக் கொண்டு இவ்விடத்தில் தெய்வீகம் விளங்குகிறதாய் கேள்வியுற்று உம்மிடத்திற்கு வந்தோம் அதின் உண்மையை வெளியிட வேண்டுமென்று கூறினுர்கள்.

ஆனுல் உங்களிருவருடைய வழக்கைச் சொல்லுங்களென்று இருவரிலொருவர் நான் விதிதப்பிப் பிழைத்தபோர்களில்லையோ வென்றேன். அதற்கு அவர் மார்க்கண்டனுக்கு விதி பதினுறு வயதாக பிரமதேவர் கட்டளைப்பண்ண அவை மார்க்கண்டரறிந்து மதியிலே பரம

சிவத்தினுடைய அனுக்கிரகப்படிக்கு என்றும் பதினறு வயதாகச் செய்துகொண்டா ராகையால் மதியிலே பெரி தென்று சொன்னரென்று சொன்னர். சக்கிரவர்த்தி ஓ பிராமணரே! அப்படியுஞ் சொல்லுவார்களோ முன் மார்க்கண்டருக்கு பதினறு வயதென்றும் எண்ணும் பதினறு வயதாகச் செய்துக்கொண்டதும் விதியானபடி யினலே அப்படி முடிந்தது, விதியை வெல்லுவதற்கு ஒருவராலு முடியாது. அதற்குத் திருஷ்டாந்திரஞ் சொல்லுகிறேன் விதியினலல்லவோ சனியன் காக மேறினதும்; மூதேவி கழுதையேறினதும்; தேவேந் திரன் சரீரம் பழுதானதும்; மாண்டவ்யரிஷி கழுவி லேறினதும்; புரூரவச்சக்கிரவர்த்திக்கு கையும் காலும் அறுப்புண்டு போனதும் இதுகளெல்லாம் விதியின லல்லவோ முடிந்தது.

வள்ம்பட வேண்டாதார் யார் யாருமில்லை
அளந்தன போக மவரவ ராற்றன்—விளங்காய்
திரட்டின ரீங்கில்லைக் களங் கனியைக்
காரெனச் செய்தாரு மில். (நாலடியார்)

என்று விதிபெரிதென்று சொன்ன மாத்திரத்தில் அந் தர வாசிகளாகிய தேவர்கள் சந்தோஷப்பட்டு புஷ்ப மாரி பொழிந்து காட்சிக் கொடுத்து நீயே சத்தியவா னென்று சொல்லிவிட்டு மறைந்தனர்கள். பின்பு இரண்டு பிராமணர்களு மிது தகுதியான வுத்திர வென்று இருவரும் பேசிக்கொண்டு தங்களிருப்பிடஞ் சென்றனர்கள். அவ்வேதியர்கள் சென்ற பின்பு சனீஸ் வரபகவான் புரூரவச்சக்கிரவர்த்தியினிடத்திற்கு வந்து அரசனைக் கண்டு முன் நாம் உம்மிடத்திற்கு வந்த போது முதுமை நலமோ இளமை நலமோ வென்று சொன்னீர் அன்று முதலாக யின்றவரைக்கும் நான் செய்து வந்த கொடுமைகளை யெல்லாம் பொறுத்தீரே நீயே சத்தியகுண சீலரென் றனுக்கிரகிக்கும்போது பரமசிவன் மகாவிஷ்ணு பிரமா இவர்கள் முதலான பேர்களும் பிரசன்னமாக வந்து அதிக பிரியத்துடனே முன்னிலு மதிகமான தேககாந்தியும் கைகால் வளர்ந்து உமது வாக்கு தப்பாமல் அரசாட்சி செய்து முடிவில்

தெய்வபக்தியும் பெற்று சாயுச்ய பதவியைப் பெறுவா யென்று ஆசீர்வதித்துப் போயினர்கள்.

பின்பு அரசன் தேவியான புஷ்பபாஞ்சாலி தேவர் களைக்கண்டு கண்களிகூறச் சக்கிரவர்த்தி சனீஸ்வரனைப் பார்த்து தமது திருவுளத்தினாலே சகல தேவர்களையும் காணப் பெற்றோமென்று தெண்டனிட்டு நிற்கையில் சனீஸ்வரபகவான் என்னுடைய காலமின்றளவில் சரி யென்று சொல்லுகிறபோது சரஸ்வதியம்மன் சக்கிர வர்த்திக்கு தேவாமிர்தங் கொண்டு வந்தபோது சனீஸ் வர பகவானைப் பார்த்து நீர் எந்நாளுமிந்த சக்கிர வர்த்தியி னிடத்திலிருந்து ரட்சியுமையா வென்று கூறினள். அதற்கு நல்லதென்று அங்கீகரித்துக் கொண்டு செலவு பெற்றுக் கொண்டு அந்தரத் தியான மாய்ப் போய் விட்டார்.

கேளும் தருமநந்தனா! இதுகளை யெல்லாம் பார்த் திருந்த புஷ்பபாஞ்சாலி மிகுந்த பேரானந்தத்தை யடைந்து முன்னிலுமெண்மடங் கதிகமாக நாயகனிடத் தில் பிரிவாற்றாமையை மேற்கொண் டிருக்கும்போது ஒரு நாள் மனதில் புத்திர பாக்கியத்தின்பேரில் இச்சை தெளிந்ததை சக்கிரவர்த்தி யறிந்து அவள் மனதின் படி புத்திர அபேட்சையை நிறைவேற்ற வேணு மென்று கருதி இருவருக்குந் தனது சாத்திரத்தில் சொல்லியபடி கிரீடித்து ஓர் புத்திரனைப் பெற்று சுகத்தி லிருக்கும்போது சரஸ்வதியம்மன் சக்கிரவர்த் திக்கு தேவாமிர்தத்தை கொண்டுவந்து கொடுத்துவிட்டு காட்டின் வழியாகபோகிறபோது அவ்விடத்திலெதிர்ப் பட்டவர்கள் பார்த்து, அம்மா! விருதாப்பியமா யிருக்கிறீர்களே எங்கிருந்து வருகிறீர்களென்று கேட்க, அப்பா நானிந்த வழிக்கு மேற்கே ஒரு நாழிகை வழி தூரத்தில் தெய்வீகம் விளங்குகின்றன. அவ்விடத்தி லிருந்து வருகிறேன் என்று சொல்லிப் போயினள், அவர்களந்த வார்த்தையைக் கேட்டுக்கொண்டு நாம் போய் பார்த்து வருவோமென்று போய்பார்க்குமளவில் அந்தம்மாள் சொன்ன வார்த்தைகள் உண்மைதா னென்று பட்டண மெங்கு மிந்த தெய்வீகத்தினுடைய

பெருமைகளை சொல்ல, அதைக் கேட்டிருந்த பேர்கள் தங்கள் தங்கள் குறைவுகளை தீர்த்துக் கொள்ளவேண்டு மென்று தெய்வீகத்திற் சென்று அவரவர்கள் பெற்றுக் கொண்ட வரங்களையும் நகரமெங்கும் பிரசித்தமாக சொல்வதைக் கேட்ட செவிடு குருடு ஊமை முடவர் குஷ்டரோகிகள் முதலான பேர்களு மவ்விடத்திற்குச் சென்று அந்த தெய்வீகத்தைக் கண்டு எங்களுக்கு நேரிட்டிருக்கின்ற துன்பங்களேததோ? அவரவர்கள் நினைத்து வந்தபடியே அத்துன்பங்கள் நீங்கக்கடவ தென்று கட்டளையிட, அவர்களுக்கு அந்த நோய் தீர்ந்து சுகமுற்றிருந்தனர்கள். இதுகளை யெல்லாம் பார்த்திருந்த மனைவியாகிய புஷ்ப பாஞ்சாலி சிவசிவா உம்முடைய திருவிளை யாட்டோ வென்று தியானித்துக் கொண்டிருக்கும்போது சக்கிரவர்த்தி தன் தேவிக்கு சிரத்தைகளாகிய ஆகமபுராணங்களை எடுத்தோதி சில விரதங்களை அனுஷ்டித்து வரும்படி கட்டளையிட்டு பின்பு வனங்களிலும் மலைகளிலும் உண்டாகிய அதிசயங்களை தேவிக்குசொல்லிக் கொண்டு வருகையில் அவ்வனத்தில் சஞ்சரிக்கின்ற ரிஷிகள் தபோதனர்கள் இவர்களைக் கண்டு வினவி சிவஞானப் பிரசங்கங்களை பேசிக் கொண்டிருக்கையில் செய்தவராசன் தன் குமாரத்திக்கு கலியாணம் பண்ணின நாள் முதற்கொண்டு மன வருத்தத்தாலும் அரசாட்சி செலுத்தாமல் மனோ வியாகூலத்துடன் இருக்கும்போ திவ்விடத்தில் தெய்வீகம் விளங்குகின்ற சமாச்சாரத்தை மந்திரிகளால் அரசனுக்குத் தெரிவிக்க, அரசனும் மந்திரியுப் இரதகஜ துரகபதாதிகளுடன் வனத்திற்கு வந்து காட்டிலே யிருக்கின்ற இருளர் மறவர்களைப் பார்த்து என் குமாரத்தியையும் என் மருமகனையும் காட்டிற்குப் போகும்படி அனுப்பிவிட்டோம் அவர்களைக் கண்டபேர்களுண்டோ வென்று கேட்க, அவர்கள் காட்டிலே வந்தநாள் முதற்கொண்டு நாங்கள் பார்த்ததில்லை; இப்போது இவ்விடத்தில் ஏதோ ஒரு கோயில் நூதனமாக உண்டாயிருக்கின்றது. அதைப் பார்க்க ஆயிரஞ் சிரசைப் படைத்த ஆதிசேடனாலும் முடியாததாக யிருக்கின்றது. அப்படிப்பட்ட கோயிலுக்குள்ளே யிருந்து

ஒரு பெண்ணும் பிள்ளையுமாக வருகிறார்கள் அவர்கள் எங்கு மூலாவிப்போட்டு மறுபடியும் கோயிலுக்குள்ளே போகிறார்கள். அவ்விடத்தில் தெய்வீகம் விளங்குகின்றது சகல ஜனங்களும்வந்து அவர்கள் நினைத்துவந்த காரியங்களும் நீங்குதையாவென்று சொல்ல, அதுகளைக் கேட்ட அரசன் தெய்வீகத்தைப்பார்த்து வருவோமென்று அரசனும் மந்திரியுமாக சமீபத்தில் வந்து பார்க்குமளவில் சொர்க்க லோகத்திலு மெண்மடங்கதிகமாக விருக்கின்றதை நோக்கி ஆச்சிரியமடைந்து, இவ்விடத்தில் நாம் மூன் நாலைந்துதரம் வேட்டைக்கு வந்திருந்தோம் அப்போது இந்தப் புதுமைகளில்லை. இப்போது ஏதோ நூதனமாக விருக்கின்றது இதின் உண்மையை விசாரியுமென்று கட்டளையிட மந்திரி அவ்விடத்தி லிருக்கின்ற பேர்களை யழைத்து இந்த ஆலயத்தி லிருக்கின்ற தேவதை யாரென்று கேட்க, அவர்கள் ஏதொன்றுந் தெரியாதென்று சொல்லினர். அதை அரசனுக்குத் தெரிவிக்க அரசனும் மந்திரியும் இந்த தெய்வீகத்தினுடைய உண்மை நமக்குத் தெரியவேண்டு மாதலால் கொஞ்சநேரமிருந்து பார்ப்போமென்று நிற்கின்ற தருணத்தில் மூடவனானவன் அக்கோயிலுக்குள் நுழைந்ததைப் பார்த்து இருவரும் இவனால் நமக்கு உண்மை வெளியாகுமென்று அவன் வரவை பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது மூடவனுக்கு காலும் கையும் வளர வெளியில் புறப்பட்டு வருவதைக்கண்ட ராசனும் மந்திரியும் அவனைக்கேட்க அவன இக்கோயிலிலே செந்திருமேனியாக பரமேஸ்வரனும் பார்வதியும்போல திவ்விய சொரூபத்துடனே இரண்டுபேர்க ளிருக்கிறார்கள். அவர்களைக் கண்டு தெண்டம்பண்ணி சுவாமி! என் மூடம் தீரவேணுமென்று கேட்டுககொண்டதற்கு உன் கருத்தின்படி தெய்வீகம் விளங்குகின்ற காலத்திற்கு வந்து போகலாகாதென்று இவ்விடத்தில் நடந்தவற்றை யெல்லாம் அரசன் தேவிக்கு சொல்லி யனுப்ப தூதுவர்கள் சென்று அரசன் தேவியிடத்தில் இங்குள்ள அதிசயங்களை யெல்லாஞ் சொல்லக் கேள்விப்பட்டு மிக்க ஆவலோடு புறப்பட்டு அரசனிடத்திற்குவர, அரசன்

மனைவியைப் பார்த்து பெண்ணே! இவ்விடத்தில் தெய்வீகம் உண்மையாக விளங்குகின்றது. நாம் போய் நம்முடைய குறைகளை எல்லாஞ் சொல்லிக்கொள்ளுவோமென்று கூறி, இருவரும் ஸ்நானஞ்செய்து நிஷ்டைகளை முடித்துக்கொண்டு காணிக்கை முதலானதுகளையு மெடுத்துக்கொண்டு மந்திரியுடனும் கோயிற் புகுந்து அந்த தெய்வீகத்தைக்கண்டு சிவசிவாவென்று நமஸ்காரம் பண்ணினார்கள்.

அப்போது புரூரவச் சக்கிரவர்த்தி இவர்களைப் பார்த்து இவர்கள் நம்மிட மாமனும் மாமியுமென்று உணர்ந்து இருவருக்கும் நமஸ்காரஞ் செய்து நின்றனர்கள். அப்போது செய்தவராசன் நிற்கிறவர்களைப் பார்த்து மிக ஆவலுடன் கேளுமையா! சில நாளைக்கு முன் என் குமாரத்தியையும் மருமகனையும் வனத்திற்குப் போகும்படி அனுப்பி விட்டேன். அவர்களைக் காணுமல் தேடிவந்தோமாகையால், எங்களுக்கு உண்மை விளங்கவேண்டுமென்று கேட்க வந்தவிடத்தில் நீங்களிருவரும் எங்களை நமஸ்காரஞ் செய்துகொண்ட காரணத்தை தெரிய அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வினவ, அதற்கு சக்கிரவர்த்தி குறுநகை கொண்டு நீங்களொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை நாங்கள்தான் உம்முடைய பெண்ணும் மருமகனென்றுஞ் சொல்லினர். செய்தவராசன் அவருக்கு காலுங் கையுமில்லையே? எவ்விதமாக வளர்ந்ததென்று கேட்க சக்கிரவர்த்தி சாம்பசிவமூர்த்தியினுடைய அனுக்கிரகத்தினாலே பழையபடி காலுங் கையும் வளர்ந்து இவ்விடத்தி லிருக்கிறேனென்று சொல்ல, இதுகளை யெல்லாங் கேட்ட செய்தவராசன் மிக வாச்சரியப்பட்டு சந்தோஷித்துக் கொண்டிருக்கிற தருணத்தில் சரஸ்வதி யம்மனுந் தேவாமிர்தத்தைக் கொண்டுவர அம்மனைக்கண்டு சக்கிரவர்த்தியும் புஷ்பபாஞ்சாலியும் நமஸ்காரம் பண்ணி நிற்க, சரஸ்வதி அம் மனிதர்களைப் பார்த்து இவர்கள் யாரென்று கேட்க, புஷ்பபாஞ்சாலி என் மாதா பிதாக்களென்று சொல்லினள். நல்லதென்று வந்திருக்கிறவர்களுக்கு ஒரு தளிகை யன்

னத்தை பகுந்து கொடுத்துப் போயினள்; இதனைச் செய்தவராசன் உணர்ந்து மருமகனுடைய சுந்தரத்தையுந் தெய்வீகத்தினுடைய உண்மைகளைக் கண்டு அளவற்ற சந்தோஷமுண்டாகி இவ்விடத்தில் ஒரு பட்டணம் உண்டாக்க வேணுமென்று யோசனைபண்ணிக்கொண்டு இவ்விடத்தில் நடந்த மகிமைகளை எல்லாம் பரதேசி காவற்செட்டியாருக்கு சொல்லி யனுப்பி செட்டியா ரிந்த சமாச்சாரங்களை கேட்டமாத்திரத்தில் சந்தோஷத்துடன் வந்து கோயிலுக்குட்சென்று சக்கரவர்த்தியையும் அவர் தேவியையும் தெய்வீகமாக பாவித்து நமஸ்காரம் பண்ணினர். அவரைச் சக்கிரவர்த்தி யெடுத்து மார்புட னணைத்துக்கொண்டு ஐயா! சாம்பவ மூர்த்தியினுடைய அனுக்கிரகத்தினல் பழையபடி காலுங் கையும் வளர அனுக்கிரகம் பெற்று இவ்விடத்தி லிருக்கிறேனென்று சொல்லக்கேட்டு செட்டியார் சக்கிரவர்த்தியைப் பார்த்து தேவரீர் சுவாமியேயல்லது மனிதரென்று குறிக்கப்போகாதென்றுமிகுந்த ஆரூமையுடன் கூற, சக்கிரவர்த்தி இதுகளெல்லா மும்முடைய தயவினல் சாம்பவ மூர்த்தியினுடைய வனுக்கிரகம் பெற்றுக் கொண்டேனென்று சொல்லினர்.

அதன்பின்பு செட்டியாரும் செய்தவராஜனும் அவர் தேவியும் மந்திரியு மிவர்கள் நால்வரும் ஒருபட்டணம் நியமிக்கவேண்டுமென்று கருதி காடு மலைகளை யெல்லாம் சீர்திருத்தி நல்ல திதிவார யோக கரண நக்ஷத்திரங்கள்கூடிய சுபதினத்தில் ஒருபட்டணங்கட்டி அதில் மாடமாளிகை கூடகோபுரங்க ளியற்றி பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தார்களுக்கும் வீதிகளுந்தேவாலயங்களும் சந்நிதி வீதிகளும் யாகசாலை எக்கியசாலைகளும் யோகசாலைகளும் அஸ்வசாலைகளும் கடைவீதிகளுங் கட்டி பரதேசிகளு மமைத்து அப்பட்டணத்திற்கு தன் மருமகனுகிய புரூரவச் சக்கிரவர்த்திக்கு மகுடந் தரித்து தெய்வீக ராஜனென்று நாமகரணஞ்செய்ய மனு நீதி தவருமல் செங்கோல் நடத்திக்கொண்டு மந்திரி பிரதானிகள் சூழ, ஊரிலொரு கடமைகுறைவில்லாமல் நடப்பித்துக்

கொண்டுவந்தார். அப்போது இவ்விடத்தில் தெய்வீகம் விளங்குதென்றும் நூதனமான ராஜாக்கள் வந்திருக்கிறார்களென்றுந் தேசாந்தரங்களிலிருந்து வந்த பேருக்கு அவர்களுக்குத் தக்கின தொழில்களுங் கொடுத்து நடப்பித்து வருகிற காலத்தில் சக்கிரவர்த்தியினுடைய பழமையான மதிதீர னென்கிற மந்திரியானவன் தன்னுடைய அரசனும் ராஜபத்தினியும் பிள்ளைகளும் இராக்காலத்திற் போனார்களே காணோமே யென்று அரண்மனை யந்தப்புரங்களெல்லாஞ் சோதித்துங் காணாமையால் என்னாண்டவனை எப்போது காண்பேனோ? கண்டா லல்லது உயிர்வாழே னென்று ஆண்டிவேடம் பூண்டுக்கொண்டு பூமியெங்குந் தேடிக் காணாமையால் வியாகூலப் பட்டுககொண்டு அந்நகரத்திற்கு வருகிற போது இவ்விடத்தில் தெய்வீகபுரமென்றும் தெய்வீகம் விளங்குகிறதென்றும் பேசிக் கொள்வதைக் கேள்விப் பட்டு அப்பட்டணமே வந்து அவ்விடத்தில் நடக்கின்ற புதுமைகளையும் பட்டணத்து அதிசயங்களையுங் கண்டு ஆச்சரியப்பட்டு நம்மிட சக்கிரவர்த்தி யிருக்கின்ற நகரமானது இப்படி தானிருக்குமென்று நினைத்துக்கொண்டு கடைவீதிவர அவ்விடத்திலு மிந்த தெய்வீகம் விளங்குகிறதைக் குறித்து பேசிக் கொள்வதைக் கேள்விப்பட்டு மந்திரி நம்முடைய சக்கிரவர்த்தி தானென்று நிச்சயித்து அரண்மனைக்கு செல்லும்போது சக்கிரவர்த்தியானவர் கொலுச்சிங்காரமாக இருக்கிறதைக் கண்டு தன்னுடைய அரசனென்று மதித்து மந்திரியும் ஆண்டி வேடத்தை மாற்றிக்கொண்டு காவல் கடந்து போய் சக்கிரவர்த்தி கொலுச்சிங்காரமான யிடத்திற்கு வந்து சக்கிரவர்த்தியை தரிசித்து இவரே நம்முடைய ஆண்டவரென்று சமீபத்திற்போய் தேவரீரிங்கே யிருக்கிறீரோ? அடியேன் மதிதீரனல்லவோ வென்று நமஸ்காரஞ்செய்ய, சக்கிரவர்த்தியும் மந்திரியை எடுத்து தழுவிக்கொண்டு பட்டணம் விட்டு எப்போது புறப்பட்டீரென்று கேட்க, மந்திரி தேவரீர் பட்டணம் விட்டு பிரிந்த நாள்முதல் அடியேனும் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு உலகமெங்குந் தேடி எங்குங் காணமல் இவ்விடத்தில் கண்டேனென்று சொல்ல, சக்கிரவர்த்தி மந்

திரியை ஸ்நானம் பண்ணி வரச்சொல்லி சகல வஸ்திராபரணங் கொடுத்து போஜனஞ் செய்வித்து ஆதிபத்தியமும் நடப்பித்துக்கொண் டிருக்கச்சொல்லி கட்டளை பண்ணி தாம் பிரிந்த நாள் முதலாக தன்னைக் கண்ட நாள் வரைக்குந் தாம் பட்ட துன்பங்களை யெல்லாம் மந்திரிக்குச் சொல்லி மந்திரியுந் தான் போய் திரிந்த தேசங்களை யெல்லாஞ் சொல்லிவிட்டு சக்கிரவர்த்தியை பார்த்து என் தாயாரையும் பிள்ளைகளையும் போய் தேடி வருகிறேனென்று கூற, சக்கிரவர்த்தி அவர்களின்னம் சில காலத்திற்குப் பின்பு இவ்விடத்திற்கு வந்து சேருவார்களென்று சொல்லிவிட்டு மந்திரியை தமதருகில் வைத்துக்கொண்டு இருமென்று கட்டளையிட்டனர்.

சிலநாள் சென்ற பின்பு ஆயர்பாடியில் செங்கண்மாலென்கிற இடைச்சி வீட்டில் வளர்ந்துக் கொண்டிருக்கிற இரண்டு பிள்ளைகளும் தங்களை யருமையாக வளர்த்த தாயாரருகே சென்று அம்மா ! நாங்க ளிந்நாள் வரைக்கு முன் னுடைய சையன்னத்தைப் புசித்து ஆளானோ மிப்போது தெய்வீகபுரத்தில் தெய்வீக ராஜன் இரா ணுக்கள் வைத்தவர்களுக்கு தக்க சம்பளம் கொடுக்கிறதாயும் கேள்விப்பட்டோம்; ஆகையால் எங்கள் குருசாமி சொன்ன வார்த்தையானது அந்த விடத்தில் விளங்க வேண்டும் நாங்கள் சே,கத்திரத்தையுங் காண்பித்து எங்களுடைய குறைவுகளையும் தீர்த்துக் கொள்ள வேண்டுமம்மா வென்றுக் கேட்க, இடைச்சி அப்பா! உங்களுக்கென்ன குறை என்னிடத்தில் அளவற்ற பாக்கியங்க ளிருக்கின்றது; இது உங்களுடைய பாக்கியந்தானே; நீங்களேன் ஒருவரிடத்திற் சேவகத்திற்குப் போகிறீர்கள் நீங்கள் ஒரு பட்டணமொன்றியற்றி அதில் சில ரா ணுவங்களை வைத்துக்கொண்டு அரசாட்சி செய்ய வல்லமையில்லையா? அப்படி செய்யாமல் நீங்கள் ஒருவரிடத்தில் சேவகத்திற்குப் போகிறது யுக்தமல்ல வென்று மிகுந்த ஆவலோடு கேட்டுக் கொள்ள, இராஜகுமாரர்கள் தாயே! நீங்களிந்த பட்டணத்தில் அரசாட்சி செய்துக்கொண்டு வந்தால் இந்த பட்டணத்தை யாண்டுக்கொண்டிருக்கிற அரசன் கேள்

விப்பட்டா லாக்கினை நேரிடும்; இதுகளெல்லாம் இராஜகுமாரர்கள் செய்ய வேண்டிய காரியங்கள்; அது வும் வருகிறபோது தானே வரும்; இப்போ தொன் றுஞ் செய்யப் போகாது; ஆகையால் நாங்கள் நூதன மாக சேவகத் தொழிலுக்குப் போகிறதைத் தடை பண்ண வேண்டாம்; பிள்ளைகளாய் பிறந்தவர்கள் கீர்த்தியை சம்பாதிக்க வேண்டும்; இல்லாவிட்டா லிறப் பதே நலம். சரீரமே நீரின்மேற் குமிழ், இன்றைக்கோ நாளைக்கோ சற்று நேரத்திற்கோ தெரியாது. அதற்கு முன் வீரத்தினாலும் வித்தையினாலும் புத்தியினாலும் எவ்வித தந்திரத்தினாலேயாகிலும்,

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெருவதனா
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது. (நாலடியார்)

என்பதுபோல. உலகத்தில் சன்மார்க்கத்திற் கீர்த்தி பெற வேண்டும்; அப்படி கீர்த்தி பெறாதவன் ஜென்மம் என்ன ஜென்மமாகையால் எங்கள்பேரில் அன்பு கூர்ந்து தடைசொல்லாமல் அனுப்புந் தாயே யென்று நமஸ்கரித்து கேட்டுக்கொள்ள, இடைச்சியானவள் நமஸ்கரித்த பிள்ளைகளை எடுத்து ஆவலோடு ஆயுத சாலைக்குட் சென்று ஆயுதங்களைத் தன் கையினால் எடுத் துக்கொண்டு அப்பா! நீங்கள் சேவகத்திற்குப் போய் சுகஜீவியாய் வாருங்களென்று வாழ்த்தி யனுப்ப, அந்த ராஜகுமாரர்க ளிரண்டுபேரும் ஆயுதபாணிகளாக நல்ல சுபதினத்தில் புறப்பட்ட நேரங் காடு மலை வனாந்திரங் களைக் கடந்து தெய்வீகபுரம் போய் ஒரு ஔவையார் வீட்டில் வந்து தாங்கள் நடந்து வந்த ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டு மறுநா ளுதயத்தி லெழுந்திருந்து தங்கள் நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு சாப் பிட்டு ஆயுதபாணிகளாய் அரண்மனைக்குப் போக வேணுமென்று யோசித்திருந்தனர்.

அப்படியிருக்க, தெய்வீகராஜனும் உதயத்திலெழுந் திருந்து நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு உயர்

வெண்சாமரம் வீசக் கட்டியக்காரர் கட்டியஞ் சொல்ல, அநேகம் பெண்கள் எச்சரிக்கைசொல்ல கொலுமண்டபத்திற்கு வந்து சிங்காதனத்தில் வீற்றிருக்குந் தருணம் ஔவையார் வீட்டி லிருக்கின்ற இராஜகுமாரர்கள் ராணுவங்கள் இருக்கிற விடத்திற்கு வந்தார்கள். அவ்விடத்தில் காவலாக யிருக்கிறவர்கள் பார்த்து ராஜகுமாரர்களைப் போலிருக்கிறதென் றுணர்ந்து, நீங்கள் சேவகத்திற்கு வந்தீர்களே சம்பளமென்ன கேட்பீர்களென்று கேட்க, அவர்கள் நாங்கள் அரசன் சேர்வையாயிருப்போம்; நித்ம் இரண்டாயிரம் பொன் சம்பளம் கொடுத்தா லிருப்போம என்று சொல்ல, அவர்களிதுகளைக் கேட்டு, இது அரசனறிய நடப்பிக்க வேண்டிய காரியமென் றிரண்டு பிள்ளைகளையும் கொலு முன் கொண்டு போய் அரசனிடத்தில் இவர்கள் கூறியவற்றை யெல்லாம் கூற, அரசன் அப்பிள்ளைகளை கண்ணால் பார்த்துக் கண்ணீர் ததும்பி,

> அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலார்
> புண்கணீர் பூச றரும். (குறள்)

என்பதுபோல், நீங்களார்? என் பிள்ளைகளைப்போலிருக்கிறதென்று கேட்க அப்பிள்ளைகள் ஐயா! நாங்கள் இடைச்சி வளர்க்க வளர்ந்தோம், இப்போது சேவகத்திற்கு வந்து தேவரீரைக் கண்டோம். எங்களுக்கு ஒரு தொழிலைக் காட்டி நிலைநிறுத்தினுல் நாங்களிருவரும் இருப்போமென்று சொல்ல, அரசனும் நல்லதென்று இவர்களிரண்டு பேருக்கும் தினசரி இரண்டாயிரம் பொன் சம்பளம் நியமித்து தமதருகில் வைத்திருந்தனர். ராஜகுமாரர்கள் இரண்டாயிரம் பொன் சம்பளத்தில் நித மவர்கள் சாப்பிட்ட செலவு போக, மற்றப் பொன்னெல்லாவற்றையுந் தானதருமம் பரவுபகாரம் பரதேசிக்கு செலவிட்டு ஔவையார் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு அரசனைப் பிரியாமல் அனுதினமுங் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அது நிற்க, ஒருநாள் அந்தப்பட்டணத்திலிருந்து சில மனிதர்கள் கடற்கரையில் வர்த்தகம் பண்ணப்

போனவர்கள் தெய்வீகம் விளங்குகின்ற சமாசாரத்தை யும் தெய்வீகராஜனுடைய நீதியைப் பேசிக் கொண் டிருக்கிறபோது இதுகளை யெல்லாங் கேட்டுக் கொண் டிருந்த நவகோடி நாராயண செட்டியா ரிடத்திலும் நெருப்பிலும் ஆயுதத்தினுலுஞ் சம்பளமில்லாம லிருக் கிற பேழையை அந்ததெய்வீகத்தினிடத்திலே யாகிலுங் கொண்டுபோய் திறந்துகொண்டு வருவோமென்று அப் பேழையை பல்லக்கின்மீது வைத்து தானுமொரு பல் லக்கிலேறிக் கொண்டு தெய்வீகராஜனுக்கு காணிக்கை முதலானதுகளை எடுத்துக்கொண்டு தன் பட்டணமுங் கடந்து தெய்வீகபுரம் வந்து அரண்மனைக்குட் சென்று தெய்வீகம் விளங்குகிற சபையில் இந்த பேழையையுங் காணிக்கை முதலானதுகளையும் வைத்து நமஸ் காரம் பண்ணி நிற்கையில், தெய்வீக ராஜன் செட்டி யாரைப் பார்த்து இப்பேழையானதில் திவ்விய சொரு பத்துடன் விளங்குகின்ற பெண் யாரென்று கேட்க, செட்டியார் இது தெய்வீக மென்கிறதற்குச் சந்தேக மில்லை; நாமுண்மையை வெளியிட வேணுமென்று கை கட்டிக்கொண்டு மகா பயபக்தியுடனே சொல்லுகிறுர்: சுவாமி! இந்தப் பேதை இறவல் கூலியாளருக்கு கணக் கெழுதினவன் பெண்சாதி ; இவள் கூலிவாங்க வந்த போது அவளுடைய சொரூப சவுந்தரியத்தை பார்த் திச்சைக்கொண்டு அவள் ஏழையல்லவோ இவளுக்கு அன்ன வஸ்திரத்திற்கோர் குறைவுபடாமல் நடப்பித் தால் நம்முடைய வார்த்தைக் குள்ளாவா ளென்று பொல்லாத நினைப்பு நினைத்துக் கொண்டு அறை வீட் டில் போட்டு வைத்து காவற்காரரிடத்தில் கணக்கப் பிள்ளை பெண்சாதி கூலிவாங்க வந்தால் செட்டியார் நீ வராமையால் உன் கூலியை மாத்திரம் அந்தப்புரத்தில் அறை வீட்டில் போட்டுவிட்டுப் போனுர்: நீ போய் எடுத்துக் கொள்ளென்று சொல்லுங்கள்; அறைவீட் டிற் புகுந்த பின்பு கபாடபந்தனஞ் செய்யுங்களென்று கட்டளையிட, அவர்களு மப்படியே செய்தார்கள். பின்பு நானந்த அறை வீட்டில் வந்து பார்க்குமள வில் காணுமையாலந்த வீட்டிலிருந்த பேழையைத் திறக்கப்போனுல் திறக்கக்கூடாமையால் கோடாலியால்

வெட்டிப் பார்ப்போமென்று வெட்ட அதற்கு மசைவு படாம லிருக்கக் கண்டு, அந்நகரத் தரசனுடைய ஆக்கினை கிடைக்குமென்று பயந்து அந்தமான் என்கிற தீவுக்கு போகிற கப்பலில் இப்பேழையை வைத்துக் கொண்டு சமூத்திரத்தில் போட்டு வருவோமென்று கருதி எடுக்கும்போது இப்பேழையிலிருக்கிற பெண் ஓ செட்டியாரே ! என்னையேன் சமூத்திரத்தில் போடப் போகிறீர்! போட்டாலும் உம்மை விருதாவில் விட்டு விடப் போகிறதில்லை; எனக்கொரு நோன்புண்டு அந்த நோன்பு ஏழரை வருஷம் செல்லுகிற வரையில் ஒருவர் முகத்தையும்பார்க்கவொண்ணாது. ஆகையால், நோன்பு முடிந்தவுடன் இப்பேழை தானே திறக்கப்படுமென்று சொல்லினள். அதற்குச் சந்தோஷப்பட்டு அந்தமானென்கிற கப்பலில் வைத்துக் கொண்டு போய் தெருக்கலத்தில் ஒரு உப்பரிகை கட்டி அப் பேழையைப் பார்த்து காத்துக்கொண் டிருக்கிறநாளையில் ஒருநாள் உபரிஷிய ரென்றொரு ரிஷியானவர் வந்தார். அவரைக் கண்டு நீங்கள் யாரென்று கேட்க, நான் தேசசஞ்சாரஞ் செய்கிறேனென்று சொல்ல, நீங்கள் வாசஞ்செய்துக்கொண்டு வந்த பட்டணங்களில் ஏதாகிலும் அதிசயங்களுண்டோ வென்று கேட்டதற்கு அவர் தேசங்களினுடைய மகிமைகளையும் கீர்த்திகளையுஞ் சொல்லி விட்டுப் பின்பு விதர்ப்பதேச மென்றொரு பட்டணமுண்டு அந்தப் பட்டணத்தை யாண்டுக் கொண்டிருந்த சக்கிரேஸ்வரனாகிய புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய கீர்த்தியை என்னொரு நாவினால் சொல்ல முடியாது. அப்படிக் கொத்த சக்கிரேஸ்வரன் சனிபகவான் சோதனையினால் மிக வருத்தப் படுகிறாரென்று சொல்லினதை ஆதியோடந்தமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டதற்கு அந்த ரிஷி சொல்லுகிறார் : ஐம்பத்தாறு தேசத்திற்கும் சக்கிரேஸ்வரனாக யிருந்து சனிபகவான் சோதனையினால் நாடிழந்து பட்டணத்தை விட்டு மறு பட்டணத்திற் சென்று கூலியாளருக் காளாகிப் பெண் சாதியையும் பிள்ளைகளையு மிழந்து பின் தானும் வெள்ளத்தி லகப்பட்டுக் கிடையருக் காளாகி ஆடுகளை மேய்த்துக்கொண் டிருக்கையில் திருடனென்று கட்டிக்

கொண்டுபோய் அந்த நகரத்தரச னுக்கினைப்படி ஒரு கையுங் காலும் வாங்கி விட்டார்களென்று சொன்னவுடனே இப்பேழை சற்றேயசைய அதுகண்டு நான் இவளின்னமும் உயிருடனிருக்கிறு ளென்றறிந் தந்த ரிஷியீஸ்வரருக்கு செலவு கொடுத் தனுப்பிவிட்டு இப்பேழையையும் பாதுகாத்துக் கொண்டு வந்தேன் அப்படி சிறிதுகாலம் பாதுகாத்து வரும்போது தெய்வீகபுரத்தில் தெய்வீகம் விளங்குகின்றதாய் கேள்விப்பட்டு மகா சந்தோஷத்தை யடைந்து அவ்விடத்திலாவது கொண்டுபோய் இப்பேழையைத் திறந்து கொள்ளலாமென் றெண்ணங் கொண்டு வந்தேன். சுவாமியென் றனேகவித தோத்திரம் பண்ணி நிற்கையில் தெய்வீகராஜன் இவள் நம்முடைய பெண்சாதிதானென்றறிந்துக் கொண்டு அருகிலிருக்கிற ராஜகுமாரர்களைப் பார்க்க அந்த ராஜகுமாரர்கள் நம்முடைய குருசாமி சொன்ன வாக்குக்கும் இப்போது செட்டியார் சொல்லிக்கொண்டு வந்ததையும் யோசித்தால் நம்முடைய தாயாக வேண்டுமென்று நினைத்துக்கொண்டு மௌனமுற்றிருக்கத் தெய்வீக ராஜனருகிலிருக்கிறவர்களைப் பார்த்து அப் பேழையை கோடாலியாலாவது மற்றெவ்விதத்தாலாவது திறவுங்ளென்று கட்டளையிட்டா னவர்க ளப்படியே கோடாலியால் வெட்டியும் அப்பேழையின்மீது ஒரு தழும்பு படாதிருப்பதைக் கண்டு அக்கினியைப் பிரவேசஞ்செய்து அதிலும் வேகா திருப்பதைக் கண்டு, இராசனிடத்தில் தெரிவிக்க அரசன் மறுபடியும் பேழையை ஆருக்குமசைவுபடாத கருங்கல்லைக்கட்டி ஆழமான ஆற்றில் கொண்டுபோய்ச் சலத்தில் விட்டமூத்தி யவ்விடத்தில் சிறிது பேரைக் காவலாக விருக்கச்சொல்லி கட்டளையிட அவர்கள் கட்டளைப்படி சிறிதுநாள் காவலாயிருக்கும்போது கோடாலிக்கும் நெருப்புக்கும் அசைவுபடாம லிருக்கிறவள் தெய்வமோ பூதமோ எந்த வேளையிற் புறப்பட்டு நம்மைக் கொன்று போடுவாளோ தெரியாதென்று பயந்து அரசன் சமூகத்திற் சென்று, ஐயா! எங்களுக்குப் பயங்கரமா யிருக்கின்றபடியால், நாங்கள் அப்பேழைக்கு காவலாக யிருக்க மாட்டோம். தினசரி ஆயிரம் பொன்

வாங்குகிற சேவக்ரை காக்கச்சொல்லுங்களென்று விண்ணப்பஞ் செதுகொள்ள அரசன் அதனை யுணர்ந்து தனது அருகிலிருக்கிற பிள்ளைகளைப் பார்த்து, நீங்களிருவரும் ஆற்றிலிருக்கிற பேழையினிடத்திற்போய் காவலாயிருக்கும்படி ஆக்கியாபிக்க, அப்பிள்ளைக ளப்படியே மறுநாள் போய் கார்க்க யத்தனப்பட்டு ஆற்றங் கரையில் இரண்டுபேரும் வந்த மாத்திரத்தில் கல்லுடனே கட்டி ஆற்றிலழுந்திக் கிடக்கிற பேழையானது மிதந்துக்கொண்டு கரையருகே வருகையில் இளையவன் தமையனைப்பார்த்து, அப்பா! பேழையிலிருக்கிறவள் நம்முடைய வமிசத்தை இரட்சிக்கப்பட்ட தெய்வமேயல்லாமல் மற்றும் வேறல்ல நீயொன்றுக்குஞ் சந்தேகப்பட வேண்டாமென்று கூறினன். தம்பி தமையனைப் பார்த்து, நித்திரை வாராமலிருக்கும்படி ஒரு கதை சொல்ல வேண்டுமென்று கேட்டதற்கு தமையன் நம்முடைய சரித்திரமே ஒரு கதையாக விருக்கின்றது. அதை நானிந்தமட்டும் சொல்லுகிறேனென்று சொல்லுகிறுன்.

அப்பா சகோதரனே! விந்தபுரமென்றோர் பட்டணமுண்டு அந்தப் பட்டணத்தையரசாட்சி செய்துக் கொண்டுவந்த மனுவிக்கியான ராஜனென்றும் புரூரவச் சக்கிரவர்த்தி யென்று இரண்டு நாமதேயத்தைப் பெற்ற சக்கிரவர்த்தியானவர் செங்கோல் நடத்தி வருகின்ற காலத்தில் சனீஸ்வரபகவான் சோதனையினுல் நாடு விட்டுக் காடுறைந்து மறுதேசம்போய் கூலியாளருக் காளாகி நம்முடைய தாயாரையும் நம்மையுமிழந்து தானும் வெள்ளத்தி லகப்பட்டு இடையருக்காளாகி ஆட்டுகுட்டிகளை மேய்த்துக்கொண்டிருக்கிற காலத்தில் திருடனென்று ஓர்காலுங்கையும் இழந்து சரஸ்வதியம்மன் கிருபையினுல் பரதேசி காவற் செட்டியார் வீட்டிலிருக்கிருரென்று நம்முடைய குருசுவாமிசொன்னுர். அதுவு மல்லாமல் ஆற்றங்கரையி லடித்துக் கொண்டு போனது எனக்குத் தெரியும் நானறிந்தமட்டும் உனக்குத்தெரிவித்தேனென்று சொல்லினன்,

இப்படி கதை சொல்லிக் கொண்டிருக்கிற தருணத்தில் இப்பேழையி லிருக்கின்ற பெண்ணானவள் இவர்கள் நம்முடைய பிள்ளைகளல்லா விட்டால் யானைக்கும் அசைவு படாத கல்லை இழுத்துக்கொண்டு பேழை மிதந்துவருமோ வென்று மகா சஞ்சலப்பட்டு மனமூறுகிச் சொல்லுகிறாள். அப்பா பிள்ளைகளே! இப்போது சொல்லிக்கொண்டு வந்த கதையை இன்னமொரு தரஞ் சொல்ல வேண்டுமென்று கேட்க அவர்கள் அப்படியே ஆதியோடந்தமாக நடந்தவற்றை யெல்லாங் கூறினர். அப்போது அப்பேழையி லிருக்கின்ற பெண் நீங்களாரென்று கேட்க நாங்கள் இடைச்சி வளர்த்த பிள்ளைகள். அப்போ தெங்கள் குருசுவாமியானவர் இந்தக் கதையை எங்களுக்குச் சொன்னாரென்று கூறினார்கள். அதுகேட்டு பேழையி லிருக்கிற பெண் அப்பா பிள்ளைகளே! இப்போது சொல்லிக்கொண்டு வந்த கதையை நாளையதினம் அரசன் சமூகத்தில் அரசனறியச் சொல்ல வேண்டுமென்று கேட்க அதற்கு நல்லது தாயே யென்றனர்கள். மறுநாள் சூரியனுதயமான பின்பு நவகோடி நாராயண செட்டியார் ஆற்றங்கரை யருகே வந்து பார்க்குமளவில் அப்பேழை கரையருகே கண்டு அரசன் சமூகத்திற்கு சென்று அரசனே! அப்பேழைக்குக் காவலாக நல்ல சேவகர்கள் வைததீர்கள் அவர்கள் அப்பேழையை கரையருகில் வைத்துக் கொண்டிருப்பவர்க ளிழுக்க மாட்டுவார்களோ? அதை ஒருவனோடிப் பார்த்து வாருங்களென்றார். அப்படியே ஒருவன் சென்று பார்க்குமளவில் கரையருகே பேழையானது இருக்கிறதென்று சொன்னான்.

அரசன் இதுவென்ன புதுமையோ வென்று காவலா யிருக்கிற தன் பிள்ளைகளை அழைத்துக் கேட்க அவர்கள் நாங்கள் பார்க்க வேண்டுமென்று ஆற்றங் கரையருகே போனோம். அப்போது பேழையானது நடு ஆற்றிலிருந்து கல்லுடனே மிதந்துக்கொண்டு நாங்களிருக்கிற கரையருகே வருகையில் அதைக் கண்டு என் தம்பி அச்சமுற்றனன். மற்ற சேதிகளெல்லாம் பேழையிலிருக்கின்றதெய்வீகத்தைக்கண்டால் சொல்லு

மென்று சொன்னார்கள். தெய்வீகராசனப்பேழையை எடுத்துக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டார், அப்படியே அவர்கள் போய் ஆற்றங்கரையினிடமீதிருக்கின்ற பேழையைக் கல்லை யவிழ்த்துப் போட்டு பேழையை மாத்திரம் இராசசமுகத்திற்கொண்டுவந்து வைத்து பிள்ளைகளைப்பேழையைப் பார்த்து நாங்களும்மை கரையருகி லிழுத்தோமே அல்லது நீயே கரையருகில் வந்தீரோ உண்மையை விளக்க வேண்டுமென்று கேட்க, அப்பேழையி லிருக்கின்ற பதிவிரதையானவள், அப்பா! நேற்றையதினம் இராத்திரி நீங்கள் இருவருஞ் சொல்லிக்கொண்டிருந்த கதாப்பிரசங்கத்தைச் சொல்லிக்கொண்டு வாருங்களென்று சொல்ல பிள்ளைகள் அக்கதையை ஆதியோடந்தமாக நடந்தவற்றை யெல்லாம் அரசன் சமுகத்தில் விண்ணப்பஞ் செய்து அரசன் அதுகளை யெல்லாங் கேட்டு மனங் கலங்கி மதிதீரனாகிய மந்திரியைப் பார்க்க, மந்திரியானவன் ராசனைப் பார்த்து அப்பிள்ளைகள் சொல்லியவற்றையெல்லாம் உண்மை தானென்று சொல்ல, அத்தருணத்தில் சரஸ்வதியம்மனவள் சகல தேவர்களையும் ஆகாயத்தில் நிறுத்திவிட்டு அரசனண்டையில் வந்து ஓ சக்கிரவர்த்தியே! இவ்விரண்டு பிள்ளைகள் உம்முடைய பிள்ளைகள் இப்பேழையி லிருக்கிறவள் உம்முடைய பெண்சாதிதான். அவளுடைய பிள்ளைகளாகையால், பேழையானது கரையருகே மிதந்து வந்தது. நீருக்கும் நெருப்புக்கும் கூர்மை பொருந்திய கோடாரிக்கும் அசைவுபடாம லிருக்கின்ற பேழை நீர் தொட்டமாத்திரத்தில் திறக்க வேண்டுமென்று சாபமிட்டுக் கொண்டனள்.

ஆகையால் நீரிப்போது அப்பேழையைத் தொட்ட மாத்திரத்தில் திறக்குமென்று சொல்லிவிட்டு பின்னையுஞ் சொல்லுகிறாள், அப்பா இந்நாள்வரைக்கும் பாதுகாத்துக்கொண்டிருந்த செட்டியார் அவர்களுக்கு முன் சென்மத்தில் பிள்ளையாக வேண்டும்; நீ எவ்வளவுஞ் சந்தேகப்படாமல் பேழையைத்தொடுமென்று சொல்ல, அவ்வார்த்தையை அரசனறிந்து நல்லது தாயே

யென்று பஞ்சாக்ஷரத்தை மனதில் தியானித்துக் கொண்டு அப்பேழை யருகிற்சென்று தன் கையினுற் பேழையைத் தொடப் பதிவிரதை யிருந்த பேழை யானது படீரெனத் திறந்து வெளியில் வந்ததை தேவர் கள் கண்டு, புஷ்பமாரி வருஷிக்கவும் கீதங்கள் முழங்க வும் தேவகன்னிகள் நடனம் பண்ணவும் அப்சரஸ்திரீ கள் வெண்சாமரம் போடவும் இப்படியாக மகா வைபவங்களுட னிருக்கும்போது தெய்வீகராசன் கண்டு உம்பர்கள் பரவிய உயர்கைலாச அம்புஜபாதா ! அடிய வர்நேசா! பார்வதி மனேகரா! திரிபுராதகனு!! அனுத ரக்ஷகா! பக்தவத்சலா! திரிநேத்திரதாரி! என்று தோத் திரஞ்செய்து நமஸ்காரம்பண்ண அப்போது பரமேஸ் வரனும் பார்வதியும் தேவர்களும் அதிசயித்து அரச னைப் பார்த்து, மிக அன்புடனே எனது மனுநீதியை யும் உரிமையும் கண்டு வெகு சந்தோஷமாச்சுது; இனி மேல் உம்முடைய அரசாட்சிக்குச் சென்று இராச்சிய பரிபாலனம் பண்ணிச் சுகமே இருந்து முடிவில் நம் முடைய பதவியைச் சேருமென்று சொல்லிப் போயி னர்கள்.

அந்தவேளையில் சனிபகவான் வந்து உமக்கு நிக ரான சக்கிரவர்த்தி இவ்வுலகின்கண் ஞெருவருமில்லை; உமக்கு வேண்டிய வரங்களைக் கேளுமெனறுகூற அர சன் உமது காலமுள்ளளவும் என் சரித்திரத்தைச் சொல்லுகிறவர்களுக்கும் வாசிக்கிறவர்களுக்கும் கேட் கிறவர்களுக்கும் தேவரீர் துன்பப்படுத்தாம லனுக்கிர கிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அப்படியே யனுக்கிரகஞ் செய்தோமென்று சொல்லிவிட்டு தம திருப்பிடத்திற்குச் சென்றனர். அதன்பின் பிள்ளைக ளாகிய குமாரர்களும் தேவியுமாக அரசனிட பாதத் திற் பணிந்து நிற்கையி லப்போது இளையவளாகிய புஷ்பபாஞ்சாலி மூத்தாள் பாதத்திற்பணிந்து சொல்லு கிருள்: அம்மா! உமது கற்புக் கழிவில்லை; உமது கற்பினுல் யானும் பத்தாவும் பிள்ளைகளும் தெய்வ வரசாட்சியும் பெற்ருேமென்று இறுகத் தழுவிக் கொண்டு அந்தபுரஞ்சென்று ஸ்நானஞ்செய்து நியம

நிஷ்டைகளை முடித்துக்கொண்டு தேவாலயங்களை தரிசித்து தானதரும பரமவுபகாரஞ் செய்து சுகித்திருந்தார்கள்.

அரசனும் சூரியோதயத்தி லெழுந்திருந்து ஸ்நானம்பண்ணி அனுஷ்டான முதலாகிய ஜெபதபங்களை முடித்துக்கொண்டு சகல சாம்பிராச்சிய வைபவங்களுடனே கிரீடாதிபதியாய் சிங்காதனத்தில் வந்திருந்தபோது பிராமணர்கள் ஆசீர்வதித்துமந்திராட்சதையுங் கொடுக்கப்பெற்றுக்கொண்டு நித்திய தானங்கள் செய்து பூலோகத்திலே தேவேந்திரனைப் போல அரசாட்சி நடாத்தி வருகிறநாளில் ராசராசர்களுந் திறைகொண்டு வந்து வணங்க, அவர்களைச் சக்கிரவர்த்தியானவர் கையமர்த்தி யிருக்கச்சொல்லி அவரவர்களுக்குத் தக்கபடி வெகுமானங்கள் பண்ணிவிட்டுத் தன்னுடைய பிள்ளைகளாகிய சத்தியதரனையும் தருமசீலனையும் அருகே வைத்துக் கொண்டு கண்ணிழந்தவர்களுக்குக் கண் வந்தா லெப்படியோ அப்படி போல பிள்ளைகளைப் பார்த்து;

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்க லின்ப செவிக்கு (குறள்)

என்பது போல உங்களை வளர்த்த இடைச்சியை அழைத்து வாருங்களென்று கட்டளையிட அப்பிள்ளைகளப்படியே அழைத்து வந்து இராஜசமுகத்தில் விட அரசனந்த இடைச்சிக்கு வேண்டிய உபசாரமான வார்த்தைகளைச் சொல்லி அநேக ஆடையாபரணங்களுங் கொடுத்துப் பிள்ளைகளைப் பார்த்து நமஸ்காரம் பண்ணிக் கொள்ளுங்களென்று சொல்ல அவர்களுமப்படியே நமஸ்காரம் பண்ணித் தாங்கள் தாயாரருகே யழைத்து வந்து தாயே இந்தம்மாள் தான் எங்களை வளர்த்ததாயென்றுகூறினார்கள். செயப்பிரதை அவளை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு, அடியம்மா இந்தப் பிள்ளைகளை நான்பெற்றேன்; அவர்களை வளர்த்த இது வரையில் அவர்களுக்கு வேண்டிய உபசார முதலானதும்செய்துபாதுகாத்துவந்தபடியால்தாயே அப்பிள்ளைகளுக்கும் எங்களுக்குந்தாயென்று அனேகவுபசாரமான

வார்த்தைகளுஞ் சொல்லி சகல ஆபரணங்களுங் கொடுத்து சில நாளங்கே வைத்திருந்து அவளுடைய நகரத்திற்கு அனுப்பி விட்டனள்.

சிலகாலஞ் சென்றபின்பு இராஜ சபைக்கு பரதேசி காவற்செட்டியார் வரவைக்கண்டு சக்கிரவர்த்தி யெழுந் திருந்து தமதருகில் வைத்துக்கொண்டு சில தரும சாஸ்திரத்தைக் குறித்துப் பேசிக்கொண் டிருக்கிற இராஜசபைக்கு நவகோடி நாராயணசெட்டியார் காலுங் கையும் நடுங்கி வந்து தெண்டனிட்டு நிற்கையில் சக்கிர வர்த்தி மிக ஆவலோடு அவரைப் பார்த்து. ஐயா நீ ரொன்றுக்கும் பயப்பட வேண்டாம் என் வறுமைக்குத் தவறுகள் வராமல் இன்னாள் வரைக்கும் பாதுகாத்து வந்தபடியால் நீரே பிள்ளையென்று அனேக வுபசாரங் களும் அனேக பணிதிகளும் ஒரு பட்டணமும் கொடுத்து அனுப்பி விட்டார்.

கேளும் தருமநந்தன ! முன்னாள் இந்திரபுரத்தை அபகரித்துக்கொண்ட அரசர்களிந்த சமாசாரங்களெல் லாங் கேட்டுப் பயந்து காணிக்கை முதலானதுகளை யெடுத்துக் கொண்டு புரூரவச் சக்கிரவர்த்தி யிருக்கின்ற தெய்வீக புரத்துட் சென்று சக்கிரவர்த்தியும் கொலு சிங்காரமாக விருக்கின்ற தருணம் பார்த்து அரசர்கள் யாவரும் கூடிக்கொண்டு சக்கிரவர்த்தியைக் கண்டு தெண்டனிட்டு தேவரீர் அரசாட்சியை தேவரீரே ஒப் புக்கொள்ளும் நாங்கள் இன்றைய வரைக்கும் பாதுகாத் துக் கொண்டிருந்தோம் இனி மேல் எங்களால் முடியா தாகையால் தங்களுடைய அரசை தாங்களே ஒப்புக் கொண்டு அரசாட்சி செய்ய வேண்டுமென்று அனேக உபசாரத்துடனே நமஸ்கரித்துச் சொன்னார்கள். சக் கிரவர்த்தியானவர் அவர்களுக்கு நன்மையான வசனங் களால் அனேக வுபசாரங்கள் செய்து வெகுமதிகளும் கொடுத்து அவர்களை யனுப்பிவிட்டுப் பின்பு சக்கிரவர் த்தி சகல பரிவாரங்களுடனே புறப்பட்டு இந்திர புரத் திற்குச் சென்று வெகுகாலம் புத்திர மித்திரகளத்திரா திகளுடன் சகல மதி மண்டபங்க ளெல்லாம் ஒரு தவளச்சக்கிரவர்த்தி நிழலின் கண் செங்கோன்

முறைமை வழுவாமல் மகா மரும சத்திய சீலராய்ச் சகல பிராணிகளும் துதிக்கும்படியாக நடாத்தி வருங் காலத்தில் சக்கிரவர்த்தி தமது ஜேஷ்ட புத்திரனுகிய தருமனுக்குத் தான் அரசாட்சி செய்துக் கொண்டிருந்த இந்திரபுரத்திற்குச் சக்கிரவர்த்தியாகப் பட்டங் கட்டிவைத்து இளையகுமாரனுகிய தருமசீலனுக்கு தெய்வீக புரத்தை அரசாட்சி செய்யும்படி பட்டங் கட்டி வைத்து பின்பு இளையாளாகிய புஷ்ப பாஞ்சாலியினுடைய குமாரனுகிய குணபத்திரனுக்குப் பாட்டனுகிய தேவராசன் அரசாட்சி செய்துக்கொண்டு வந்த தெய்வ புரத்தை அப்புத்திரனுக்குப் பட்டங் கட்டி வைத்து இம்மூன்று பிள்ளைகளும் அரசாட்சி நிலைமை செய்து வருகின்ற வல்லமைகளைக் கண்டு மகா சந்தோஷத்தை யடைந்து சிறிது நாள் சுகத்திலிருந்தனர். இப்படி சிறிது காலஞ் சுகத்திலிருக்கும்போது ஒருநாள் புரூரவச் சக்கிரவர்த்தி,

> நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர்
> குழவியிடத்தே துறந்தார் புரைதீரா
> மன்னுவிளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
> யின்னுங் கெழுந்திருப் பார். (நாலடியார்)

என்பதுணர்ந்து ஊர்வசியை தியானித்துக் கொண்டு வனத்திற் பிரவேசித்து முன்பு தாபந்திரியாய் ஸ்தாபித்து வைத்திருந்த அக்கினிஸ்தாலியைப் பார்க்குமளவில் அதனிடத்தில் சமீபமாக ஜாதகநாபய அசுத்த விருக்ஷமாவது முளைத்து விருத்தி யடைந்து கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்து யோசித்து இருவருக்கு தெய்வீகமாகிய ஒரு புத்திரன் செனித்து அம்மகாவிருக்ஷ சாகைகளைக்கொண்டு இரண்டு அரணிகளைக் கற்பித்து அவைகளைக்கடைய ஒரு தண்டத்தையுங் கற்பித்து மின்னதாகிய வரணிதானுகரும் பின்னரணி ஊர்வசியாகவும் அவ்வரணிகளைக் கடையவும், தண்டமானது சந்ததிகளாகவும் தியானித்து தானந்த புண்ணியலோகத்தை யடையும்படி வேதமந்திரங்களைச் சொல்லிக் கடையும்போது அவ்வேதங்களும் தனது இருதயத்தில் மூன்று பாகமாகத் தோற்றி வேதாதி

# விநோதரசமஞ்சரி

கிளேஸ் கடிதம் காலிகோ பைண்டு விலை ரூ. 4-00

ஷை நீக்கு கடிதம் காலிகோ பைண்டு விலை ரூ. 3-00

சென்னை துரைத்தன வித்தியாசாலையில் சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில் பிரதம தமிழ்ப் பண்டிதராயிருந்த **அஷ்டாவதானம் வீராசாமி செட்டியா**ரவர்கள், ஆடவரும் மகளிரும் அவசியமாக அறிய வேண்டிய நூற்களிலுள்ள கருத்துக்களை வகுப்பினுட்படுத்தி யெடுத்து விளக்கியும், அவற்றின் இடையிடையே சமயோசிதமும் சாதுரியமுமாகிய பற்பல பழமொழிகளைச் சேர்த்தும், வாசிப்பவர்களுடைய நாவிற்கு நயமும், செவிக்கின்பமும், மனதிற்கு மகிழ்ச்சியும், அறிவுக்கு விருத்தியும், பொழுதுபோக்கற்கு உல்லாசமும் தரத்தக்க இனிய செந்தமிழ் வசன நடையில் அவ்விஷயங்களைத் தொகுத்து இயற்றியுள்ளார். அறிவை விருத்தி பண்ணக் கூடிய பல விஷயங்க ளடங்கிய சிறந்த நூலாகும். 416-பக்கங்கள் கொண்டது.

இதிலடங்கிய விஷயங்கள் :

1. தெய்வங்கொள்கை
2. கற்பு நிலைமை
3. கிதவாத்திய விநோதம்
4. கற்றுய்ந்தொழுகல்
5. பயனிலுழவு
6. மகா பண்டிதனைச் சிறு பிள்ளை வென்றது
7. காலபேத வியல்பு
8. நன்றி மறவாமை
9. கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி
10. கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது
11. ஒட்டக்கூத்தர் ஈட்டியெழு பது பாடியது
12. ஒட்டக்கூத்தர் சோழனுக்கு பெண் பேசியது
13. புகழேந்திப் புலவர் நள வெண்பா பாடியது
14. காலமேகப்புலவர் சரித்திரம்
15. ஏகம்பவாணன் சரித்திரம்
16. ஔவையார் சரித்திரம்
17. அவிவேக பூரணகுரு கதை
18. சிறுகூனன் கதை
19. பதிவிரதை சரித்திரம்
20. காளிதாசப்புலவர் சரித்திரம்

**கவனிப்பு:**—எம்மிடம் கிடைக்கக்கூடிய இதர தமிழ் புஸ்தகங்கள் விவர மடங்கிய விலைப்பட்டி தேவை யுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

---

கிடைக்குமிடம்:— **B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**
57, வெங்கட்ராமய்யர் தெரு, மின்ட் போஸ்ட், சென்னை-1.

# புத்தக விளம்பரம்

☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள் :—

| | ரூ. ந-பை. |
|---|---|
| ஸ்ரீ மஹா பாரதம் வசனம் 18-பர்வம், 4-வால்யம் படங்களுடன் | 30-00 |
| ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன் | 12-00 |
| ஸ்ரீமத் கந்தபுராண வசனம் 2-வால்யூம்; 42-படங்களுடன் | 12-00 |
| ஸ்ரீ மஹா பாகவதம் படங்களுடன் | 12-00 |
| ஆதிபர்வம் | 5-00 |
| ஸ்ரீமா பக்தவிஜயம் 6-தாசர்கள் அடங்கியது | 5-00 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் படங்களுடன் | 5-00 |
| விக்கிரமாதித்தன் கதை ,, | 4-00 |
| விராடபர்வம் ,, | 3-50 |
| தருமர் அஸ்வமேதயாகம் ,, | 1-50 |
| பஞ்சபாண்டவர் வனவாசம் ,, | 1-50 |
| மதனகாமராஜன் கதை ,, | 1-50 |
| அல்லியரசாணிமாலை ,, | 1-00 |
| அபிமன்னன் சுந்தரிமாலை ,, | 1-25 |
| வைகுந்த அம்மானை ,, | 1-25 |
| காத்தவராயசுவாமி கதை ,, | 1-50 |
| கிருஷ்ணன் தூது ,, | 0-75 |
| நளச்சக்கிரவர்த்தி கதை ,, | 1-25 |
| பவளக்கொடிமாலை ,, | 0-75 |
| ஆரவல்லி சூரவல்லி கதை ,, | 0-75 |
| புலந்திரன் களவு மாலை ,, | 0-75 |
| மரியாதைராமன் கதை ,, | 0-75 |
| கோவிலன் கதை ,, | 0-75 |
| சித்திராபுத்திரன் கதை ,, | 0-75 |
| மயிலிராவணன் கதை ,, | 0-75 |
| புரூரவச்சக்கிரவர்த்தி கதை ,, | 0-75 |
| கர்னமகாராஜன் சண்டை ,, | 0-50 |
| தேசிங்குராஜன் கதை ,, | 0-50 |
| பொன்னுருவிமசக்கை ,, | 0-50 |
| மதுரைவீரன் கதை ,, | 0-50 |

கிடைக்குமிடம்:— B. இரத்தின நாயகர் ஸன்ஸ், நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை-1